204

புதுமை

204
11 OCT 1957
MADRAS



JL
M211 N57PI
N57:1:1
197685

25 காசு

...MAI ஆகஸ்டு 15, 1957

விரைவில் வருகிறது
புத்தா பிக்சர்ஸ்
பதிபக்தி
தமிழ்
கதை, வசனம்
சோலைமலை
சங்கீதம்
விஸ்வநாதன்-ராமமூர்த்தி
டைரக்ஷன்
A. பீம்சிங்
பூரண உரிமையாளர்
S.K. பிக்சர்ஸ் திருநெல்வேலி
சென்னை-24

ஜாப் வேலைகள், புத்தகங்கள் (பள்ளிப் புத்தகங்களும்), பத்திரிகைகள், மற்றும் எல்லா விதமான அச்சுவேலைகளும் குறித்த நேரத்தில், குறைந்த சார்ஜில், நேர்த்தியாகச் செய்து கொடுக்கிறோம்.

★

1958-ம் வருட மூவர்ணப்படக் காலண்டர்கள், மாதாந்திர காலண்டர்கள், தினசரி காலண்டர்கள் ஆகியவை ஆர்டர்கள் பேரில் செய்துகொடுக்கப்படும். ஆபீஸ் காலண்டர்கள் விலைக்கும் கிடைக்கும்.

★

விபரங்களுக்கு :

போன் : 85778

மோகன் ராம் பிரஸ்,

283-A, திருவல்லிக்கேணி ஹைரோடு,

சென்னை—5.

உழவுக்கும் தொழிலுக்கும்



வந்தனை செய்வோம்

டி. வி. சுந்தரம் அய்யங்கார் & ஸன்ஸ்
பிரைவேட் லிட்.
மதுரை - திருச்சி - திருநெல்வேலி
புதுக்கோட்டை - சேலம் - கோயம்புத்தூர்

மதறாஸ் ஆட்டோ ஸர்வீஸ் பிரைவேட் லிட்.
மதறாஸ் - பெங்களூர்

ஸதர்ன் ரோட்வேஸ் பிரைவேட் லிட்.
மதுரை

சுந்தரம் மோட்டார்ஸ் பிரைவேட் லிட்.
மதறாஸ்-6

தி மதராஸ் மோட்டார் இன்ஷ்யூரன்ஸ்
கம்பெனி லிட்.
மதறாஸ்

சுந்தரம் இண்டஸ்ட்ரீஸ் பிரைவேட் லிட்.
புதுக்கோட்டை - மதறாஸ்

இந்தியா மோட்டார் பார்ட்ஸ் & ஆக்ஸஸரீஸ்
பிரைவேட் லிட்.
மதறாஸ்-2

சுந்தரம்ஸ் பிரைவேட் லிட்.
மதுரை

சுந்தரம் பைனான்ஸ் பிரைவேட் லிட்.
மதறாஸ்-2

டி.வி.எஸ்.
ஸ்தாபனங்கள்

TVS



பொருளடக்கம்

"மாற்றி வையம் புதுமை யுறச்செய்து
மனிதர் தம்மை அமரர்களாக்குவோம்"

மணி 1 | ஆகஸ்டு 15, 1957 | ஓசை 1

பக்கம்

வணக்கம் ... 3
கமிஷன் கவனிக்குமா? (தலையங்கம்) ... 4
யார் மறந்தாலும் நெல்லை மறக்காது ! ... 6
உலகைச்சுற்றி - செய்திக்கதிர் ... 9
ஈழநாட்டுத் தமிழ் மக்களின் முதல் வெற்றி ... 12
அழகு தந்த பரிசு —டானியல் ஏ லாட் ... 14
புதுமை பொலியட்டும் —S. D. சுந்தரம் ... 15
சுதந்திரப் பாதையில் ... 18
ஒத்தமரபு —கி. வா. ஜகந்நாதன் ... 25
முத்துவீராயீப் பாட்டு —S. D. S. யோகியார் ... 28
முன்னேற்றம் —'வேகி' ... 33
பழமையும் புதுமையும் —தே. ப. பெருமாள் ... 40
ஆசை நிறைவேறியது —பூவண்ணன் ... 41
நாடகம் பட்டபாடு —பி. எக்ஸ். ஆர். ... 46
கனவு தந்த காத[illegible]க் கண்ணன் ... 58
வாழ்க ! வா[illegible] புவை எஸ். ஆறுமுகம் ... 65
நண்பனின் [illegible]ம் —பால்வண்ணன் ... 73
இயற்கையும[illegible]வும்—சுவாமி ஆ.ஜோ.அ. ... 86
'புதுமைப் பி[illegible]' —விமர்சனம் ... 89
சுவர்க்கம் எங்கே
—தொ. மு. பாஸ்கரத[illegible]மான் ... 93

'புதுமை'யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.

போன் : **86729** நந்தி : **NEWTYPES**

எல்லாவிதமான அச்சு எழுத்துக்களையும்

சிறந்த முறையில் தயார்

செய்பவர்கள் :

நியூடன் டைப் பவுண்டரி

தமிழகத்தின் சிறந்த அச்சுக்கூடங்கள்,
பத்திரிகைகள் ஆகியவற்றிற்கு நாங்கள்
சப்ளை செய்கிறோம்.

197684

நியூடன் டைப் பவுண்டரி,

80, வாலாஜா ரோடு :: சென்னை-2.

Edited and Published by K. T. Kosalram and Printed by G. Rengiah, Manager, Mohan Ram Press, at 283-A, T. H. Road, Madras-5.

புதுமை

ஆசிரியர் :
கோசல்ராம்.

நிர்வாக ஆசிரியர் :
P. X. ரங்கசாமி, B.A.,

சென்னை — 15—8—57 — ஆகஸ்டு

வணக்கம்.

"ஓராயிரம் வருடம் ஓய்ந்து கிடந்த பின்னர் வாராது போல வந்த மாமணி" என விடுதலைக்கு விளக்கந் தந்தான் பாரதி.

அந்த மாமணியை, சுதந்திரப் பொன் நகையை, அன்னை மணிமுடியில் சூடி, அவள் அதரத்தில் புன்னகை பொலிய வேண்டும் என்ற கருத்தோடு, பொங்கி எழுந்து புரட்சிக் கொடியை இந்திய தேசபக்தர்கள் உயர்த்தி ஓர் நூற்றுண்டு மறைந்து விட்டது. அந்த அமரத் தியாகிகளின் நினைவை நெஞ்சில் இருத்த, இளந்தலைமுறையினர் விடுதலையின் உயர்வை உணரச் செய்ய விழா எடுக்கும் பொன்னுள் இன்னுள்.

அது மாத்திரமா? இந்திய வரலாற்றிலே ஏகாதிபத்தியத்தை எதிர்த்துக் கட்டபொம்மனும், மருது பாண்டியனும், வேலுத் தம்பியும், நானுசாஹேப்பும், ஜான்ஸி ராணியும், தாதியா தோபேயும் விதைத்த வித்தை முளைக்கச் செய்து, அடிமைத் தளையை அறுத்து விடுதலைபெற வீறிட்டெழுந்த சுபாஷ்போஸ், சத்திய மூர்த்தி, வாஞ்சி, வ. வே. சு. ஐயர், வ. உ.சி, திருப்பூர் குமரன் போன்ற மாவீரர்களின் கனவையும் காந்தியின் தலைமையிலே காங்கிரஸ் நனவாக்கிய நன்னுள். இன்று பாரத அன்னை, சுதந்திர மாமணியைச் சூடிய பத்தாம் ஆண்டு நாள்,

இந்தப் புனிதத் திருநாளிலே, செந்நீரும், கண்ணீரும் சிந்தி, சிறைச்சாலையை அறச்சாலையாக எண்ணி மகிழ்ந்து, தூக்குக் கயிற்றைத் துச்சமாக நினைத்து முத்தமிட்டு, தம் உடல், பொருள், ஆவியை நாட்டின் நற்பணிக்கு ஈந்த நல்லோர்கள் நினைவுக்கு அஞ்சலி செய்ய, அந்த உத்தமர்கள் தொடங்கிய பணியைத் தொடர்ந்து நடத்தும் ஓர் உறுப்பாக, புரட்சிக் கருத்துக்கள் பூத்துக் குலுங்கப் போகும் 'புதுமை' தமிழர்களின் கரங்களில் தவழ அனுப்புகின்ருேம். 'புதுமை'

இதழ், தமிழர்களுக்கு முற்றிலும் புதுமையான பத்திரிகை அல்ல. குறுகிய காலத்திலே, சில இதழ்களிலேயே நேயர்களின் இதயத்தைக் குளிர்விக்கச் செய்த 'புதுமை' அரசியல் வானில் தோன்றிய புயல்களால் பாதிக்கப்பட்டது. ஆனால், இன்று மீண்டும், முகில் கிழித்து எழும் முழுநிலவொளியென, அணை கடந்து வரும் ஆற்றின் புனலென, இன்னல்கள் பல கடந்து புன்னகையோடு வருகின்றது புத்துணர்ச்சியூட்ட.

அன்று போல் இன்றும் நேயர்கள் நேசக் கரம் நீட்டுவார்கள் என உறுதியுடன் நம்புகின்றோம். வணக்கம்.

ஆசிரியர்.

கமிஷன் கவனிக்குமா?

தலைவலி தீர்ந்தது ; தனிமனிதர் யாருக்கும் வந்த தலைவலி அல்ல ; ஆனால் தேசத்திற்கே வந்த நோய். நல்ல வேளையாக, அது முற்றுவதற்கு முன்பாக ஒழிந்தது.

தபால், தந்தி, மற்றும் மத்திய அரசாங்க அலுவலக ஊழியர்கள் செய்ய உத்தேசித்திருந்த வேலை நிறுத்தத்தையே 'தேசத்தின் தலைவலி' என்று குறிப்பிடுகிறோம்.

அரசியல் தலைவர்கள் முகம் மலர்ந்து விட்டது ; பொது மக்கள் பெருமூச்சுடன் நிம்மதியடைந்துள்ளார்கள். ஆனால் விளைவுகள்......... ?

வேலை நிறுத்தம் என்ற பயங்கர ஆயுதத்தைத் தீட்டி விட்டார்கள்; கூர்மைதான் பரிசோதனை செய்யப்படவில்லையே ஒழிய அதைப் பட்டை பிடிக்கச் செலவழித்த சக்தியாலும், அதற்கு மாற்று மருந்தாக அரசாங்கம் வெளியிட்ட அவசரச் சட்டத்தாலும், ஊழியர்கள் உள்ளம் உடைந்து காணப்படுகிறார்கள். ஆனால் நம் பாரதப் பிரதமர் அளித்திருக்கும் வாக்குறுதி தவறான பாதையில் செல்ல நினைத்த அவர்களுக்கு ஆறுதல் அளிக்கக் கூடியதாக இருக்கின்றது.

ஊதிய உயர்வு தரப்படுவதை ஒரு போதும் நாம் எதிர்க்க மாட்டோம். ஆனால் அதற்காக பலப்பரீட்சையில் ஈடுபட நினைத்த பரிதாபத்தைக் கண்டிக்கவும் தயங்கமாட்டோம். நல்ல வேளையாக, கடைசி நிமிடத்திலாவது வேலை நிறுத்தம் வேண்டா மென்றார்களே என்று எண்ணி ஆறுதல் அடையும் நேரத்திலே, எதிர்காலம் என்ன, எப்படியிருக்கும், என்ற வினாவும் பிறக்கின்றது. இத்தகைய தேசீயப் பிரச்சனைகளில் நெருக்கடி நேரங்களில் பொதுமக்களின் கருத்தை உருவாக்க முற்படாத பத்திரிகை, பத்திரிகையல்ல. ஆகையால் தான் 'புதுமை' கேட்கின்றது, "இனி என்ன ?" என்று.

சம்பளக் கமிஷன் நியமித்துவிட்டார்கள் என்று பொது மக்கள் பொறுப்பைக் கழித்துவிட முடியாது. பரந்தஅடிப்படையிலே தேசீயப் பொருளாதாரம், விலை உயர்வுகள், மத்திய சர்க்காரின் ஊழியர் குறைகள் ஆகிய எல்லாப் பிரச்சனைகளையும் விரிவாக ஆராயும் இந்த சம்பளக் கமிஷன், இராஜ்ய சர்க்கார் ஊழியர்களின் ஜீவாதாரப் பிரச்சனையை ஏன் கவனிக்கக் கூடாது என்ற தங்கள் கருத்தை ஆணித்தரமாக வெளியிட்டாக வேண்டும். வேலை நிறுத்தத்தை எவ்வாறு கண்டித்தார்களோ அதே முறையிலே, அதே குரலிலே, ஊழியர்களின் உண்மையான குறைகளை அரசாங்கத்திற்கு எட்டவைக்க வேண்டும். அது மட்டுமல்ல, நாம் வேண்டுவது, வேலை நிறுத்த மிரட்டலால், உரிமை பெற நினைக்காத, இராஜ்ய கெஜட் பதி வில்லாத ஊழியர்கள், ஸ்தல ஸ்தாபன ஊழியர்கள், ஏழை போலீஸ்காரர்கள், வறுமையில் வாடும் ஆசிரியர்கள் ஆகியோருடைய பிரச்சனையையும் சம்பளக் கமிஷன் கவனிக்க வேண்டும் என்ற குரல், பொதுமக்களிடம் இருந்து எதிரொலிக்க வேண்டும். ஒரேவித வேலைகளுக்கு மத்திய சர்க்கார் ஊழியரும், இராஜ்ய சர்க்கார் ஊழியரும் வெவ்வேறு ஊதியம் பெறுவது அநீதி என்ற குரல் முழங்க வேண்டும். சம்பளக் கமிஷனின் வேலைகளில் இராஜ்ய சர்க்கார் ஊழியர்களின் ஊதிய உயர்வு பிரச்சனையும் சேர்க்காமல் விட்டது தவறு என்று மக்கள் கண்டிக்க வேண்டும். அதோடு உடனே இக் கோரிக்கையையும் கமிஷனின் உடனடியான விசாரணைக்கு எடுத்துக்கொள்ள சர்க்காரை வற்புறுத்த வேண்டும் என்று 'புதுமை' கூறுகின்றது. கெஜட்பதிவில்லா ஊழியர்கள் சார்பிலே பொதுமக்கள் குரல் கொடுப்பது பொருத்தமானது. அதுதான் இந்தப் பிரச்னையைத் தீர்க்கச் சரியானவழி.

குறிப்பு : மத்திய சர்க்கார் ஊழியர்களுக்கும், மாகாண சர்க்கார் ஊழியர்களுக்கும் உள்ள வேறுபாடுகளையும், வாழ்க்கைத்தர உயர்வு தாழ்வு, முறைகளையும் பற்றி அடுத்த இதழில் சரியான புள்ளி விவரங்களுடன் விளக்கம் தரப்படும்.

ஆ. ர்.

யார் மறந்தாலும் நெல்லை மறக்காது!

திருநெல்வேலிச் சீமை வீரத்திற்கும் தியாகத்திற்கும் பேர் போனது. வெள்ளையர்களின் ஆதிக்கத்துக்கு விரோதமாக முதல் முழக்கம் கேட்டது இங்கு தான். அவர்களுக்கு விரோதமாகக் கப்பலோட்டிய தமிழன் அவதரித்ததும் இங்கே தான். ஆங்கில அரசாங்க வர்க்கமே அதிர்ச்சியடையும் படி ஆவேசங் கொண்ட வாஞ்சி ஐயர் திருநெல்வேலிச் சீமையில் உதித்தவரே. நாட்டில் புரட்சிக் கருத்துக்களைப் பரப்ப நினைத்து பார்-அட்-லா பட்டத்தினால் கிடைக்கக்கூடிய ஊதியத்தை உதறித் தள்ளி விட்டு மக்கள் மக்களாக வாழ வழி வகுக்க விரும்பிய உத்தம ஊழியன் வ. வே. சு. ஐயர் அவர்களின் சேவை திருநெல்வேலிக்குத் தான் கிடைத்தது.

'நன்றி மறப்பது நன்றன்று. அதிலும் நாட்டின் நலனுக்குப் பாடுபட்ட மாபெரும் தியாகிகளை மறப்பது பெரும் பாதகம். நாம் சுதந்திரமடைந்து பத்து ஆண்டுகள் போய்விட்டன.



கட்டபொம்மன்



"காணி நிலம் வேண்டும்" என்று கேட்ட பாரதி மணி மண்டபத்தில் நிலமில்லாதாருக்கு நிலம் வழங்கப்படுகிறது. ஆசிரியர் தலைமை தாங்கிப் பேசுகிறார்.

புரட்சிக்காரனென்று சிறையில் தள்ளப்பட்டு, அங்கு செக்கிழுத்து, கல்லுடைத்து, சட்டியில், கறியின்றிகழியுண்டு நம் வாழ்வு நலம் பெற நலிவுற்ற செம்மல் வ. உ. சிதம்பரனார் அவதரித்த ஓட்டப் பிடாரம் என்ற ஊரில் அன்னாருக்கு நினைவுச் சின்னம் எழுப்பும் அடிகோல் விழாவை நமது முதலமைச்சர் கே. காமராஜ் அவர்கள் சிறப்பான முறையில் செய்து முடித்தார்கள்.

நாட்டின் விடுதலையே தன் மூச்சாகக் கொண்டு அதற்காக ஒரு கொலையல்ல, ஒன்பது கொலை கூடச்செய்ய அவசியம் ஏற்பட்டால் செய்துதான் ஆக வேண்டும் என்ற புரட்சிக் கருத்துக்கு அடிமையான வீரன் வாஞ்சி ஐயர், திருநெல்வேலி கலெக்டர் ஆஷ் துரையைச் சுட்டுக் கொன்றதுமன்றி தன்னையே சுட்டு மாய்த்துக் கொண்ட வரலாறு இன்று கொடூரமாகக் கருதப் படலாம். ஆனால் அன்றைய சூழ்நிலை என்ன? மேலோர்கள் வெஞ்சிறையில் வீழ்ந்துகிடந்தார்கள். நூலோர்கள் செக்கடியில் நொந்து நொறுங்கினார்கள்.

இத்தகைய வாஞ்சிக்கு காட்டவேண்டிய கடமை உணர்ச்சியை அரசாங்

கம் காட்டத் தவறிற்று. ஆனல் செங்கோட்டை மக்கள் தவற வில்லை. அன்று இதுபோன்று குண்டு வீசிய வழக்கிலே தண்டனையடைந்து இன்று முதல் அமைச்சராக இருக்கும் திரு. காமராஜ் அவர்களைக் கொண்டே ஞாபகச் சின்னத் துக்கு அடிகோல் விழாவை நடத்தினர்கள்.

இதேபோல் வ. வே. சு. அய்யர் அவர்களின் நினைவுச் சின்னம் பொதிகை மலைச் சாரலில் அன்னர் மரித்த இடத்திலேயே கட்ட ஏற்பாடு செய்து, அவ்விடத்திலும் அடி கோல் விழாவை முதலமைச் சர் திரு. காமராஜ் அவர்களே நடத்தி வைத்தார்கள். அது மட்டுமா? நமது தேசத்தில் அங்கோர் வீராங்கனை லக்ஷ்மி பாய்! இங்கோர் வீரன் கட்ட பொம்மன்! வீரன் கட்டபொம் மன் அரசாங்கத்தாரால் புறக் கணிக்கப்பட்டிருந்த போதிலும் அவனை வெள்ளை ஏகாதிபத்தி யம் தூக்கிலிட்ட இடத்தில் பொதுமக்கள் கற்களை மலை போல் குவித்திருக்கின்றனர்.

நெல்லையில் இந்தியா சிமின்ட் தொழிற்சாலை அதிபர்கள், நெல்லை யில் தொழில் நுணுக்கப்பள்ளி இல்லாத குறையைப் போக்க, ஒரே நாளில் மூன்றே முக்கால் லட்சம் ரூபாய் கொடுக்க முன் வந்து, அதற்கான வேலைகளை ஆரம்பிக்கத் தயாராயிருக்கி ருர். அத்தகைய பெருந்தகை யாளர்கள் வீரன் கட்டபொம்ம னுக்கு, அவன் தூக்கிலிடப் பட்ட இடத்தில் ஸ்தூபி யொன்று எழுப்பவும், அதன் அருகில், நெல்லை—கோவில் பட்டி ரஸ்தாவில் கோட்டை போன்ற வளைவு ஒன்று நிறுவ வும் முன்வந்திருப்பது கேட்டு மகிழ்கின்ருேம்; பெருமை கொள்கின்ருேம். இவ்வாறு யார் மறந்தாலும் நெல்லை மக்கள், முதல் முழக் கம் செய்த தம் வீரனுக்கு மறக் காமல் செய்ய முன் வந்திருக் கும் இந்தநற்பணியில்'புதுமை' யும் ஈடுபட்டுத் தன் பங்கை யும் நிச்சயம் செய்யும் என் பதை தெரிவித்துக் கொள் கிருேம்.

தேன் துளிகள்.

உலகம் பொருளற்ற பழக் கங்களை உண்டாக்குவது மில்லை, கடைப்பிடிப்பது மில்லை. ஆனல் மனிதன் தான் மனிதனை ஏமாற்று வதற்காக அதன் பெயரைச் சொல்லி அவைகளை உண் டாக்கவும் கடைப் பிடிக்கவும் செய்கிருன்.

—மெல்ட்டன்

குழந்தைக்கும் உலகத்திற் கும் அதிக வேறுபாடு கிடை யாது.

—ருஸோ

உலகைச்சுற்றி

நாசரைக் கொல்ல சதி செய்ததாக வழக்கு விசாரணை ஆரம்பம்

பிராசிக்யூட்டர் விளக்கம்

கெய்ரோ, ஆக — 13 எகிப்து அதிபர் நாசரைக் கொல்லவும், அவரது ஆட்சியைக் கவிழ்க்கவும் சதி செய்ததாக கைது செய்யப்பட்ட 12 பேர்களின் வழக்கு விசாரணை நேற்று எகிப்து சுப்ரீம் ராணுவ கோர்ட்டில்ஆரம்பமாயிற்றுஇந்த வழக்கு விவரத்தை எடுத்துக் கூறிய சர்க்கார் வக்கில் சதித் திட்டம் வெற்றி பெற்றிருந்தால் இந்த எதிரிகள் ஒவ்வொருவரும் 10,000 பவுன் பெற்றிருப்பரென்றும் நாட்டை ஆள ஆசை கொண்டுள்ள அரசியல் வாதிகள் அல்லது பெரும் அதிகாரம் பெற பேராசைகொண்ட ராணுவ அதிகாரிகள் இவர்கள் என்றும் தெரிவித்தார்.

பிராசிக்யூஷன் தரப்பு சாட்சி அகமத் காத்ரி கூறிய சாட்சியத்தில், இந்த சதி எகிப்துக்கு விரோதமான ஒரு அமெரிக்க ஏகாதிபத்திய சதி என்று சொன்னார்.

ஃ ஃ ஃ

ஜப்பான் அருகில் ரஷ்ய பிரங்கி கர்ஜனை

டோக்கியோ ஆக. 3-வட ஜப்பானுக்கு அருகிலுள்ள குனிஷி தீவிலிருந்து ரஷ்ய பீரங்கி வரிசைகள் "கடலில் உள்ள ஏதோ ஒன்றை" நோக்கிச் சுட்டன. அடையாளம் தெரியாத விமானங்கள் வட்டமிட்டன. இது ஒத்திகையா அல்லது உண்மையான இலக்கை நோக்கிச் சுட்டனவா வென்று தெரியவில்லை என ஜப்பான் தற்காப்பு போர்டு அதிகாரிகள் கூறினர். யு. எஸ். விமானம் ஏதும் காணுமற் போகவில்லை என்று யு. எஸ். அதிகாரி கூறினார்.

செய்திக்கதிர்

பத்திரிகை நிருபர்களுக்கு பஸ்களில் சலுகை

பம்பாய் கார்ப்பரேஷன் மெம்பர் பிரேரணை

பம்பாய், ஆக. 3—பம்பாய் பஸ்களில் பத்திரிகை நிருபர்கள் "க்யூ"வில் நிற்காமலே ஏறிக் கொள்வதற்கான "சலுகைச் சீட்டு" வழங்கவேண்டுமென்று பம்பாய் கார்ப்பரேஷனில் ஸ்ரீ அப்பா பெண்ஸே ஒரு தீர்மானம் கொண்டு வருவதாக இருக்கிறார். நிருபர்களுக்கு "பாஸ்" வழங்கப்படும். அவர்கள் காத்திருக்காமலே கட்டணம் செலுத்தி பஸ்களில் ஏறிக் கொள்ளலாம்.

மலேயா விடுதலை

கோலாலம்பூர், ஆக. 5— மலேயாவுக்குச் சுதந்திரம் வழங்கும் ஒப்பந்தம் இன்று இங்கு கையெழுத்தாயிற்று. ஆகஸ்டு 31-உ முதல் மலேயா ஒரு சுதந்திர நாடாகும்.

அந்த ஒப்பந்தத்தின்படி பினங், மலாக்கா மீதும் ஆதிபத்ய உரிமையை பிரிட்டன் கைவிடுகிறது. 1948 மலேயா பெடரேஷன் ஒப்பந்தமும், பிரிட்டிஷ் சர்க்காருடன் உள்ள முந்திய எல்லா ஒப்பந்தங்களும் ரத்தாகின்றன.

மலேயாவிலுள்ள பிரிட்டிஷ் ஹைகமிஷனர் செர்டொனல் டுமாக்கில்வரும் மலேயா மாகாணங்களின் அரசர்களும் சரித்திர முக்கிய நிகழ்ச்சியான அந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். பிரிட்டிஷ் ஹைகமிஷனரின் மாளிகையில் நடைபெற்றது.

∴ ∴ ∴

மதுரையில் இன்ஜினீயரிங் கல்லூரி : டில்லி அனுமதி

சென்னை ஆக. 5— மதுரையில் தியாகராஜர் தர்ம ஸ்தாபனம் நிறுவும் இன்ஜினீயரிங் கல்லூரிக்கு இந்திய சர்க்கார் அங்கீகாரம் அளித்துள்ளனர். 120 மாணவர் சேர்த்துக் கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

நடப்புக் கல்வி ஆண்டில் 50 மாணவர்களுடன்மதுரைக் கல்லூரியில் தொழில் கல்லூரிப் பூர்வாங்க (ப்ரீ-புரபஷனல்) வகுப்பு ஆரம்பிக்க தியாகராஜர் தர்ம ஸ்தாபனம் சர்வகலாசாலையின் இணைப்பைப் பெற்றுள்ளது.

தேவதாஸ் காந்தியின் மறைவு

மகாத்மா காந்திஜியின் கடைசி குமாரர் திரு. தேவதாஸ் காந்தி அவர்கள் இருதய நோயால் திடீரென்று மறைந்த செய்தி கேட்டு இந்திய நாடே ஆழ்ந்த துக்கத்தில் மூழ்கிவிட்டது.

தேவதாஸ் காந்தி, நாட்டு மக்களுக்கும் பத்திரிகையுலகிற்கும் செய்த பணி அதிகம். அவர் பிரிவு பொது மக்களுக்கும் பத்திரிகை உலகிற்கும் பெருத்த நஷ்டமாகும்.

22—5—1900 அன்று தோன்றி 3—8—57 அன்று மறைந்தார். அவரைப் பிரிந்து வாடும் குடும்பத்தினருக்கு நம் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அடிமைச் சின்னம் அகற்றப்பட்டது

சென்னை, ஆக — 14 சுதந்திரப் போராட்ட நூற்றுண்டு விழாவை முன்னிட்டு நகரில் ஜிம்கானு கிளப்புக்கு அருகில் உள்ள லார்டு வெல்லிங்டன் சிலையை அகற்ற வேண்டும் என்ற மத்திய அரசாங்கத்தின் உத்தரவு இன்று இரவு நிறைவேற்றப்பட்டது.

இன்று இரவு 7-30 மணிக்கு பாரம் தூக்கி (கிரேன்) சகிதம் வந்து, சென்னை அரசாங்க ஊழியர்கள் சிலையை அகற்றுவதில் ஈடுபட்டனர். சுமார் மூன்று மணிநேர உழைப்புக்குப் பின் லார்டு வெல்லிங்டன் சிலை அகற்றப்பட்டு மியூசியத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது.

∴ ∴ ∴

கேரள கல்வி மசோதா

சட்டசபைமுன் கிளர்ச்சி நடத்த முடிவு

திருச்சூர், ஆக — 12 கேரள கல்வி மசோதாவை விவாதிக்க இந்த மாத இறுதியில் ராஜ்ய சட்டசபை கூடும்போது சட்டசபைக்கு முன்னுல் பெரும் ஆர்ப்பாட்டத்தைநடத்த கம்யூனிஸ்டு எதிர்ப்பு முன்னணியின் மத்திய கமிட்டி முடிவு செய்திருப்பதாக இந்த அணியின் தலைவர் பாதர் வடக்கன் குறிப்பிட்டார். காங்கிரஸ் பிரஜா சோஷலிஸ்டு இன்னும் சமூக கலாசார ஸ்தாபனங்களைச் சேர்ந்த சுமார் ஒரு லட்சம் தொண்டர்கள் இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவார்கள் என்றும் கூறினர்.

∴ ∴ ∴

சென்னையில் 3000 கைதிகள் விடுதலையாவர்

சென்னை, ஆக — 12 சுதந்திரப் போர் துவங்கியதின் நூற்றுண்டு விழாவையொட்டி ராஜ்யத்தில் உள்ள கைதிகளின் தண்டனைக் காலம் குறைக்கப்படுகிறது.

இதன் மூலம் 10 ஆண்டுகள்வரை சிறைத் தண்டனை பெற்றவர்களின் தண்டனைக் காலம் ஒரு வருடம் முதல் 2 மாதம் வரை குறைக்கப்பட்டுள்ளதால் சுமார் 3,000 கைதிகள் சிறைகளிலிருந்து விடுதலை பெற்று வெளிவருகின்றனர்.

இம் மாதம் 15, 16_தேதிகளில் தூக்குத் தண்டனைகள் நிறைவேற்றப்படமாட்டா. அத்தினங்களில் நிறைவேற்றப்பட வேண்டிய தூக்கு தண்டனைகள் வேறு நாட்களுக்கு ஒத்திப்போடப்படும்.

சிறைத் தண்டனைக் கால குறைப்பினுல் அரசியல் கைதிகளுக்கும், ராணுவ கோர்ட்டுகளினுல் அளிக்கப்பட்ட தண்டனையை அனுபவித்து வருபவர்களுக்கும் பயன் எதுவுமில்லை. அவர்கள் முழு தண்டனையையும் அனுபவிக்க வேண்டும்.

∴ ∴ ∴

கம்யூனிஸ சர்க்காரில் வேலை நிறுத்தம் சட்டவிரோதம்

திருவனந்தபுரத்திலுள்ள கேரள சர்க்காருக்குச் சொந்தமான ரப்பர்த் தொழிற்சாலையில் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்வது சட்டவிரோதமென கேரள கம்யூனிஸ அரசாங்கம் அறிவிக்கிறது.

ஈழ நாட்டுத் தமிழ் மக்களின் முதல் வெற்றி

ஈழ நாட்டை இன்பம்கொழிக்கும் நாடாகச் செய்தவர்கள் தமிழர்கள். அத்தகைய நல்லவர்களின் மனம் புண்பட்டிருந்தது. அதற்குக் காரணம் இல்லாமலில்லை. ஒன்று ஈழநாட்டின் ஆட்சிபீடம் செய்த அடாத செயல்கள்; அடுத்தது இலங்கைத் தமிழரின் ஜீவாதார உரிமைக்காகப் போராடிய தலைவர்களான திரு. தொண்டைமான், திரு. அஜீஸ் ஆகியோர் தனித் தனியே பிரிந்து வேலை செய்தது. இந்த நிலைமைதான் அரசாங்கத்திற்கு வெற்றி தந்து, தமிழ் மக்களின் மனதைப் புண்படுத்தியது.

இந்த நிலைமையை அதிக நாள் நீடிக்க விடாமல் நல்ல வேளையாக அந்த இரு தலைவர்களும் மக்கள் நலனுக்காக, நாங்கள் பிரிந்திருக்க மாட்டோம் என்று சென்ற மாத இறுதியில் மட்டக்களப்பில் நடைபெற்ற மாநாட்டில் ஒன்று சேர்ந்தனர். இதைத்தான் நாம் மக்கள் வெற்றி என்கிறோம்.

தமிழ் மொழி பாதுகாக்கப்பட்டது, நமக்கு மகிழ்ச்சிக் குரிய செய்தியே!

இருந்தாலும் சிங்களத்தைச் சிங்காரபுரியாக்கிய-செல்வம் கொழிக்கும் திருநாடாக்கிய தமிழனின் ஜீவாதார உரிமை பறிபோகும் போது அதைச் சகித்துக் கொண்டு அமைதியாக எந்த இலங்கைத் தமிழனும் ஓய்ந்திருக்க முடியாது.

இன்றைய இலங்கைப் பிரதமர் திரு. பண்டாரநாயகாவைப் பாராட்டாமல் இருக்கமுடியாது. ஏனென்றால், இதற்கு முன் இருந்த பிரதமர்கள் திரு. டட்லி சேனநாயகா உள்பட உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் இயல்பினராய் இருந்தனர். ஆனால் திரு. பண்டாரநாயகாவிடம் தனக்குத் தவறு என்று உணர்ந்த பின் தன்னைத் திருத்திக் கொள்ளும் பண்பும் இருப்பது பாராட்டத் தகுந்தது. தமிழன் ஒருவன் இருக்கும் வரையில் ஓயமாட்டேன் என்று சொன்னார் அன்று. இன்று தமிழர் தம் போராட்டத்தின் உண்மையை உணர்ந்து தன்னைத் திருத்திக் கொண்டார். தமிழ் மொழியைப் பாதுகாக்கச் செவி சாய்த்திருக்கிறார். அதற்கு மட்டுமல்ல, நாம் பாராட்டுவது. அந் நாட்டில் வசிக்கின்ற இந்தியனுக்கும் ஆங்கிலேயனுக்கும் உள்ள வித்தியாசமான, சட்டங்களை ஆங்கிலேயருக்கு இருந்த தனிச் சலுகைகளைக் கொஞ்சம் கொஞ்சமாக மட்டம் தட்டிக் கொண்டு வருவதையும், ஆசியாவின் தனிப் பெருந் தலைவரான நமது பிரதமர் நேருஜியின் கொள்கைகளை நூற்றுக்கு நூறு ஒப்புதல் செய்து, உலகத்தில் ஏகாதிபத்திய எண்ணத்திற்கு இடமில்லாமல், நேருஜியின் கரங்களுக்குப் பல மூட்டியதற்காகவும் இந்தியனின் ஜீவாதார

உரிமை போராட்டத்தில் டட்லி சேனநாயகா போன்று பாரத பிரதமரிடம் சொல்லொன்று, செய்கை ஒன்று என்று காட்டியது போலில்லாமல் நேருவின் நேர்மையான வேண்டுகோளை நிறைவேற்றுவார் என்ற நம்பிக்கையுடன் பாராட்டுகிறோம்.

மேலும், இலங்கை வாழ் சிங்களவர்களுக்கு ஒன்று சொல்ல விரும்புகிறோம். இரு பிரதமர்களும் ஏகாதிபத்தியத்திற்கு நேர் எதிரிகள். ஆகவே இந்தியனுக்குப் பிரஜா உரிமை கொடுப்பதினால் ஏதோ நடந்துவிடும் என்று பயப்படுவதற்குக் காரணமே கிடையாது. டட்லி சேனநாயகா போன்றவர்கள் இழந்த பதவியை மீண்டும்பெற வீண் கூச்சலிடுகின்றனர். தஅனால் எந்தப் பயனும் ஏற்படப் போவதில்லை. ஆகவே "இலங்கையைத் தாயகமாக கொண்டுள்ள தமிழரனைவருக்கும் பிரஜா உரிமை கிடைத்துவிட்டது" என்ற நற்செய்தியை கேட்கும் காலத்தை மிக விரைவில் எதிர் பார்ப்போம் என்ற நம்பிக்கை நமக்குண்டு.

x x x

'வாய்வு சூரணம்'

உஷ்ண வாய்வு, முழங்கால் வாய்வு, இடுப்பு வாய்வு, பித்த வாய்வு, மலக்கட்டு, மலபந்தம், அஜீரணம், புளியேப்பம், கை கால் அசதி, பசியின்மை, செரியாமை, வயிற்றுவலி, பித்தமயக்கம், பித்தசூலை, சோம்பல் முதலான வாய்வு ரோகங்களை அறவே நீக்கி நல்ல பசி எடுப்பதற்கும், தேகாரோக்கியத்துக்கும் மிகச் சிறந்த சூரணம். மூலிகைகளினால் தயாரிக்கப்பெற்றது. (பத்திய மில்லை)

5 பலம் டின் ரூ. 3-0-0

தேவைக்கு :—

சம்பு இண்டஸ்ட்ரீஸ்

சேலம்-2 (S. R.)

பொன்னையா சுவாமி துணை.

TRADE MARK

Regd. No. 161859

மதுரை நாடார் கடை

M. N. P.

லிங்க மார்க்

சுருட்டுகள்

M. N. P. லிங்க மார்க் பட்டணம் பொடி, துன்டு, நைஸ், சிவபுரிபாளை தயாரிப்புகளை உபயோகித்து இன்புறுங்கள்.

M.N.P.N. & M.N.P.T.

மதுரை.

அழகு தந்த பரிசு

[டானியேல் ஏ லாட்]

ஒரு விருந்து வைபவத்தில் அவன் அவளைச்சந்தித்தான். அவள் அழகு, அவன் கண்களைப் பறித்தது. ஒரு நண்பர் மூலமாக அவளுக்கு அவன் அறிமுகமானான். அவள் பனிப் பார்வையில், கனி இதழ் உதிர் சிரிப்பில் அவன் சொக்கிப் போனான்.

"நாம் கரம் கோர்த்து நடனம் ஆடலாமா?" என்று அவளை ஏக்கத்துடன் பார்த்துக் கேட்டான். "ஆடுவோம்" என்று மாயப் புன்னகை வீசி எழுந்துஅவள் கரம் பிடித்தாள். இருவரும் எழுந்து ஓடினார்கள். அவன் உணர்ச்சிப் போதையுடன் ஆடினான். "நாம் பொறுத்தமுள்ள ஜோடிகள்" என்றான் அவன்.

"இதில் சந்தேகமா, தேனே?" என்றாள் அவள்.

"இந்த உலகிலேயே எனக்காக பூத்த தெய்வீக மலர் நீ" என்றான்.

"அப்படியா?" என்று குறும்புப் பார்வை சுடக்கினாள் அவள்.

"இசைக்கு ஏற்ப நம் நடனம் எப்படி?

"நம் இதயத் துடிப்பின் மர்ம நாதத்தைக் கேட்டீர்களோ?"

"சினிமா நடிகர் டேவிட் காப்பர் பீல்டை உனக்குத் தெரியுமா?"

"உங்களைப் பற்றி பேசுங்கள் அன்பே"

"மூஸாதாகின் நாற்பது நாட்கள் என்ற கவிதை நூலை நீ படித்திருக்கிறாயா?"

"உங்கள் கற்கண்டுக் கண்கள் கவிதை பேசும் சுவையை விடவா, அதைப் படிப்பதில் அனுபவிக்க முடியும்?"

"உன் தந்தக் கட்டுடலைத் தழுவத் தழுவ எனக்கு......"

அக்கம் பக்கத்தில் நம்மைப்போல, ஆடுகிறார்கள், பொல்லாக் குறும்புக் காரர். இதைச் சொல்ல உங்களுக்கு வெட்கமாக இல்லை..."

"யார் நம் அருகில் இருந்தாலென்ன? நாம் குழந்தைகள் தானே?

"உங்கள் அமுத வார்த்தைகள் என் நெஞ்சில் தேனைப் பாய்ச்சி, அன்பே..."

"என் எழில் தங்கமே!"

அவர்களின் தன்னை மறந்த ஆட்டம் முடிந்தது. மற்றவர்களைப் போல அவர்களும் ஆசனத்தில் வந்து அமர்ந்தனர். திடீரென்று யாரோ ஒருவன் வந்து அவளை அழைத்தான்.

அவனிடம் "இதோ வருகிறேன்" என்று கூறி லாவகமாக அவன் மீது சாய்ந்து நெளிந்து எழுந்து வந்தவனுடன் ஓடி மறைந்தாள். அவள் போன பாதையைப் பார்த்து நீண்ட பெருமூச்சு விட்ட அவன், தன் கோட்டுப் பையில் கையை விட்டுப் பார்த்தான். திடீரென்று கத்திக் குத்து வாங்கினவன் போல் அலறிக் கூட்டத்தை சேர்த்து விட்டான். அன்று அவன் வாங்கிய சம்பளத் தொகை பையிலிருந்து அபேசாகியிருந்தது. அவன் ஐந்து குழந்தைகளுக்குத் தகப்பன்!

★

புதுமை பொலியட்டும்

எஸ். டி. சுந்தரம்

நேற்று பழமை - இன்று புதுமை...கடந்த காலம் பழமை யானது, நிகழ்காலம் புதுமை யானது! வருங்காலம் அதை விடப் புதுமையானது...

இந்த உலகம் ஒவ்வொரு கணத்திலும், கண்ணால் கண்டறிய முடியாத புத்தம் புது நுட்பமான மாற்றங்களை அடைந்து கொண்டே இருக்கிறது - இது இயற்கையின் இயல்பான வேலை.

புதுமைப் புரட்சியின் பேரியக்கத்துக்கு முடிவே கிடையாது. அது முடியாத பயணமாய், முற்றுப்பெருத காவியமாய், இறுதியற்ற பாதையாய் நீண்டு நிகழ்ந்து கொண்டே இருக்கிறது.

இந்தப் புதுமை யாத்திரையில் விண்கோள்களும் மண்ணுருண்டையும், சுழலும் மின்மினிச் சக்திகளும் சூரிய சந்திர தாரகைகளும் வேகமாக இயங்கிக் கொண்டே இருக்கின்றன.

இடையிடின்றிப் பெருகும் இந்த இயக்கப் போரிலே மனித இனமும் தன்னை மிக மிகப் பெரிதென்று எண்ணி ஏதேதோப் புதுமை வித்தைகளைச் செய்ய முற்படுகிறது.

இது விஞ்ஞான உலகம். விஞ்ஞானத்தின் வல்லமையால் விளையும் ஆராய்ச்சிகளின் பயனைத்தான் மனித இனம் தனது புதுமைக் கணக்கில் வரவு வைக்கிறது. மற்றவை யெல்லாம் பழமை என்று கழித்து விடுகிறது. அலட்சியப் படுத்துகிறது. ஒதுக்கி விடுகிறது.

ஆனால் நாம் அலட்சியமாக ஒதுக்கி யெறிந்த கழிவுப் பொருள்கள் தான் புதுமைப் பயிர்களுக்குரிய உரமாக, உணவாக உற்பத்திக் கருவின் உயிர்ச்சத்தாக பயன்படும் என்ற அடிப்படையான விஞ்ஞான உண்மையை ஆவேசத்தால் மறந்தே போகிறோம்—.

நீர் பழையது. நீராவி புதியது...ஆனால் நீராவி மறுபடியும் மழை நீராகிப் பழைய உருவத்தையே அடைந்து விடுகின்றது!

இறக்கும் மனிதன் பழையவன் - பிறக்கும் குழந்தை புதியது என்கிறோம் - ஆனல் இறந்த மனிதனது கருத்துக்களில் தான் புதிய உயிர் தனது வாழ்வை அமைத்துக் கொள்கிறது—!...

விதை பழையது - முளை புதியது - இதே முளை செடியாகி மரமாகி பருவம் எய்தும் போது பழுத்துக் குலுங்கும் போது, அதே பழைய விதைகளை உதிர்ப்பதுஉண்மையல்லவா ?

விஞ்ஞானப் புதுமை யென்பது ஒன்றை மற்ருென்ருக, ஒன்றைப் பலவாக, அல்லது பலவற்றை ஒன்ருக மாற்ற முடியுமே தவிர, புதிதாக ஒரு பொருளை எந்நாளும் உண்டாக்கவே முடியாது—இயற்கை வெளியில் இருப்பதைத்தான் விஞ்ஞானி காண முடியுமே தவிர, அவன் தனியான செயற்கை உலகைச் செய்துவிட முடியாது.

முதன் முதலில் நெருப்பின் ஆற்றலைக் கண்டுணர்ந்த விஞ்ஞான மூளை மேலும் சிந்தித்தது —நீராவி, எரி பொருள்கள், காந்தம், பஞ்சலோகம், வெடிமருந்து, மின்சாரம், இவற்ருல் இயக்கப்படும் இயந்திரங்கள், மருத்துவச் சாதனைகள், வேக வாகனங்கள், கடைசியாக இன்று விஞ்ஞானப் புதுமையின் சிகரமாகப் பயமுறுத்தும் அணுசக்தி, ஹைட்டிரஜன் சக்தி, என்று பலவற்றையும் கண்டுபிடித்தது—.

இன்னும் ஒன்றே ஒன்றுதான் பாக்கி-சூரிய சந்திரர்களை சுட்டெரித்துச் சாம்பலாக்கும் ஒரு புதுமைச் சாதனையையும் கண்டுபிடித்துவிட்டால் புதுமை விஞ்ஞானத்தின் பொல்லாத வெறி தெளிவு பெற்றுவிடும்!

இவ்வாறு, விஞ்ஞான அறிவின் புதுமைப் பித்தம் புரட்சி வெறியாகமாறி, போரின் அடிமையாகி, கடைசியாக, தற்கொலைச் சிகரத்தின் ஓரத்திலே நின்று நடுங்கிக்கொண்டு விழிக்கிறது! அந்தப் புதுமை நடுக்கத்திலே எழும் அதிர்ச்சியின் உணர்ச்சியிலே தென்படுகிறது பழைய வாழ்க்கை!

அகிலத்தை அழகாக்குவதற்காக விஞ்ஞானப் புதுமை வேண்டுமென்று மனிதகுலம் ஆசைப்பட்டது குற்றமல்ல— அந்த ஆசை வெறியாக மாருமல் அளவுபடுத்திக் கொள்ளத் தவறிய குற்றத்தை எல்லோருமே செய்துவிட்டோம்—அகிலாண்ட சக்தியின் நீதிமன்றத்திலே நின்றுகொண்டு சாட்சியின்றித் திண்டாடுகின்ருேம்!

நமது வெற்றியின் விளைவுக்காக இன்று நாம் வெட்கித் தலை குனிகிருேம். தண்டனை இடிகளுக்கு அஞ்சுகிருேம்—ஆனுல் மமதை என்ற மலைச் சரிவின் விளிம்பிலே தன்னந் தனியாக நிற்கிருேம். நாசக்கணவாய் நம்மை வரவேற்கத் துடிக்கிறது! அரசியல் ஊழிக்காற்று நம்மைத் துரும்பென ஆட்டி நிலை குலையவைக்கிறது! ஆயிரமாயிரம் பேதப்பாம்புக்கள் சீறிப் படையெடுத்து நம்மைச் சுற்றி வந்து முற்றுகையிடுகின்றன; விழுந்தாலும் துன்பம்! அசைந்தாலும் துயரம்! ஓடவும் முடியாது! ஒடுங்கவும் வலிமையில்லை! அச்சம்! நடுக்கம்! உயிராசை! அவலம்! இதுதானு மனிதகுலம் கண்ட புதுமை! இதுதானு அறிவு கண்ட புதுமை!

அல்ல—அல்ல-உலகில் உண்மையான புதுமை ஒன்று உண்டு! நிரந்தரமான நிலைமை ஒன்று நிச்சயமாக உண்டு—.

அது என்ன! அன்பு! ஆருயிர்க்கருணை! அருள் மயமான அறிவு! ஆண்டவன் நினைவு!. ஆதிபரம்பொருளின் அணுவின் கோயில் இந்த மனிதஉடல் என்றதொரு அமரத்வமான எண்ணம்—.

ஆங்கே பிறக்கும்-புதிய நெறி! புதிய வாழ்வு! அந்தப் புதுமையிலே கிடைக்கும் பேரின்ப வாழ்வு!—.

அத்தகைய சத்தியப் புதுமை வருக! பொலிக! வாழ்க! வளர்க!! வாழி நலம் சூழ !!!

*

அட்டைப்பட விளக்கம்

ஆங்கில ஆட்சியின் அநீதியையும் அக்கிரமத்தையும் எதிர்த்து 1857-ம் வருஷம் சிப்பாய்கள் செய்த சுதந்திரப் புரட்சியின் தனிப்பெருந் தலைவியாக, பாரத மண்ணின் வீரத்திற்கு மணி விளக்காக சுடர் வீசிய வீராங்கனை ஜான்ஸி ராணி லக்ஷ்மி பாய்.

புரட்சிக் காலத்தில் வெள்ளையர்கள் ஜான்ஸி கோட்டையைத் தாக்கவே அவர்கள் மீது வீராவேசங் கொண்டெழுந்தாள் அவள். ஆண் வேடம் தரித்து, இரும்புக் கவசமணிந்து மதில்மேல் நின்று அவள் போரிட்ட காட்சி கண்கொள்ளாக் காட்சியாக விருந்தது. வெள்ளையர்களை விரட்டியடித்து வெற்றிக் கொடியை நாட்டினுள் லக்ஷ்மிபாய்.

ஆனல் சில வாரங்கள் கழித்து ஆங்கிலேயர்கள் புது பலத்துடன் ஜான்ஸிக் கோட்டையைத் தாக்கி உள்ளே நுழைந்ததைக் கண்ட லக்ஷ்மிபாய் மனங் கலங்கி, குதிரை மீதேறி, தன்னுடைய தத்துப் புத்திரனை தன் முதுகில் பட்டுத்துணியால் கட்டிக் கொண்டு துக்கம் மேலிட்டவளாய் கோட்டையை விட்டு வெளியே புறப்பட்டாள்.

ராணி லக்ஷ்மிபாய் ஒழுக்கத்தின் உறைவிடம். அவளுடைய வாழ்க்கை பாரதப் பெண்மணிகளின் வீரத்தை எடுத்துக் காட்டும் ஓர் வீர காவியம் ! வாழ்க என்றும் அவளுடைய திருநாமம் !

அவ்வீரத் திருமகளின் வாளேந்திய வீரம் செறிந்த திருவுருவக் காட்சிதான் முகப்பை அலங்கரிக்கின்றது.

சுதந்திரப் பாதையிலே!

1857-ம் வருஷம். ஆங்கில ஆட்சியை அடியோடு அழிக்க இந்திய மக்கள் வீறு கொண்டு எழுந்தனர். எத்தனை ஆண்டுகள் தான் வெள்ளையரின் கொடுமைகளை அவர்கள் பொறுத்துக் கொண்டிருக்க முடியும்?

"இடத்தைக் கொடுத்தால் மடத்தைப் பிடுங்குவான்" என்பது பழமொழி. ஆயிரத்து அறு நூறும் ஆண்டு அங்காடிக் கடை வைக்க அனுமதி கேட்டு வந்த ஆங்கிலேயர்கள் நம் நாட்டில் அவர்களின் ஆதிக்கத்தை படிப்படியாக நிலை நாட்டிக் கொண்டனர்.

1857-ம் ஆண்டு நம் நாட்டு வரலாற்றில் முக்கியம் வாய்ந்தது. அவ்வாண்டில் வங்காள நவாப்பான சிராஜ்-உத்-தௌலாவை, ராபர்ட் கிளைவ் என்ற ஆங்கிலத் தளபதி பிளாசிச் சண்டையில் தோற்கடித்தார். பிளாசிச் சண்டைக்குப் பின் நூறு வருடங்களில் ஆங்கில கிழக்கிந்தியக் கம்பெனி பாரதத்தில் மலிந்திருந்த பிணக்குகளைப் பயன்படுத்திக் கொண்டு குரங்கு அப்பம் பங்கிட்ட கதையைப் போல சுதேச மன்னர்களின் விவகாரத்தில் ஈடுபட்டு நாடு சேர்க்கும் படலத்தை நன்கு செய்து முடித்தனர். இச்சமயத்தில் தான் ஆங்கிலேயர்களுக்கு "வரி கொடுக்க மாட்டேன்" என்று வீரன் கட்டபொம்மு முழக்கம் செய்தான். கர்நாடகம்அவர்கள் காலடியில் கிடந்தது. வங்காளம் அவர்களின் வலைக்குள் சிக்கியது. அயோத்தியை ஆக்ரமித்துக் கொண்டனர். போர்கள் பல செய்து பஞ்சாபைகொஞ்சம்கொஞ்சமாகச் சேர்த்துக் கொண்டனர். தஞ்சாவூர்அவர்களிடம்தஞ்சமடைந்தது. இந்திய மக்களோ வெள்ளையரின் வெடிமருந்துக்கும் அதிகாரத்திற்கும் பயந்து மௌனஞ் சாதிப்பதைத் தவிர வேறு என்ன செய்ய முடியும்? ஆனால் அவர்களின் உள்ளம் குமுறிக் கொண்டிருந்தது. ஆங்கிலேயர்களைச் சுட்டுப் பொசுக்கி சுதந்திர தீபத்தை இந்தியாவில் ஏற்ற தக்க சமயத்தை எதிர்பார்த்துக் கொண்டு தான் இருந்தார்கள்.

இச்சமயத்தில்தான் ஆங்கில கவர்னர் ஜெனரலான டல்ஹௌஸி பிரபு இந்தியாவிற்கு வந்தார். நாடு சேர்க்கும் படலத்தில் நல்லதோர் பங்குண்டு இம்மகானுபாவருக்கு! அதற்கான வழிகளையும் அவர் வகுத்தார். வாரிசு இல்லாமல் இறந்து போகும் சுதேச மன்னர்களின் நாடுகளை கம்பெனியின் பிரதேசங்களில் சேர்ப்பதற்கான ஒரு கொள்கை இவருடைய "செழிப்புள்ள மூளை"யில் உதயமாயிற்று. அதற்கு "லாப்ஸ் கொள்கை" என்று பெயர். அதன்படி சுதேச மன்னர்கள் அவர்களுக்குக் குழந்தைகள் இல்லாவிடில் "தத்து" எடுத்துக் கொள்ளக் கூடாது. அவர்கள் இறந்த பின் அவர்களுடைய நாடுகள் கம்பெனியாருக்குச் சொந்தமாகிவிடும். என்னே அநியாயம்! இக் கொள்கைக்கு சதாரா, ஜான்ஸி, நாகபுரி என்ற சுதேச நாடுகள் இலக்காயின. அப்பிரதேசங்களை ஆட்சி செய்தவர்கள் கம்பெனியின் வீழ்ச்சிக்கு தக்க சமயத்தை எதிர்பார்த்திருந்தனர்.

கடைசிப் பீஷ்வாவின் 'தத்து' புத்திரனை நானு சாகிபுக்கு உபகாரச்சம்பளம் கொடுப்பதை டல் ஹௌஸி நிறுத்தி விட்டார். நானு கடுங் கோபங் கொண்டார்.

மேலும் டல்ஹௌஸி பொருளாதாரத் துறையிலும், கலாசாரத் துறையிலும், ஆத்மீகத் துறையிலும் பல சீர்திருத்தங்களைச் செய்து இந்தியர்களின் மனதை நோவச் செய்தார். இவ்விதமான அடாத செய்கைகளால் டல் ஹௌஸி பிரபு ஒரு பெரிய வெடி மருந்துக் குவியலைத் தயார் செய்து வைத்து விட்டுப் போனார். அதை வெடிக்கச் செய்து நாசம் விளைவிக்க ஒரே ஒரு தீப் பொறிதான் தேவை! அதைப் பசுக் கொழுப்பும் பன்றிக் கொழுப்பும் தடவிய தோட்டாக்கள் வழங்கின.

டல்ஹௌஸிக்குப் பின் கவர்னர் ஜெனரலாக வந்த கானிங் பிரபு காலத்தில் சிப்பாய்களுக்கு துப்பாக்கியில் உபயோகிக்க ஒரு விதத் தோட்டாக்கள் வழங்கப்பட்டன. அத்தோட்டாக்களில் பசுக் கொழுப்பும் பன்றிக் கொழுப்பும் தடவியிருந்ததாக சிப்பாய்கள் நினைத்தனர். பசுக்கொழுப்பும், பன்றியின் கொழுப்பும் தடவிய தோட்டாக்களைத் தொட மறுத்த சிப்பாய்கள், கலகஞ் செய்தனர். தாய்நாட்டை ஆங்கிலேயர்களிடமிருந்து மீட்க முனைந்து சுதந்திரப் போரிட முன் வந்தனர்.

ஒரே சமயத்தில் 1857-மே மாதத்தில் மீரத்திலும் டில்லியிலும் கலகம் தோன்றியது. சிப்பாய்கள் டில்லிக்குச் சென்று அங்கே உபகாரச் சம்பளம் பெற்று வந்த வயது முதிர்ந்த முகலாயச் சக்கரவர்த்தி பகதூர் ஷாவை இந்திய சக்கரவர்த்தியென பிரகடனம் செய்தனர். ஒரே நாளில் ஆங்கில ஆட்சி கவிழ்ந்தது. மக்கள் குதித்துக் கூத்தாடினர். ஆனந்தக் கண்ணீர் வடித்தனர்.

இக்கலகம் லட்சுமணபுரி, கான்பூர் முதலியஇடங்களிலும் பரவியது. கான்பூரிலுள்ள சிப்பாய்களுக்கு நானு சாகிப் தலைமை வகிக்க முன் வந்தார். ஆங்கிலப் பெண்களையும் குழந்தைகளையும் கூட ஈவிரக்கமின்றி சிப்பாய்கள் கொன்று குவித்தனர். நானுசாகிபின் பக்க பலமாக இருந்தவர் அவருடைய உண்மை ஊழியன் தாதியா தோபி. அவர் ஒரு சிறந்த தளகர்த்தர்.

ஜான்ஸியில் ராணி லக்ஷ்மிபாய் கலகம் செய்தாள். லக்ஷ்மி தோன்றியது காசியில். சிறு வயதில் அவளுடைய பெற்றோர்கள் அவளைச் செல்லமாக மனுபாய் என்று அழைப்பதுண்டு. ஜான்ஸி மன்னனை மணந்த லக்ஷ்மிபாய் ஜான்ஸி ராணியானாள். மன்னன் இறந்த பின் தனக்குப் பின் பட்டத்துக்கு வரத் தத்துப் புத்திரன் ஒருவனை வளர்த்து வந்தாள். அவனை ஆங்கிலேயர்கள் அங்கீகரிக்க மறுக்கவே லக்ஷ்மிபாய் கோபங் கொண்டு. சுதந்திரப் போரில் ஆங்கிலேயர்களை எதிர்த்தாள். ஜான்ஸி கோட்டையினின்றும் ஆங்கிலேயர்களைத் துரத்தியடித்தாள். ஆனால் மறுபடியும் ஆங்கிலேயர்கள் ஜான்ஸிக் கோட்டையைத் தாக்கினார்கள். தாந்தியாதோபே அவளுக்கு உதவியாக வந்தார். எனினும் ஆங்கிலேயரின் தாக்குதலை அவளால் சமாளிக்க முடியவில்லை. ஆண் உடை தரித்து, குதிரை மீதேறி, வாளை வீசிக்கொண்டு வீரமாகப் போர் புரிந்தாள் லக்ஷமிபாய். தன் கோட்டை ஆங்கிலேயர்களால் அழிக்கப் படுவதைப் பார்த்த லக்ஷ்மிபாய் அதைவிட்டு வெளியேறினாள். ஆங்கிலேயர்கள் அவளைப் பின் தொடர்ந்து சென்றனர். குவாலியர் கோட்டையை அடைந்த லக்ஷ்மிபாயை ஆங்கிலேயர்கள் சூழ்ந்து கொண்டு வெட்டி வீழ்த்தினர். அவள் வீரசுவர்க்கம் அடைந்தாள்.



டாக்டர் நாயுடு

பகதூர் ஷா

தாந்தியா தோபே

திலகர்

வ. உ. சி.

கவி பாரதி

வ. வே. சு. ஐயர்

சத்தியமூர்த்தி

திருப்பூர் குமரன்

தாந்தியாதோபே காடு, மேல்களில் அலைந்து திரிந்து முடிவில் ஆங்கிலேயர் கையில் சிக்கித் தூக்கு மேடையில் வீரத்துடன் புன் முறுவல் பூத்து உயிர் துறந்தார். நானுசாகிப் எங்கே சென்றுர் என்னவாஞர் என்று இன்று வரைக்கும் சரித்திரம் மௌனம் சாதிக்கிறது!

சிப்பாய்கள் கலகம் அடக்கப் பட்டது. அத்துடன் கம்பெனியின் ஆட்சியும் முடிவுக்கு வந்தது. பகதுர்ஷாவைக் கைதியாக இரங்கூனுக்கு அனுப்பினுர்கள். சில வருஷங்கள் கழித்து அவர் மாண்டு போகவே அவருடைய சடலம் அங்கேயே அடக்கம் செய்யப் பட்டது. அவரது சமாதியை இன்றும் அங்கு காணலாம். இரண்டாவது உலகப் போர் நடக்கும் போது சுபாஷ் சந்திர போஸ் அவருடைய கல்லறையில் தான் ஒரு பிடி மண்ணை யெடுத்து "டில்லி சலோ'! என்ற கோஷத்தைக் கிளப்பி இந்தியாவை விடுவிக்கத் தமது படையை நடத்தி வந்தார்.

1857-ம் வருஷ சுதந்திரப் புரட்சிக்குப் பின் இந்தியாவின் அரசாட்சியை ஆங்கில அரசாங்கமே எடுத்துக்கொண்டது.

இந்திய மக்கள் மனம் வெதும்பி தங்களின் சுதந்திர வேட்கையை வெளியே காட்டாமல் நீறு பூத்த பெறுங்கனல் போல் பொறுத்திருந்தனர்.

வருடங்கள் பல பறந்தோடின. 1885-ம் வருடம் இந்திய தேசீய காங்கிரஸ் பம்பாயில் கூடிற்று. சிறிது சிறிதாக இந்த ஸ்தாபனத்தின் செல்வாக்கு வளர்ந்தது.

1905 ல் ஏற்பட்ட வங்காளப் பிரிவினை தான் நீறு பூத்திருந்த தேசியத்தைக் கொழுந்து விட்டு எரியும் படிச் செய்தது. அப்போது வைஸ்ராயாக இருந்த கர்ஸன் பிரபு வங்காளத்தை இரண்டு பிரிவாகப் பிரித்து ஆட்சி செய்ய நினைத்தார். நாட்டில் மிதவாதிகள், அமிதவாதிகள் இருவரும் இப்பிரிவினையைக் கண்டனம் செய்து கிளர்ச்சி செய்தனர். அக் கிளர்ச்சி சுதேசி இயக்கமாகவும் அந்நியப் பொருள்கள் பகிஷ்கார இயக்கமாவும் வளர்ந்தது வங்க மராட்டியப் பத்திரிகைகள் புரட்சிக் கனலுக்கு நெய் ஊற்றின. வந்தே மாதர கீதம் எங்கும் ஒலித்தது. அரவிந்தர் நாடு கடத்தப் பட்டார். திலகர் தண்டனை அடைந்தார்.

x x x

நம் ஒப்பற்ற தலைவர் வ. உ. சிதம்பரம் பிள்ளையின் தலைமையில், தமிழகம் "வெள்ளையனே வெளியேறு'' என்ற வீர முழக்கம் செய்தது. வெள்ளையரை வெளியேற்ற அவர்களிடமிருந்து வியாபாரத்தைக் கைப்பற்றுவது தான் முக்கியமென நினைத்து "சுதேச ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி''யை 1906-ல் ஆரம்பித்தார். வெள்ளையர்கள் வெகுண்டனர். சிதம்பரம்பிள்ளை மீதும் சுப்பிரமணிய சிவா மீதும் வழக்கு தொடரப்பட்டது. சுப்பிரமணிய சிவாவுக்குத் தீவாந்திர தண்டனை

சுபாஷ்

நானாசாகேப்

ஓட்டப்பிடாரத்தில் முதலமைச்சர் வ. உ. சி. ஞாபகார்த்த
கட்டிடத்தின் அஸ்திவாரக்கல்லை நடுகிறார்.

கொடுக்கப்பட்டது. வ. உ. சி ஆஷ்துரை கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டு சிறையில் தள்ளப்பட்டார்.

தமிழ் நாட்டின் தலைசிறந்த தியாகிகளில் சத்தியமூர்த்தி அவர்களையும் மறக்கக் கூடாது. அஞ்சா நெஞ்சமும் செயலாற்ற வேண்டுமென்ற உறுதியும் கொண்டவர். ஆற்றுமடை திறந்தாற் போன்ற அவருடைய அருமையான சொற்பொழிவுகளால் மக்களிடையே தேசபக்தியைப் பரவச் செய்வதிலேயே தம் வாழ்நாளைக் கழித்தார்.

தமது தேசத்தின் பிதா, சுதந்திர சிற்பி, அஹிம்ஸா மூர்த்தி மகாத்மா காந்தியடிகளின் சேவைகளைப்பற்றி எத்தனையோ புத்தகங்கள் எழுதலாம். நம் நாட்டுக்கு மட்டுமல்ல. உலக மக்களுக்கே அவர் காட்டிய வழியை யார்தான் போற்ற மாட்டார்கள் ?

இவர்களெல்லாம் ஏன் இவ்வாறு தங்கள் வாழ்க்கையை அர்ப்பணம் செய்தார்கள் என்பதை இந்நன்னாளில் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நம் நாடு சுதந்திரம் அடைய வேண்டும். அதன் பின் மேடுபள்ளமற்ற சமுதாயத்தில் மக்களெல்லாம் சுபிட்சமாகவாழவேண்டுமென்பதே! அதற்கு முட்டுக் கட்டையாக நிற்பவர்களை முறியடித்து சமதர்ம சமுதாயத்தை உருவாக்க நாம் எல்லோரும் முயல வேண்டுமென்று இப்புனித நாளில் உறுதி மொழி எடுத்துக் கொள்வோமாக !

x x x

இந்த தேசிய இயக்கத்தை தாகூர், கவிக்குயில் சரோஜினி தேவியார், அமரகவி சுப்பிரமணிய பாரதியார் முதலியோர் தங்களின் கவிதையின் சக்தியால், மக்களை உற்சாகப்படுத்தி சுதந்திரப் பாதையில் இழுத்துச் சென்றனர்.

நம் நாட்டின் சுதந்திரத்திற்காக அரும்பெருந் தியாகங்கள் செய்தவர்கள் வரிசையில் லாலா லஜபதிராய், ஸி. ஆர். தாஸ், பண்டித மோதிலால் நேரு, அனிபெஸண்ட் அம்மையார், அலி சகோதரர்கள், ஸ்ரீனிவாசஐயங்கார், ஸி.என். முத்துரங்க முதலியார், சத்தியமூர்த்தி, வ. வே. சு. ஐயர், சுபாஷ் போஷ் திருப்பூர் குமரன், சமீபத்தில் காலஞ்சென்ற வரதராஜுலுநாயுடு முதலியோர்களைக் குறிப்பாகக் கூறலாம்.

வரதராஜுலு நாயுடு தென்னாட்டுத் திலகர் என்று அழைக்கப்பட்டார். மக்களிடையே தேச பக்திக் கனலை ஊட்டிய பெரியோர்களில் டாக்டர் நாயுடுவும் ஒருவர்.

1918-ம் வருஷம் இவர் மீது ராஜத்துரோகக் குற்றஞ்சாட்டப்பட்டு பதினெட்டு மாதம் தண்டனை பெற்றார். தமிழ் நாட்டில் தமிழ் பத்திரிகைத் தொழிலுக்கு அவர் செய்திருக்கும் தொண்டு சிறந்தது. அவருடைய 'பிரபஞ்சமித்ரன்' 'தமிழ்நாடு' பத்திரிகைகளைத் தமிழர்கள் மறக்க முடியாது.

எல்லாத் தளைகளிலிருந்தும் விடுதலை வேண்டும்.

"என் அகராதிப்படி, சுயராஜ்யம் என்றால், அது நம் நாட்டிலுள்ள மிக எளியவரும் அனுபவிக்கத் தக்கதாக இருக்க வேண்டும்.

"ஆங்கிலேயரின் தளைகளிலிருந்து மாத்திரம் இந்தியாவை விடுவிப்பதில் எனக்கு அக்கறையில்லை. எல்லாத் தளைகளிலிருந்தும் இந்தியாவை விடுவிக்க உறுதி கொண்டிருக்கிறேன். வெறுமனே ஒருவர் ஆட்சிக்கு பதிலாக இன்னொருவர் ஆட்சி தோன்ற வேண்டுமென்று நான் விரும்பவில்லை."

—காந்திஜி

ஒத்த மரபு

— கி. வா. ஜகந்நாதன் —

ANAND

ஆந்திர நாட்டில் உள்ளது ஹம்பி என்னும் நகரம். விஜய நகர சாம்ராஜ்யத்தின் இராச தானியாக இருந்த ஊர் அது. அங்கே அரசனுடைய பிரதானி யாக அறம் வளர்த்த முதலி யார் என்னும் வேளாண் செல்வர் இருந்தார். அவர் தமிழ் நாட்டில் உள்ள செம்பூர் என்ற ஊரிலே பிறந்தவர். அவர் மதியிற் சிறந்தவராக இருந்தமையால் அரசன் அவ ரிடம் பெருமதிப்பு வைத்திருந் தார்,

அம்பி அறம் வளர்த்த முதலி யார் தமிழ்ச்சுவை தேரும் இயல்பை உடையவர். தமிழ்ப் புலவர்களுக்குப் பரிசுகள் வழங்கி ஆதரிக்கும் வள் ளன்மை யுடையவர். அவர் தம் ஊருக்கு வரும்போது அக் காலத்தில் சிறிய பகுதியை ஆண்டுகொண்டிருந்த பாண் டிய மன்னனைக் கண்டு அள வளாவிச் செல்வார்.

பெருஞ் சிறப்புப் பெற்று வாழ்ந்த பாண்டியர்களுக்குப் பின் அவர் மரபில் பெயருக் குப் பாண்டிய மன்னனாகச் சிறிய நாட்டுப் பகுதியை ஆண்டு வந்தான் அப்பாண்டி யன். அவன் தமிழ்ப் புலமை மிக்கவன். நல்ல கவிஞன். அறம் வளர்த்த முதலியார் பேரரசனுடைய பிரதானியாக இருந்தமையால் அவருடைய நட்புத் தனக்குக் கிடைத்த தைப் பெரிய சிறப்பாகக் கருதி னான் அவன். முதலியாரும் பாண்டியனுடன் மனங் கலந்து பழகி இன்புற்றார்.

சில நூல்களை இயற்றினான் பாண்டியன். அம்பி அறம் வளர்த்த முதலியாரைப் புகழ்ந்து ஒரு சிறிய நூல் இயற்ற வேண்டும் என்ற

ஆசை அவனுக்கு உண்டா யிற்று. அவரிடம் சொல்லா மலே ஒரு கலம்பகம் பாடி ஞன். அவருக்கு அந்தச் செய்தி தெரிந்தபோது, "பிற ரால் பாடல் பெறும் தகுதி உள்ள நீங்கள் என்னைப் பாட லாமா?" என்று தம் பணிவைக் காட்டிக்கொண்டார். நூல் சிறப்பாக அரங்கேற்றப் பெற்றது.

ஒரு நாள் பாண்டியன் தனக்கு வேண்டிய புலவர் ஒருவரோடு பேசிக்கொண் டிருந்தான். கலம்பகம் பாடி யது கேட்டு அறம் வளர்த்த முதலியார் சொன்னதை அப் புலவரிடம் சொன்னுன். அந் தப் புலவர் முதலியாரின் பணி வைப் பாராட்டவில்லை. "பார்த் தீர்களா? நான் அப்போதே நினைத்தேன்" என்ருர்.

"என்ன நினைத்தீர்கள்?" என்றுபாண்டியன்கேட்டான்.

"அவர் வேளாளர். நீங்கள் முடி மன்னர்களாகிய பாண் டிய மரபில் உதித்தவர்கள். அவர் உங்கள் குடிமக்களில் ஒருவராக இருக்கும் நிலையினர். அப்படியிருக்க நீங்கள் சாமா னியப் புலவனைப்போல உங் கள் பெருமையைக் குறைத் துக்கொண்டு அவரைப் பாட லாமா? அது முறையன்று தான்" என்ருர் புலவர்.

அது கேட்ட பாண்டியன் புலவருடைய அறியாமைக்கு இரங்கினுன்,

"சோழ அரசர்கள் முடி மன்னர்கள் அல்லவா?"

"ஆம்."

"கிள்ளி வளவன் என்ற சோழனைப்பற்றிக் கேள்வியுற்ற துண்டா?"

"புறநானூற்றில் அவனைப் பற்றிய செய்திகள் வருகின் றன."

"அவன் ஒரு வேளாளனைப் பாடியிருக்கிற பாடலைப் பார்த் தது உண்டோ? அதுவும் புற நானூற்றில்தான் இருக்கிறது"

"யாரைப் பாடினுன்?"

"சிறு குடி கிழான் பண்ண னைப் பாடியிருக்கிருன். யான் வாழும் வரைக்கும் பண்ண னும் வாழட்டும் என்று அந்த வேளாண் செல்வனைப் பாடி யிருக்கிருன்."

புலவர் சற்றே யோசித்தார். பிறகு, "ஏதோ ஒரு பாட்டு, அரைப்பாட்டு அவசியமான சந்தர்ப்பத்தில் பாடியிருக்க லாம். ஆனல் இப்படி ஒரு முழு நூலை யாரும் பாடியிருக்க மாட்டார்கள். நீங்கள் உங்க ளைக் குறைத்துக் கொண்டது மட்டும் அன்று; பாண்டிய மரபின் பெருமைக்கே இது இழுக்கு" என்று மிடுக்குடன் பேசிவிட்டார். சோழனை உதா ரணம் காட்டியதனுல் வந்த ரோசம் அப்படிப் பேசத் தூண்டியது.

பாண்டியன் சற்றே நிதா னித்தான். புலவருடைய பட படப்பு அடங்கட்டும் என்று

பொறுத்திருந்தான். பிறகு மெல்லப் பேசத் தொடங்கினன்.

"புலவரே, உங்கள் மனம் எனக்குத் தெரியும். எங்கள் மரபுகள் உயர்வு தாழ்வுடையவை, சமானமானவை யல்ல என்று நினைக்கிறீர்கள்."

"நினைப்பது என்ன? யாவருமே சொல்வார்களே!"

"நான் அப்படி நினைக்கவில்லை. எங்கள் மரபு ஒன்றற்கொன்று ஒத்து நிற்பவை."

"எப்படி?"

"சொல்கிறேன். பாண்டிய மரபு சந்திரகுலம் அல்லவா?"

"ஆம்."

"அறம் வளர்த்த முதலியார் வம்சம் இன்னதென்று உங்களுக்குத் தெரியுமா?"

"வேளாண்குலம்."

அவர்களுடைய குலத்துக்கு முதல் யார் என்று தெரியுமா?

"அவர்களைக் கங்கா குலத்தினர் என்று சொல்வார்கள்."

"நாங்கள் திங்களின் வழி வந்தோர். அவர்கள் கங்கை வழி வந்தோர். எங்கள் இருவர் மரபுக்கும் மூலமாக இருப்பவர்கள் ஒத்த நிலையில் இருப்பவர்கள். பரமேசுவரனே அவர்கள் சமானமானவர்கள் என்று கருதித் தன்னுடைய சடை முடியில் அவர்களுக்கு இடம் கொடுத்திருக்கிறன். கங்கையும் திங்களும் இறைவன் திருமுடியில் அருகருகே சமானமாக விளங்குவதை யார் அறிய மாட்டார்கள்? இறைவனே திங்களும் கங்கையும் ஒப்புடையவர் என்று தலையாலே தாங்கிக் காட்டும்போது அவ்விருவர் மரபும் ஒப்புடையன, உறவுடையன என்று நாம் கொள்வது பிழையாகுமா? இது தெரிந்துதான் நான் பாடினேன்." என்று பாண்டியன் முடித்தபோது புலவர் வாயடைத்து நின்றூர்.

பாண்டியன் தன் கருத்தை ஒரு பாட்டாகவே பாடிவிட்டான்.

உங்கள் மனம்தெரி யும்புல
  வீர்!ஒரு சீர் மரபோம்;
திங்கள் மரபினம்; திங்களின்
  கூடச்செம் பூர் அறமா
துங்கன் மரபிற் கங்கையும்
  சூடினன் சோதியன்றோ?
எங்கள் மரபொன் றெனக்கவி
  பாடினம் யாம் அவற்கே.

[ஒரு சீர் மரபோம்-ஒரே சீருள்ள மரபினை உடையோம். திங்கள் - சந்திரன். அறமாதுங்கன் - அறம் வளர்த்த முதலியார். மரபு - வம்சம். சோதி-சிவபெருமான். ஒன்று என- ஒரு தன்மையை உடையன என்று எண்ணி. அவற்கு - அந்த முதலியாரின் மேல்.]

இன்ன காரணத்தால் தான் பாடியது முறையே என்று பாண்டியன் காரணங் காட்டி நிறுவி விட்டான். ஆனல் அவன் பாடியதற்கு உண்மையான காரணம் அன்பு தானே?

முத்து வீராயிப் பாட்டு

எ.ம.எ. யோகியார்

தமிழ் நாடு வெள்ளைக் கும்பினியாரின் ஆட்சிக்குள் தவித்தது. பாளையக்காரர்கள் வீரம் இன்னும் படபடக்கவில்லை; கட்டப்பொம்மன் ஊமைத்துரை இவர்களின் கம்பீரம் கனல்கக்கவில்லை பின் வேலூர்ப் புரட்சிக்கு இன்னும் விதை கூட நாட்டவில்லை. 1857 — ம் ஆண்டு சுதந்திரப்போருக்கு இன்னும் அரை நூற்றுண்டுக்கு மேல் அவ

காசம் இருக்கிறது. எனினும், மக்கள் உள்ளம் அந்நியர் ஆரவாரத்தைக் கண்டு அப்போதே அவலமுற்றது. 1794-ம் ஆண்டிலேயே, சுதந்திர சூர்யோதயத்தின் கோழிக் கூவலாக முத்துப் புலவரின் முத்து வீராயிப் பாட்டு முதல் முழக்கம் செய்தது.

இப்புலவர் யார்? தெரியாது. முத்து வீராயியைப் போற்றியவர் முத்துப் புலவர் என்று அடியேன் கேள்விப் பட்டுள்ளேன். இம் முத்துப் புலவரே போர் வீரஞன கதாநாயகர் என்றும், அவரது மனைவியாகிய வீராயி என்னும் வீராங்கனையே கதா நாயகி என்றும் கூடச் சொல்லுவதுண்டு. அவரைப் பற்றியோ, அவர் மனைவியைப் பற்றியோ நமக்கு ஒன்றும் தெரியாவிட்டாலும் இன்னும் அவர் பாடல் மட்டும், ஓரளவு சிதைந்திருந்தாலும், நம் நாட்டுப்புறங்களில் படித்தவர், பாமரர் யாவரிடையும் பாடப்பட்டு வருவது நம் அதிர்ஷ்டமே.

முத்துப் புலவர், அல்லது, கதாநாயகர் கவிஞர் மட்டுமல்ல போர் வீரரும் ஆகும். பதின்மூன்றரை மாதங்கள் அவர் சடை வளர்த்த சந்யாசியாக பட்டாளங்களுக்குப் பாட்டுப் பாடி தேச பக்தி ஊட்டுகிருர். அவர் மனைவி வீராயி, அல்லது முத்து வீராயில் பல வேஷங்கள் தரித்து உளவறிந்து வருகிருள். இருவரும் ஒரு நாள் சந்திக்கின்றனர், அச்சந்திப்பின் விளைவே இப்பாட்டு. இதில் இன்னொரு விசேஷம் என்னவென்ருல் இருவரும் வீரர்கள் மட்டுமல்ல, வேதாந்திகளும் கூட என்பதே. இனிப் பாட்டைப் பார்ப்போம்.

பக்தியெனில் தெய்வபக்தி
பைந்தமிழின் தேசபக்தி
தித்திக்கவே வெற்றி
சித்திக்க-முத்துநகை
வீராயிச் சிந்தை (நான்)
விளம்புதற்குக் காரானைச்
சீரானை நெஞ்சே தெளி



என்ற கணபதியின் காப்புடன் இந்நூல் ஆரம்பமாகிறது. பல வருஷங்கள் கர்ண பரம்பரையாக வழங்கி வந்துஇப்பாடல் 1886 - ல் தான்

முதல்முதலாக அச்சேறியதோ என்னமோ ? அவ்வச்சுப் புத்தகத்தில் இக்கணபதி வணக்கம் வேறு வகையாகத் தரப்பட்டிருக்கிறது. அதில் தேச பக்தியைப் பற்றிப் பேச்சே கிடையாது. தவிர அது கூறியது கூறல்என்னும் குற்றத்திற்கும் உள்ளாகிறது; 'செய்யும்' 'விளம்பும்' என அடுத்தடுத்து ஒரே பொருளான இரு சொற்கள் வந்து இடர்செய்கின்றன. எனவே மேலே காட்டிய காப்புச் செய்யுளே சரியான சுவடிப் பாடமாகும்.நிற்க—?

அச்சுவாகனமேறிய ஆனந்த வீராயிப் பாட்டில் 34 கண்ணிகளே உள்ளன. அடியேனிடமுள்ள கையெழுத்துப்பிரதியில் 36 கண்ணிகள் உள்ளன. இக் கட்டுரையில் அடியேன் பின்னதையே பின்பற்றுகின்றேன். அச்சேறிய 'ஆண் பிள்ளையாக' என்னும் முதற் பாட்டுக்கு முந்தி இரண்டு பாடல்கள் உள்ளன. முதற் பாட்டு மிக மிக மங்கலகரமாக ஆரம்பிக்கிறது.

பொன்னிருக்குது
நாட்டுக்குள்ளே—நல்ல
போத மிருக்குது
பாட்டுக் குள்ளே
கன்னி யென்னுசைக்
கருப்புக் கட்டி—நம்ம
கண்கள் சிமிட்டுது
கோட்டைக் குள்ளே.

என்று நாட்டிலே பொன்னும் (பொருளும்) இருக்கிறதாம்; பாட்டிலே (பொன்னைக் காக்கும்) போதமிருக்கிறதாம். காதலர் கண்கள் வெள்ளையர் கோட்டைக்குள் சென்று சிமிட்டிச் சீறுகிறதாம். கள்ளரை ஓட்டிறுல் சுனகம் நமதே என்கிருர் புலவர். அடுத்தபடி,

'என்றைக்கு நாமினிக்
காண்போமோ—குட்டி
இன்றைக்கே கூடி
மகிழ்ந்திடுவோம்
குன்றுக்கு மேலுச்சிக்
கொம்பேறிக்—குந்திக்
குள்ளநரி வேட்டை
யாடுமுன்னே

என்கிறுன் காதலன் ; குன்றின் உச்சியிலுள்ள கோட்டை மீதேறி வெள்ளையர்களாகிய குள்ள நரிகளை வேட்டையாட இன்னும் எத்துணை நாளாகுமோ ? என்றைக்கு நாம் மறுபடியும் சந்திப்போமோ ? எனவே, இன்றே கூடி மகிழ்வோம், என்று பின்னர்,

'ஆண்பிள்ளை யாகப் பிறந்த
தெல்லாம்...சுகம்
அநுபவித் திடத்
தானேடி
காண்பவ ரென்னைப்
பழித் திகழாமற்
கலந்தணை வாய்
முத்து வீராயி"

என்று தான் காதலை மறந்து, காணிக்கையாகத் துறந்து, தேசிய விரதம் பூண்டு ஓராண்டுக்கு மேலாயிற்றென்பதை நினைவுறுத்துகிறுன்,

'ஒரு வருஷமாய்
ஒண்ணரைமாதமாய்
ஓராண்ணெய்
தேய்த்து முழுகாமல்
சடை வளர்த்ததும்
சந்யாசி யானதும்
சம்மதமோ
முத்து வீராயி'

(தொடரும்)

அனைவருக்கும் எங்கள் சுதந்திர தின

நல் வாழ்த்துக்கள்.

போன் : 151 தந்தி : VESSELS.

பெ.சி.சி. சுந்தரம்மாள் & கோ

பாத்திர வியாபாரம்

28, வெங்கலக்கடை தெரு, மதுரை.

தேவையான

எவர்சில்வர் பாத்திரம் ★ பித்தளைப்பாத்திரம்

★ செம்புப் பாத்திரம்

★ பித்தளை, செம்புத் தகடுகள்

சகாயமான விலையில் கிடைக்கும்.

சந்தா விபரம்	ரூ. 50 பரிசு
தனிப்பிரதி 25 ந. பை. 6 மாதச் சந்தா ரூ. 1-50 வருடச் சந்தா ரூ. 3	இந்த இதழைப் பற்றி உங்கள் அபிப்பிராயத்தை எழுதுங்கள். சிறந்த விமர்சனத்திற்கு ரூ. 50 பரிசு கொடுக்கப்படும்.

விபரங்களுக்கு :—

போன் : 85778

புதுமை

283-A, திருவல்லிக்கேணி ஹைரோடு,

சென்னை—5.

குடும்பத்தின் பொக்கிஷம் கும்பகோணப் பாத்திரங்கள்!

செம்மை பயக்கும் செப்புப் பாத்திரங்கள்!

திவ்யமான தேவிதயாள் ஸ்டெயின்லஸ் ஸ்டீல் பாத்திரங்கள்!

★

இன்னும் பலரக பாத்திரங்களுக்கு
நம்பிக்கையான இடம் :—

பெ. அ. மாணிக்கராஜ்,

177, தங்கசாலைத் தெரு,

சென்னை-1.

முன்னேற்றம்

வேகி

"க்யூ"வில் நிற்காதவர்களை விரல்விட்டு எண்ணிவிடலாம் என்றே நினைக்கிறேன்....ஆனால் அப்படி நிற்பவர்கள் யாவரும் க்யூவை மனமுவந்து ஆதரிக்கிறார்களென்று சொல்ல முடியுமா? ஒரு சிலர் க்யூவில் நகர்ந்து நகர்ந்து தங்களது காரியங்களை முடித்துக் கொள்வதைப்பெருமையாக நினைக்கிறார்கள். வேறுசிலர், பிறருடையமிரட்டல்களுக்குப் பயந்து க்யூவை அனுசரிக்கிறார்கள். இன்னும் சிலர் க்யூவைப்பற்றி அறநெறிப் பிரசங்கமெல்லாம் பொழிந்து தள்ளிவிட்டு, க்யூவை உடைத்துக் கொண்டு தாங்கள் மட்டும் முன்னேறுவதிலேயே கண்ணும் கருத்துமாய் இருக்கிறார்கள்!

ஆகமொத்தம் க்யூவை வெகுவாக ஆதரிப்பவர்களும் நிறைய இருக்கத்தான் செய்கிறார்கள்!

பலவருஷமாக நான் இந்த க்யூ தர்மத்தைப் பற்றி சிந்தித்து, ஆராய்ந்து கண்டு பிடித்த சில அரிய உண்மைகளை உங்களிடமும் சொல்லி விட முடிவு செய்து விட்டேன். முடிவில் எது சரி என்பதை நீங்களே தீர்மானித்துக் கொண்டு சமயோசிதம்போல் நடக்கக் கடவீர்களாக.

நீண்டகால ஆராய்ச்சியின் பயனாகக் கிடைத்துள்ள உண்மைக் குறிப்புகள் வருமாறு :

ஆதரிப்பு

1. க்யூ வரிசையே ஒரு கண் விருந்து என்பதை யாரால் மறுக்க முடியும்? எலிமெண்டரி ஸ்கூல் பிள்ளைகள் ரயில்வண்டி விளையாட்டு விளையாடுவதைப் போல், மாந்தர் குலம் அத்தனையும் பல்வேறு உயரம், பருமன், கட்டை, குட்டை, கறுப்பு, சிவப்பு, இரண்டுங் கெட்டான், வாலிபம், முதுமை, நடுப்பிராயம், கிராப்பு, பாப்பு, குடுமி, கேரா, கிருதா, மீசை, தாடி, பூட்டு, சூட்டு, தட்டுச் சுற்று, கச்சம், பலவர்ண ஜாலம்..... அடாடா! இன்னும் எத்தனையோ கணக்கிலடங்கா விமரிசைகளோடு காட்சி தரும் க்யூ வரிசைகளை நாளெல்லாம் பார்த்து இன்புறவே ஒரு க்யூ அமைக்கலாமே!

2. கூட்டத்தில் ஒரு நண்பரையோ, உறவினரையோ, காதலன் காதலியையோ தேடிப் பிடிப்பது எத்தனை கடினம்? ஆனால் க்யூ வரிசையில் நிற்கும் ஒருவரைத் தேடிப் பிடிப்பதில் கஷ்டம் ஏதாகிலும் உண்டா?

3. க்யூவில் உங்களுக்கு முன்னால் நிற்பவரையும் பின்னால் நிற்பவரையும் சுலபமாக அறிமுகம் செய்து கொண்டு திட்டத்தில் இல்லாத யாரையாவது ஒருவரைத் திட்டிக் கொண்டோ கிண்டல் செய்து கொண்டோ

பொழுதைப் போக்கலாம்! நிச்சயமாக அவ்விருவரும் உங்களுக்கு ஆதரவு தருவார்கள். எதிர் கட்சி பேசமாட்டார்கள். இது முக்காலும் சத்தியம். பிரமாணவாக்கு. ஆகவே சுகமான பொழுது போக்கு!

4. பஸ்ஸுக்காகக் காத்து நிற்கும் க்யூவைப் போன்ற அழகுவாய்ந்த காட்சியை அஞ்சே விரல்படைத்த அடியேனல் எழுத்தோவியமாகத் தீட்டிக் கொடுக்க இயலாது! அதிலும், கடைசி பஸ்ஸுக்காக காத்து நிற்கும் க்யூ, ஷை பஸ் அந்த ஸ்டாப்பில் நிற்காமலே போய்விட்ட பிறகு, கலையும் காட்சி கண்ணுக்கும் காதுக்கும் கூட இனிய விருந்தாகும்!

நிற்க, பஸ் ஸ்டாண்டு ஒன்றில் நேற்று நடந்த நிகழ்ச்சி அருமையானதோர் பரவசம் மிகுந்த விளையாட்டாக அமைந்தது.

சுமார் நாற்பது மானிடப் பிறவிகள் க்யூவில் அலங்காரமாய் நின்று கொண்டிருந்தன. பஸ்ஸும் வந்து நின்றது. அதில் நிற்கத்தான் இடமிருந்தது. கண்டக்டர் கீழே இறங்கிக் கொண்டு க்யூவை ஏற அனுமதித்தார். தற்செயலாக, க்யூவின் தலைப்பில் நின்று கொண்டிருந்த மானிடப் பிறவி ஒரு அஞ்சல் பட்டிக் காட்டுப் பிறவியாக அமைந்திருந்தபடியால், பிறவி விறுவிறுவென்று ஏறி, பஸ்ஸின் "வராந்தாவில்" நடந்து சென்று டிரைவருக் கருகாமையை அடைந்தது. அவரைத் தொடர்ந்து பாக்கியுள்ள பிறவிகளில் முக்கால் வாசிப் பிறவிகளும் ஏறி நடந்து வரிசையாக அடைந்து கொண்டன. மேற்கொண்டு நிற்பதற்கும் கூட இடமில்லாத நிலையில் சுமார் 15 பிறவிகள், ஏறிக்கொள்ள இடமில்லாமல் கீழேயே கூட்ஸ் வண்டித் தொடரைப் போல, நின்று கொண்டிருந்தன. இன்னும் சிலரையாவது திணித்துக் கொண்டுவிட வேண்டுமென்று முடிவு செய்துவிட்ட கண்டக்டர் பஸ்ஸில் குத்துயிரும் குலையுயிருமாய் நின்று கொண்டிருந்த பிறவிகளைப் பார்த்து அவருக்கே உரித்தான அதிகாரப் பணிவுச்சொற்றெடரில், "இன்னும் முன்னலே நகரேன் அய்யா! ...ஏ...குடை! உன்னைத் தான்! சொன்னுத் தெரியல்லே? போயேன் அய்யா முன்னலே! ... ஏ...பாண்டேஜ்...உன்னைத்தான். நகரு...ச் ச்...ஏன் ஐயா, எத்தினி தடவை சொல்லணும்?.. ஏதாச்சும்...இருக்கா ஐயா? ...சேசே சே! இந்த பாசஞ்சருங்க எளவோடு உசிரைவிட்டுக்கிட்டு, ஒவ்வொண்ணுக்கும் அந்த இன்ஸ்பெக்டருக்கு வேறே பதிலும் சொல்லிக்கிட்டு, இந்த உத்தியோகம் பார்க்கிறதைக் காட்டிலும் விராட்டி தட்டி சுடுகாட்டுக்கு வித்தாக்கூட நாலு காசு சம்பாரிச்சிடலாம்!" என்று மிகவும் நொந்து போய்ப் புலம்பிக் கொண்டிருந்தார். மானிடராய் பிறந்தவர்கள் பிராணிகளாய்ப் மாறி நெக்கி நெக்கித் தள்ளிக் கொண்டு முன்னேறினர். முதலில் நின்று கொண்டிருந்த பட்டிக்காட்டுப் பிறவிக்கு நிற்பதற்கே இடம் பற்றவில்லையாகையால்

இறங்குவதற்காக உள்ள வழியாகக் கீழே குதித்து, க்யூவின் கடைசி நபராகச் சேர்ந்து கொண்டது! அவரைப் பின்பற்றி அடுத்தவரும், அதற்கடுத்த வரும் வரிசையாகக் குதித்து பட்டிக்காட்டுக்குப்பின்னுல் நிற்க வேண்டியதாயிற்று! "முன்னுல்போ! முன்னுல்போ" என்று கண்டக்டர் கூவக் கூவ, ஒவ்வொருவராக முன்னுல் நகர்ந்து நகர்ந்து, வெளியேறும் வழியாக இறங்கி, மறுபடியும் க்யூவோடு சேர்ந்து, நகர்ந்து, ஏறிக்கொண்டிருந்தனர்! ஒரு பெரிய வளையம் போலாகி விட்ட அந்த க்யூ வரிசையின் ஆதி எது அந்தம் எது என்று புரியாத நிலை ஏற்பட்டு விட்டது! சற்று நேரம் வரையில் திகைத்து, அதிசயித்து நின்று விட்டார் கண்டக்டர். விஷயம் புரிந்ததும் அடக்கமாட்டாத கோபம் கொண்ட கண்டக்டர் தனது "விசிலை" அழுத்தமாக ஊதிவிடவே, பஸ் புறப்பட்டு விட்டது! பாவம், க்யூ முறைப்படி இடம் பெற்றிருக்க வேண்டியவர்களில் பலர் கீழே நிற்க வேண்டியதாயிற்று! இந்தத் தமாஷை வேறெங்கிலும் இனிமாய் அனுபவிக்க முடியுமா?

5. எந்தக் க்யூவிலும் இரண்டு நுனி இருக்கிறதல்லவா? பஸ்ஸின் வாசற்படி க்யூவின் வால்பக்கத்தின் சமீபத்தில் வந்து நின்று விடும் போது அங்கே உள்ளவர்கள் லபக்கென்று திரும்பி மடமடவென்று ஏறிவிட ஓர் அரிய வாய்ப்பு கிடைக்கிறது! அந்த எதிர்பாரா அதிர்ஷ்டத்தை "டெர்பி ஸ்வீப்

பெண் கல்வி

கல்வி சம்பந்தப்பட்டவரையில் ஆண்களுக்கும் பெண்களுக்குமிடையே, அடிப்படையில், கல்வியை மட்டும் மனத்திற்கொண்டு பார்த்தால் அதில் வித்தியாசம் இருப்பதற்கில்லை. ஆனுல் அதே சமயத்தில் வாழ்க்கைக்கு உபயோகமான அம்சங்களைப் பரிசீலனை செய்தால், சில அம்சங்களில் பெண்களுக்குக் கல்வியின் குறிப்பிட்ட ஒரு மாதிரி மிகவும் அவசியம் என்பதில் சந்தேகமே கிடையாது. சங்கீதம், சித்திரம், குடும்பக் கலை முதலியவை குறிப்பாகப் பெண்கள் கல்லூரியில் நடத்தப்படுகின்றன. இத்துடன் எல்லோருக்கும் பொதுவான படிப்பிலும் பெண்கள் பயிற்சி பெற வேண்டியது அவசியமாகும். இது தேசிய அபிவிருத்திக்கு உதவியாக இருக்கும்.

கல்வியின் நோக்கம் படிப்பில் தேறிப் பட்டம் பெறுவது மட்டுமன்று. ஒழுங்கு, சமூக நடவடிக்கைகள், தற்காலப்போக்கு ஆகியவை கொண்டவைகளாக இருக்கவேண்டும். தாய் தான் குழந்தைக்கு வழிகாட்டியாவாள் என்பதை நாம் ஒப்புக்கொள்ள வேண்டியதற்குக் காரணமாக இருக்கிறது என்பது அதற்கான காரணத்தை விசாரிக்கையில் தெரிய வருகிறது. அதிர்ஷ்டவசமாக இந்தியாவில் சேர்ந்த குடும்பமாக இல்லாவிட்டாலும், வயது வந்தவுடனே அவனே அல்லது அவளோ பிரிந்து வாழ்வதை விரும்பாமல் குடும்ப வாழ்க்கைக்கு ஆதரவிருப்பது ஓர் நல்ல அம்சமாகும்.

டாக்டர் A. லட்சுமண சுவாமி முதலியார்

கூடிய அதிர்ஷ்டத்தோடு ஒப்பிட்டால் கூட மிகையாகாது!

6. க்யூவானது வேறு எந்த நாட்டுக்குப் பொருந்தினுலும் பொருந்தாவிட்டாலும் மகரிஷிகளும், தவச்சிரேட்டர்களும் அவதரித்த பரதகண்டமாகிய நமது இந்தியக் குடியரசு நாட்டுக்கு நிச்சயமாகப் பொருந்தும்; அத்தியாவசியமானதும் கூட. எப்படி யென்ருல், நம்முடைய தனிப்பெருமையெல்லாம் எது? நம்முடைய சமயக் குறிக்கோளை யடையக் கூடிய அடிப்படை தத்துவ மென்ன? நம்முடைய முன்னோர்களும் பெரியோர்களும் அறநெறிப் பாதையை வகுத்துக் கொடுத்து, மெய் ஞான அறிவு பெறுவதற்கான சூட்சமத்தையும் விளக்காமல் விளக்கி இருக்கின்ருர்களே, அதன் நோக்கம் தான் என்ன? தவம்! தவம்! கோரத்தவம்!! அப்படிப்பட்ட கோரத்தவம் செய்து பழகுவதற்கான அடிப்படைக் கடைக்காலே க்யூ நமக்கு அமைத்துத் தருகிறது என்ருல் ஆச்சர்யப்படுவதிற்கில்லை. சாதாரணமாய், நின்றுகொண்டே தவம் புரிவோரையும் ஒற்றைக் காலில் மாற்றி மாற்றி நின்று கொண்டே தவம் கிடப்போரையும் சாத்வீக நெறிப் பயிற்சிக்காகச் சிலர் தங்கள் கண்களை மூடிக் கொண்டே நின்று ஆனந்த தியானத்திலிருப்போரையும் தினசரி க்யூவில் நாம் கண்கூடாகக் காண்கிருேமல்லவா? மேலும் சிலர், தங்களுக்குப் பூஜிதமான மந்திரங்களை முணு முணுத்தவாறே ஜெபத்தை முடித்துக் கொள்வதற்காக க்யூவை உபயோகப் படுத்திக் கொள்வதையும் நம்மால் ஊகிக்க முடிகிறதல்லவா? வேறு சிலர், க்யூவில் நிற்கும் போது தான் ராகம் - பாட்டுக்களைச் சாதகம் செய்ய முடிகிறது! வரவு - செலவு கணக்குகளை எழுதி "அட்ஜெஸ்ட்" செய்து கொள்ளும் பலரையும் க்யூவில் காணமுடிகிறது! இன்னும் சிலரைக் கூர்ந்து கவனித்து ஆராய்ந்ததில் ஏதோ வசனங்களை கேள்வியும் பதிலுமாகப் பேசி, தனக்குத்தானே ஒத்திகை செய்து கொள்வது கூட தெரியவந்தது! உண்மையில் நன்ருக யோசித்துப் பார்க்குங்கால் நமது நாட்டின் இன்றியமையாச் சோதரச் செல்வங்களான பிச்சையெடுப்போரின் உள்ளப் பிரார்த்தனைக்கு ஆண்டவன் செவி சாய்த்து அருளிய வரப்பிரசாதமாகத் தான் இருக்க வேண்டும். இந்த க்யூ என்றே தெரியவரும்! க்யூவின் இருபக்கங்களிலும் மேற்படி சோதரப் பெருமக்கள் சிரமமில்லாமல் ஒருகோடியிலிருந்து மறுகோடி வரை நடமாடக்கூடிய வசதி, க்யூவற்ற கூட்டத்தில் சாத்தியமாகுமா?

எதிர்ப்பு :

1. "க்யூ" என்ற பதத்தின் சப்தமே நன்ருக இல்லை. அதில் சூழ்ச்சி தொனிக்கிறது. மேலும் அந்நிய நாற்றம் வீசுகிறது.

2. க்யூவரிசை யொன்றைப் பார்க்கும் சிந்தனைச் சிற்பியின் உள்ளத்தில் குமுறும் உணர்ச்சிகளைச் சப்தவடிவமாக்கினுல்கீழ் கண்ட முத்தான கவிதைச் சொற்கள் ஒலித்துச் சிதறும் :

"கேடு கெட்ட மானிடா உன்
கூருகெட்டுப்போச்சுதடா !
பாடுபட்டுத் தேடிய தன் —
மானம் பறிபோச்சுதடா !
ஆடுகளின் மந்தையைப் போல்
ஆள் கணக்கில் சேர்ந்தமடா
(பேடிகளாய்ப் போனமடா)
ஈடுபட்டு க்யூக்குழியில்
இறுக நாம் புதைந்தமடா !"

ஆகவே, க்யூ, மனிதனுடைய அடிப்படையான வீர்ய பண்பைக் - குழிதோண்டிப் புதைத்துவிடக் - கூடியதாக இருப்பதை உணர்கிறோம் !

3. க்யூவில் நின்று விட்டால் இயற்கை வேட்கைகளை மணிக் கணக்காகவும், சிற்சில சமயம் தேதிக் கணக்காகவும் கூட தேக்கி வைக்கும் படியான நிலை ஏற்பட்டு விடுவதால் சுகாதாரத்தைப் பாதிக்கக் கூடியதாய் இருக்கிறது.

4. க்யூவைக் கண்காணிப்பதற்கென்று ஓரிரு போலீஸ்காரர் நியமிக்கப்பட்டிருப்பதும், அவர்கள் க்யூவின் ஒரு கோடியிலிருந்து மற்றொரு கோடிவரை ஒவ்வொருவர் முகத்தையும் பார்த்துக் கொண்டே நடை போடுவதையும், வேண்டுமென்றோ வேண்டாமென்றோ நமக்கு முன்னால் நிற்பவரிடம் "பணப்பை பத்ரம் ஸார்!" என்று எச்சரிப்பதையும் எந்த யோக்யனால் சகித்துக் கொள்ள முடியும்? மானம் போனபின் வாழாமை மேலல்லவா ?

5. க்யூவுக்கும் ஜனநாயக முறைக்குமே பத்துநாள் தீட்டு. ஏதோ முதலில் நிற்கும் ஒரு பத்து அல்லது பன்னிரெண்டு பேர்களுக்கு கிடைக்கப்போகும் அனுகூலத்திற்காக பாக்கியுள்ள இரு நூறு பேர்கள் விட்டுக் கொடுக்க வேண்டியதாக இருப்பதைவிட ஜனநாயகச் சிதைவுக்கு வேறென்ன உதாரணம் வேண்டும் ? மெஜாரிட்டிக்குக் கிடைக்கவேண்டிய சலுகை மைனாரிட்டிக்கு கிடைத்துவிடும். ஜனநாயக முரண்பாட்டை திருத்தியமைக்க பெடரல் கோர்ட்டில் உடனடியாக தவா போட்டு சீர்படுத்திக் கொள்ள வேண்டும்!

6. முன்னாலும் பின்னாலும் சைனா பஜாரையோ, மூர்மார்க்

சந்திரமண்டலத்தில் மக்கள் வாழலாம்!

—★—

கி. பி. 2000-ஆவது வருஷத்திற்கு மேல் சந்திரமண்டலத்தில் ஒரு புதிய நாகரீகம் உருவாகுமென்றும் பிலடல்பியாவைச் சேர்ந்த ஐ. எம். லெவிட் என்ற நிபுணர் இங்கு ஒரு கூட்டத்தில் கூறினார். சந்திரமண்டலத்தில் மனிதர்களின் நிரந்தரமான காலனியே ஏற்பட முடியுமென்றும் ஆனால் நமக்குத் தேவையான எல்லா பொருள்களையும் பூமியிலிருந்து எடுத்துச் செல்லவேண்டியிருக்குமாகையால் சந்திரமண்டலப் பிரயாணத்திற்குச் செலவு பிரமாண்டமானதாக ஆகுமென்றும் அவர்குறிப்பிட்டார்.

—x—

கெட்டையோ அல்லது கொத்த வால் சாவடியையோ முண்டும் முடிச்சுமாய்த் தூக்கிக் கொண்டு நிற்கும் நபர்களின் உபத்ரவங்களை யாரால் பொறுத்துக் கொள்ள முடியும்?

இன்னும் இதைப் போன்ற பல அசௌகர்யமான காரணங்கள் இருக்கத்தான் செய்கின்றன. இதில் ஆச்சர்யம் என்ன வென்றால் க்யூவை ஆதரிக்கும் சர்க்கார் தங்கள் நிர்வாக விஷயத்தில் மட்டும் க்யூவைக் காற்று வாக்கில் தூற்றிவிட்டுத் தான் தோன்றித்தனமாய்ச் செயலாற்றி வருவதின் மர்மம் தான் நமக்குப் புரிவதில்லை. உதாரணமாக இதைப் பாருங்கள். வேலைக்கு மனு போட்டிருப்பவர்களை ஏதோ ஒரு தேதியில் வரச் சொல்லி கடிதம் அனுப்புகிறார்கள். அவர்கள் வந்து சேர்ந்தவுடன் க்யூ வரிசை நியதியை அனுசரித்து வேலை கொடுத்துவிட வேண்டியது தானே? அதை விட்டு விட்டு, தங்கள் இஷ்டம் போல் பரிட்சைசெய்து பொறுக்குகிறார்கள்! இது என்ன நியாயம்?

சத்யாக்கிரகம், மறியல், கலகம் முதலான செயல்களில் ஈடுபட்டுள்ளவர்களைத் துரத்தியடிக்க வேண்டிய அவசியம் நேரும் போது எவ்வளவு "அக்யூ" ரீதியில் நடந்து கொள்கிறது நமது போலீஸ் இலாகா என்பதைச் சிந்தியுங்கள்! கேள்வி முறை இல்லாமல் கலகம் செய்பவர் கூட்டத்தில் புகுந்து தடியடிப் பிரயோகம் செய்து விரட்டுகிறார்களே, அது என்ன நீதி? அவர்களைக் கூப்பிட்டு, க்யூவில் நிற்கச் சொல்லி வரிசைக்கிரமமாகத்தடியைப் பிரயோகித்து, "சரி, ஓடிப் போங்கள்" என்று சொல்லி, அனுப்பிவைக்க வேண்டியது தானே! இன்னும் இதைப் போல் எத்தனையோ விதங்களில் நமது சர்க்காரே க்யூவை அவமதிக்கிறது!

முடிவாக :

க்யூவை இன்றியமையாத தென்று தீர்மானித்துவிட்டால் உடனடியாகச் சில அவசர நடவடிக்கைகளையாவது எடுத்து க்யூ தொண்டர்களுக்கு உதவியளிக்க சம்பந்தப்பட்ட இலாகாக்கள் முன்வர வேண்டும். உதாரணத்திற்காக முக்யமான சிலவற்றைக் கீழே சொல்லியிருக்கிறேன்.

1. சினிமா கொட்டகை வாசலில் டிக்கெட்டுக்காக நிற்கும்கியூவின் 'திருத்தலைகளுக்கு' தொப்பிகள் வழங்கப்பட வேண்டும். பாதங்களுக்குப் பாதரட்சைகளும் வழங்கப் பட வேண்டும். டிக்கட்டைப் பெற்றுக் கொண்டு உள்ளே நுழையுமிடத்தில் இரு குண்டர்களை நிறுத்தி வைத்து தொப்பிகளையும் பாதரட்சைகளையும் பிடுங்கிக் கொண்டுவிடச் சொல்லி தைரியமான ஏற்பாடுகளைச் செய்துவிட கொட்டகைக் காரர்கள் பின்வாங்கக் கூடாது. மழை பெய்தால் க்யூவிற்குத் தார்ப்பாய் பிடிக்கப்பட வேண்டும். அதைப் பிடித்துக் கொண்டு நிற்க, சில சிப்பந்திகளுக்கு பிரத்யேகப் பயிற்சி அளிக்கப்பட்டு, "தார்ப்பாய் பிடிப்பு அலவன்ஸும்" வழங்கப்பட வேண்டும்.

க்யூவை நிற்க வைக்கும் இடத்தில் வரிசைக் கிரமமாக எண்கள் எழுதப்பட்டு சதுரம் சதுரமாக வர்ணம் தீட்டப்பட்டால் சௌகர்யமாக இருக்கும். சைக்கில் ஸ்டாண்டு குத்தகைக்கு விடப்படுவதைப்போல் க்யூவெளிகளையும் குத்தகைக்கு விடுவதால் க்யூவுக்குக் காரண கர்த்தாக்கள், க்யூவை ஆக்ரமிப்பவர்கள், குத்தகைதாரர்கள், சர்க்கார்-ஆக நான்கு சாராரும் பயன் பெற வழி ஏற்படுகிறது! க்யூவரி ஏற்படுத்தி குத்தகைதாரர்களிடமிருந்து வசூலிக்க ஆரம்பித்தால் இரண்டாவது அஞ்சாண்டுத் திட்டத்துக்குப்போக மூன்ருவது திட்டத்துக்கும் பணம் கொஞ்சம் மிகுதி நிற்கும் !

இவை போன்ற இன்னும் எத்தனையோ விதங்களில் க்யூ நாகரிக முறையில் அபிவிருத்தி செய்து முன்னேற்றமடைய உடனடியாக நமது சுதந்திர சர்க்கார் தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டு, அவசியமானுல் க்யூ இலாகா என்ருெரு இலாகாவையும் ஏற்படுத்தி அதைப் பரிபாலிக்க க்யூ மந்திரி என்ருெரு மந்திரியையும் போட்டு வைக்கலாம் !

கணக்குத் தெரியாத விஞ்ஞானி

தலைப்பைப் பார்த்து விஞ்சானிகளுக்கா கணக்குத் தெரியாது என்று நினைத்து விடாதீர்கள். ஆனுல் உண்மையில்இப்படி நடந்தது. கணக்கின் மூலமாகவே தத்துவத்தையும், விஞ்ஞானத்தையும் ஒரே நிலையில் கொண்டு வந்த விஞ்ஞான உலகத் தந்தை **ஈங்ஸ்டின்** டிராம் வண்டியில் சென்று கொண்டிருந்த போது டிராமிற்குக் கொடுக்க வேண்டிய சில்லறையைக் கொடுக்கத் தெரியாது விழித்தாராம். அவரது மனைவி தான் சில்லரை கொடுத்தாளாம் ஒரு நாள்!

எப்படி இருக்கிறது பாருங்கள்! இதனுல் ஈஸ்டினை கணக்கியல் அறியாதவர் என்று கருதி விடாதீர். அவர் தான் கணக்கியலையும் அறிவிற்கலையையும் ஒன்று படுத்தியவர்.

பழமையும் புதுமையும்

(தே. ப. பெருமாள்)

1

வாட்டும் பழமையிருள்
  வாழ்விழந்து போய்மறைய,
பாட்டின் எழிலமுதம்
  பாவாணர் நெஞ்சிலெழ,
தீட்டும் உதயமகள்,
  திருமுகத்துச் சோபை
    யினைக்
காட்டும் கதிர்க் கோமான்
  காணென்றான் புதுமை
    யினை!

2

அரும்பவிழும் காவுகளில்
  ஆடிமகிழ் பொன்வண்டு
விரும்பாத பழமைக்கு
  விடைதந்து, வையத்தில்
உருவாகும் ஆக்கமதை
  உணர்த்துகின்ற உணர்ச்சி
    யினில்
தருகின்ற இசையமுதும்
  சாற்றிடுமே புதுமையினை!

3

தொல்லைத் துயரடிமைத்
  துட்ட அரக்கனையே
கொல்லும் செயல் முடித்துக்
  கொண்ட சுதந்திரத்தில்.
வெல்லத் தமிழ் நாடு
  விரும்பும் நலத்திட்டம்
நல்ல வாழ்வளிக்க
  நாடுவதும் புதுமையினை!

4

இதயப் பெருங்கடலும்
  எழுப்புகின்ற சிந்தனையில்,
விதவிதமாய்த் தோன்றி
  மேவியெழுங் கற்பனையில்,
நிகழும் நடைமுறையில்
  நிகழ்த்துகின்ற செயல்
    களிலே
குதுகுதுப்பாய் நோக்குவதும்
  குற்றமிலாப் புதுமையினை!

5

வாழ்வில் கதியளிக்கும்
  மதுரச் செழுங்கலையில்,
தாழ்வு நிலை போக்கித்
  தகவு தரும் கல்வியினில்
யாழ்போல் இன்னொலி செய்
  இதமார் கவிமுகிலின்
சூழ்வில் விரும்புவது
  சுகமளிக்கும் புதுமையினை!

6

பழமைப் பகை விலக,
  பாழாக்கும் பேரொழிய,
அழிவுக் கருவியெலாம்
  அகிலத்தை விட்டொழிய,
தழையும் நல்லுறவில்
  சமைகின்ற மனப்பண்பில்,
விழைவது சாந்தியெனும்
  விண்ணின்பப்
    புதுமையினை!

சிறுவர் பகுதி

பிஞ்சு உள்ளத்திலே எழுந்த ஆசை! அது நிறை வேறிற்று—இல்லை......ஏன்?

ஆசை நிறைவேறியது

பூவண்ணன், B.A. Hons.

1

"இந்தக் கோயில் எவ்வளவு அழகாக இருக்கிறது! இதைப்போல ஐந்து கோயில்களை இந்தக் கடல் விழுங்கி விட்டதே"

"ஆமாம்! அவைகள் மிக மிக அழகாக இருக்கும் என்று எண்ணுகிறேன். அவற்றைப் பார்த்தவர்கள் நிச்சயம் பாக்கியசாலிகள்"

யாரோ இருவர் மாமல்ல புரக் கடற்கரையில் நின்று பேசிக் கொண்டிருந்தனர். கடலலைகளின் சத்தத்தையும் மீறி அவர்கள் பேச்சு, அருகிலிருந்த முத்துமணியின் காதில் விழுந்தது. முத்துமணி கடற்கரையிலிருந்த அந்தக் கோயிலைப் பார்த்தான். பிறகு கடலைப் பார்த்தான். அவனிடமிருந்து நீண்ட பெருமூச்சு ஒன்று வெளி வந்தது.

முத்துமணி கடற்கரை கோயிலை யடுத்திருந்த கடல் அலைகள் மோதிக்கொண்டிருக்கும் கற்சுவரை யடைந்தான். அங்கிருந்தபடியே கடலைப் பார்த்தான். கடலுக்குள் இருப்பதாகக் கூறும் ஐந்து கோயில்களும் கண்ணுக்குத் தெரிகிறதா என்ற ஆவலுடன் கடலை ஊடுருவிப் பார்த்தான். ஆனால் கண்ணுக் கெட்டிய வரை உப்புநீர் பரப்பு மட்டுமே தெரிந்தது.

"அற்புதமான ஐந்து கலைக் கோயில்களை நான் பார்க்கவே முடியாதா?" என்று தன்னையே கேட்டுக் கொண்டான். "முடியாது! முடியாது!" என்று கூறுவதைப் போல அலைகள் கற்சுவர் மீது மோதின! சூரியன் மறைந்தான். எங்கும் இருள் சூழ்ந்தது. முத்துமணி கடலைப் போல எண்ண அலைகள் எழும்பிக் கொண்டிருக்கும்

தன் கொந்தளிக்கும் உள்ளத்துடன், கடற்கரையை விட்டுச் சென்ருன்.

2

முத்துமணி ஒரு சிற்பியின் மகன். அவன் அப்பா கோயில்களில் சிற்பம்செதுக்கும்வேலையிலிருந்தார். அவன் தாய் இறந்து பல ஆண்டுகளாகி விட்டன. முத்துமணி தன் தந்தை வேலை செய்யுமிடத்திலேயே எப்போதும் இருப்பான். கல்லிலே படும் உளியின் 'டங் டங்' என்ற ஒவ்வொரு சத்தமும் அவன் இதயத்தை மகிழ்விக்கும் இன்னிசையாக இருந்தது. சிற்பக் கலையின் நுணுக்கங்களை அறிந்த முத்துமணி சிற்பங்களை நேசித்தான்; உயிருக்கு மேலாக நேசித்தான்.

இந்த நிலையில்தான் அவன் தந்தை திடீரென்று மாரடைப்பால் இறந்து விட்டார். அனாதையாகி விட்ட முத்துமணி தன் பசியைப் போக்கப் பிச்சையெடுத்தான். என்ருலும் சிற்பங்களை மட்டும் மறக்கவில்லை. எங்கெங்கோ சுற்றியலைந்து, கோயிற் சிற்பங்களைக் கண்டு களித்த முத்துமணி முடிவில் மாமல்ல புரத்திற்கு வந்தான்.

பல்லவ மன்னர்களின் முயற்சியால் உருவான சிற்பங்களைக் கண்டான். அவனுடைய கலை உள்ளம் அந்த இடத்தைவிட்டுச் செல்ல விரும்பவில்லை. எனவே அங்கேயே தங்கிவிட்டான். அங்கு வருபவரிடம் பிச்சையெடுப்பான்; கூலி தூக்குவான்; வேறு சில்லறை வேலைகள் செய்வான். கிடைப்பதைக் கொண்டு பசியைப் போக்கிக் கொள்வான். எதுவுமே கிடைக்கவில்லை யென்ருல், கண்ணையும் கருத்தையும் கவரும் சிற்பங்களைக் காண்பதில் தன் பசியை மறப்பான்.

அங்கு வந்து செல்பவர்கள் அடிக்கடி கடலில் ஐந்து கோயில்கள் மூழ்கி விட்டன என்று கூறுவதைக் கேட்டான். சிற்பத்தைக் காண்பதிலேயே களிப்படையும் முத்துமணி எப்படியாவது ஒரே ஒரு முறை கடலுள் மறைந்திருக்கும் கோயில்களில் ஒன்றையாவது பார்த்து விடுவது என்று தீர்மானித்தான். எப்படிப் பார்ப்பது என்பதுதான் அவனுக்கே தெரியவில்லை. மூழ்கிய கோயிலைப் பார்க்க வேண்டும் என்ற தன் ஆசை நிறைவேறுமா என்று ஏங்கினன். அடிக்கடி கடற்கரையில் நின்று கடலையே உற்று நோக்குவதும், எப்படி கடலுள் இருக்கும் கோயிலைப் பார்ப்பது என்றும் யோசிப்பதும அவனுடைய அன்ருட வழக்கமாய்விட்டன.

3

ஒரு நாள்!

கடற்கரையின் ஓரத்தில், கடற்கறை கோயிலுக்கு வெகு தூரத்தில் ஓர் உடைந்த கட்டு மரம் மண்ணில் புதையுண்டிருப்பதைக் கண்டான் முத்து மணி. மணலைத் தள்ளிக் கட்டு மரத்தைப் பார்த்தான். கட்டுமரம் ஓரளவே பழுது. அதன் அருகே உடைந்த துடுப்பும் இருந்தது. "அதில் ஏறிக் கொண்டு கடலின் நடுவே சென்று கடலில் குதித்து விட்டால், என்ன? அங்கே தானே ஐந்து கோயில்களும் இருக்கின்றன!" என்று எண்ணினான். பிறகு கட்டு மரத்தை அங்கேயே போட்டுவிட்டுச் சென்றான்.

தினமும் முத்துமணி கட்டு மரம் இருக்கும் இடத்திற்குச் சென்று, அதில் ஏறிக்கொண்டு முக்கிய கோயிலைப் பார்க்கச் செல்லலாமா என்று எண்ணி, பிறகு அவ் விதம் செய்யாமல் சிறிது பயத்துடன் திரும்புவது வழக்கம்.

ஒருநாள் மாமல்ல புரத்திற்கு இரு சரித்திர ஆசிரியர்கள் வந்தார்கள். அவர்களுள் ஒருவர், "இதோ இந்தக் கரையின் ஓரத்தில் தான் முக்கிய கோயில்கள் இருக்க வேண்டும் என்று நினைக்கிறேன். கோயில்கள் ஒன்றன் பின் ஒன்றாக இருக்கலாம். கப்பல்கள் வழி தவறி இப்பக்கம் வந்தால் நீருள் மறைந்திருக்கும் கோயில்களில் மோதி

உடைந்து விடும். அதனுல் தான் இங்கு ஒரு கலங்கரை விளக்கம் (லைட் அவுஸ்) இருக்கிறது. என்ருவது ஒரு நாள் திடீரென்று கடல் நீர் வற்றி விட்டால், நாம் அந்தக் கோயில்களைக் காணலாம்'' என்று கூறினுர்.

அதைக் கேட்டுக் கொண்டிருந்த முத்துமணியின் ஆசை அதிகமானது. எப்படியாவது அந்தக் கோயில்களில் ஒன்றையாவது பார்த்து விடவேண்டும் என்ற ஆசை விநாடிக்கு விநாடி அதிகரித்தது.

அன்றிரவு!

முத்துமணி, கட்டு மரத்தில் ஏறிச் சென்று கடலுள் குதித்து நீருள் மூழ்கிய கோயில்களை காண்பதைப் போல ஒரு கனவு கண்டான். உடனே விழித்துக் கொண்டான். தான் கண்டதெல்லாம் கனவு என்று உணர்ந்தான்.

ஸ்விஸ் & ஜெர்மன்

உயர்ந்த

கடிகாரங்களுக்கு

: சிறந்த இடம் :

V. G. பன்னீர் தாஸ் & கோ.,
49, ஜீனிஸ் ரோடு,
சென்னை-15.

“முத்து! உன் எண்ணம் நிறைவேற கனவு வழி காட்டி விட்டது. உனக்கு உண்மையில் மறைந்த கோயில்களைக் காண வேண்டும் என்ற ஆசையிருந்தால், உடனே போ! கட்டுமரத்தில் ஏறிக் கடலில் செல்லு! உன் ஆசை நிறைவேறும்! போ! உடனே போ!'' என்று அவன் உள்ளம் உரைத்தது. ஆசை அவனைத் தூண்டியது. தான் படுத்திருந்த இடத்தை விட்டு எழுந்து அந்த நள்ளிரவிலே கட்டு மரத்தை நோக்கி ஓடினுன் முத்துமணி!

வானத்தில் நிலா தன் பால் ஒளியை வீசிக் கொண்டிருந்தது. முத்துமணி கட்டு மரத்தைக் கடலில் உந்தித் தள்ளினுன். அதில் கிடந்த முறிந்த துடுப்பால் நீரைத் தள்ளினுன். கட்டுமரம் சுருண்டு எழும் அலைகளைத் தாண்டிச் சென்றது.

இன்னும் சிறிது நேரத்தில் பழந்தமிழர் கண்ட சிற்பக் கோயிலை — கலைக்கோயிலைக் காணப் போகிறேம் என்ற ஒரே எண்ணத்துடன் கட்டு மரத்தைச் செலுத்தினுன் முத்துமணி!

கட்டுமரம் கரையை விட்டுச் சிறிது தூரம் தான் சென்றிருக்கும். திடீரென்று கட்டு மரம் எதன் மீதோ மோதி, முத்துமணியைக் கடலில் தள்ளியது. நீரில் விழுந்த முத்து

மணி கட்டுமரம் எதன் மீது மோதியது என்பதைப் பார்த் தான். என்ன அதிசயம்! கடற் கரையிலிருந்த கோயிலைப் போன்ற ஒரு கோயில் அங்கி ருந்தது. முத்துமணி நீரில் மூழ் கிய வண்ணம் அந்தக் கோயி லைப் பார்த்தான். 'என் ஆசை நிறைவேறியது' என்ற திருப்தி யுடன் அதைப் பார்த்துக் கொண்டே கடலின் ஆழத்தில், சென்ருன். சில விஞடிகளில் கடலின் அடித்தளத்தை முத்துமணி தொடவில்லை! அவன் பிணம் தொட்டது!

முத்துவின் கட்டுமரம் உண் மையில், கடலிலிருந்த ஒரு சாதாரணப் பாறை மீதுதான் மோதியது. மூழ்கிய கோயிலைப் பற்றியே எண்ணிக் கொண்டி ருந்த, சிற்பததை விரும்பும் அவனுக்கு அந்தப் பாறை பழம் பெரும் கோயிலாகத் தெரிந்தது. மூழ்கிய கோயிலைப் பார்க்க வேண்டும் என்று விரும்பிய முத்துமணி தன் ஆசை நிறைவேறியதாக எண்ணி நிம்மதியாக இறந் தான்!

ஐந்து கலைக் கோயில்களை விழுங்கிய கருணையற்ற கடல், சிற்பத்தைத் தன் உயிரெனக் கருதும் முத்துமணியை விழுங் கிய பிறகும் திருப்தியடையா மல், கடற்கரைக் கோயிலை யும் விழுங்கும் பேராசை யுடன் தன் அலைகளைக் கரையில் மோதவிட்டுக் கொண்டிருந்தது!

★

ஷாவும் உதவியாசிரியப் பதவியும்

ஒரு சமயம் நாடகப் பேராசிரியார் பெர்ஞட்ஷா அவர் களை, ஒரு பத்திரிகை ஆசிரியர், தமக்கு உதவி ஆசிரியராக நியமிக்க, அவரை அழைத்துக் கேட்டர்ராம். அவர் மறுத்து விட்டாராம். அதற்குக் காரணம் என்னவென்று அறிய விரும்பியஆசிரியர்,''ஏன், நீர் எவ்வளவு சம்பளம் கேட்டா லும் பரவாயில்லை, தருகிறேன்'' என்ருராம். அதற்கு ஷா, ''சம்பளத்தைப் பற்றி நான் கவலைப்படவில்லை. அது எனக் குப் பிடிக்காத தொழில்'' என்று கூறிவிட்டு வெளியே வந்தா ராம். அவர் வெளியே வந்ததும் அவரது நண்பர், ''இந்தச் சமயம் நீ ஒப்புக் கொண்டால் தான் என்ன கெட்டுப் போய்விட்டது ?'' என்று கேட்டதற்கு, ஷா, '' ஆசிரி யரின் நண்பர் பெயர் போட்டு கட்டுரை எழுதப் பழக வேண்டும். இரண்டாவதாக தம் சொந்தப் பெயரில் எழு தப்படும் கதைகளிலோ, கட்டுரைகளிலோ, ஆசிரியரின் மனைவியின் கத்திரிக் கோலுக்கு இரையாகி, அவ்வம்மை யின் சொந்தக்கருத்துகளை நுழைக்கமுனைவர். இந்த முறை கள் எனக்குப் பிடிக்காது !'' என்று பதில் அளித்தாராம்.

நாடகம் பட்ட பாடு

முத்தையா மூப்பனார்: என்ன சுப்பையா, அத்தி பூத்த மாதிரி?

சுப்பையா: எல்லாம் தங்களைப்பார்க்கத் தான்.

மு. மூ: அடே. அப்பா. ஆதாயம் இல்லாமல் எவனாவது ஆற்றோடு போவானோ?

சுப்: ஆதாயம் இல்லாமல் இல்லை. அதில் தங்களுக்கும் பங்கு உண்டு.

மு. மூ: நன்றாய்ச் சொன்னாய்? எங்கேயாவது ஓநாய் ஆட்டுக் குட்டிக்குப் புல் பறித்துக்கொடுக்குமாம் நாம் இருவரு?

பி. எக்ஸ். ஆர்

வியாபாரிகள் தானே ஹ ஹ்ஹ.

சுப்: அப்படியில்லை. ஒரு நல்ல 'பிஸ்னஸ்' கொஞ்சம் பணம் போட்டால் போதும்; நிறைய லாபம் கிடைக்கும்.

மு. மூ: சுப்பையா, என்னிடம் பணம், லாபம் என்று சொல்லாதே. 'பிஸ்னஸ்' 'பிஸ்னஸ்' என்று அலைந்து என் தலைமயிர் எல்லாம் போய்விட்டது. இந்த வியாபாரிகளே இப்படித்தான் எப்போது பார்த்தாலும் பணம்



பீடி சக்கரவர்த்தி
ஹ.பி.சொக்கலால்
ராம்சேட் பீடி
TRADE MARK
REGISTERED
ஹ.பி.சொக்கலால்
RAMSAIT
BEEDI
ராம்சேட்
பீடி
முக்கூடல்
INDIA No.5901
CEYLON No.5929
By
RAJAN & Co. SVKS.

லாபம்' இவைகளைப் பற்றித் தான் பேசுவார்கள்.

சுப்: என்ன ஸார், இப்படி மனம் உடைந்து பேசுகிறீர்கள்? ஒரு காலத்தில் காலையில் ஆறு மணியிலிருந்து இரவு பத்து மணி வரை கடையிலே உட்கார்ந்திருந்தவர் தாங்கள் தானே!

மு. மூ: அது ஒருகாலம், தம்பீ! என்னதான் பணம் சம்பாதித்தாலும் உலகத்தில் மனிதனுக்குக் கொஞ்சம் புகழ் இல்லாவிட்டால் வாழ்ந்து என்ன பயன்?

சுப்: புகழா? அதைப் போலதரும் மதுபானம் என்றல்லவா படித்தவர்கள் கூறுகிருர்கள்.

மு. மூ: இப்படிச் சொல்லிச் சொல்லி படித்தவர்கள் புகழ் ஏணியின் உச்சத்தை அடைந்து விடுகிருர்கள். நாம் அவர்களைப் பார்த்துக் கொட்டாவி விட்டுக்கொண்டிருக்க வேண்டியதுதான்.

சுப்: என்ன, ஸார். கொஞ்சம் பொறுமையாய் இருங்கள். புகழ் தங்களைத் தேடி வரும். உலகத்தில் சிலர் பிறக்கும் போதே புகழுடன் பிறக்கிருர்கள். உழைப்பினுல் புகழைச் சம்பாதித்துக் கொள்ளுகிருர்கள் வேறு சிலர்......சிலர் மேல் புகழ் திணிக்கப்படுகிறது.

மு. மூ: நான் எவ்விதத்திலாவது புகழை அடைவதெனத் தீர்மானித்து விட்டேன்.

சுப்: நீங்கள் இன்னும் கொஞ்சம் பணம் சேர்த்துவிட்டால் நம் ஊரில் மதிப்பிற்குரிய கனவான் ஆகிவிடுவீர்கள். அதற்குப் பின் பஞ்சாயத்துபோர்டு பிரஸிடென்ட் பதவிக்கு நின்ருல் நிச்சயம் வெற்றி யடைவீர்கள். அப்பொழுது புகழ் உங்களைவிட்டு ஓடியா போய் விடும்?

மு. மூ: போ, தம்பி, போ. குட்டுப் பட்டாலும் வைர மோதிரக் கையால் குட்டுப் படவேண்டும். அந்தப் பதவி எல்லாம் யாருக்குவேண்டும்?

சுப்: அப்படியாளுல் தாங்கள் என்ன செய்ய நினைக்கிறீர்கள்?

மு. மூ: நான் சிறந்த நாடக ஆசிரியனுக விரும்புகிறேன். நாடகத்தை எழுதிவிட்டேன். அதை அரங்கேற்ற சகல ஏற்பாடுகளும் செய்துவிட்டேன்.

சுப்: அப்படியாளுல், தாங்கள் உண்மையாகவே நாடக ஆசிரியராகத்தான் விரும்புகிறீர்களோ?

> நாணயம், உயர் குலப்பிறப்பு, மானம், ஒழுக்கம், மனிதத்தன்மை, அன்பு, இவை யாவும் புத்தகத்தில் உள்ள சொற்கள். வாழ்க்கையில் இவை யாருடைய அனுபவத்திலும் வருவதில்லை.
>
> —வி. ஸ. காண்டேகர்.

மு. மூ: இதில் என்ன விளை யாட்டு? முன் வைத்த காலை பின் வைக்கப் போவதில்லை.

சுப்: என்ன, ஸார். கடையில் உட்கார்ந்துகொண்டு, 'கணீர் கணீர்' என்று பணத்தை பெட்டியில் வாங்கிப் போடு வதை விட்டு விட்டு, பேனு வும் கையுமாய் பிசாசு பிடித் தவன் மாதிரி உட்கார்ந் திருக்க பிரியப்படுகிறீர்களே. மேலே போக வேண்டு மானுல் கொஞ்சம் அதிர்ஷ்டம் வேண்டாமா, ஸார்?

மு. மூ: என்னுடைய கிரகம் நன்ருகத்தான் இருக்கிறது. என்னுடைய வாரப் பலனைப் பார்த்தேன். "திடீரென அதிர்ஷ்டம் உண்டாகும். உத் தியோக உயர்வு ஏற்படும்" என்றிருக்கிறது.

சுப்: அப்படியானுல் மிகவும் நல்லது. தங்களுக்கு அதிர்ஷ் டம் வந்தால் அது எனக்கும் வந்தமாதிரித்தான்.

(போகிருர்)

x x x

மு. மூ: வாருங்கள், மிஸ்டர் இளங்கோ! தங்களுடைய வர வைத்தான் ஆவலுடன் எதிர் பார்த்துக் கொண்டிருக் கிறேன்.....நாடகத்தை முழு தும் படித்துப் பார்த்தீர்களா?

இள: ஒரு எழுத்து கூட விடா மல் படித்து விட்டேன். இவ் வளவு சிறந்த நாடகம் இது வரை மேடையில் நடிக்கப் பட்டதில்லை என்பதுதான் எனது தாழ்மையான அபிப் பிராயம்.

மு. மூ: உண்மைதானு?

இள: முற்றிலும் உண்மை. தங்களுடைய கதாபாத்திரங் கள் உயிருள்ள மக்களாகவே காட்சியளிக்கிருர்கள். தாங் கள் எவ்வளவு தந்திரமாக அவர்களுடைய குண பான்மையைக் கொஞ்சங் கொஞ்சமாக வெளிப்படுத்தி யிருக்கிறீர்கள்.

மு. மூ: அப்படி என்ன எழுதி விட்டேன்.

இள: எங்கு திறமை காணப் படுகிறதோ அதை ஒப்புக் கொள்ளாமல் முடியுமா? நாடகத்தின் "பிளாட்" எனக்கு மிகவும் பிடித்திருக் கிறது. காலத்திற்குத் தகுந்த வாறு எழுதி யிருக்கிறீர்கள்.

மு. மூ: இப்படி எழுதினுல் தானே "மார்க்கெட்"டில் நாடகம் விலைபோகும்.

இள: உண்மை, தாங்கள் பெரிய இலக்கிய கர்த்தா. நாடகத் தமிழில் எவ்வளவு அழகாகஎழுதியிருக்கிறீர்கள்! சில இடங்களில் வசனம் பிர மாதமாக இருக்கிறது. அடுக் குத் தொடர்களும், எதுகை அமைப்பும்......அட.....அட; என்ன சொல்வது? காட்சி அமைப்பும் அப்படியே.

மு. மூ: தங்களுக்கு எந்தக் காட்சி மிகவும் பிடித்திருக் கிறது?

இள: சந்தேகமில்லாமல் சிறைச்சாலைக் காட்சிதான்.

மு. மூ: அப்படிச் சொல்லுங் கள். என்னுடைய எழுத்து வன்மை முழுவதும் அதில் தான் காண்பித்திருக்கிறேன்.

இள: தங்களைப் புகழுகிறேன் என்று எண்ண வேண்டாம். எழுத்தாள நிபுணன் ஒருவனின் உதவியின்றித் தாங்கள் இக்காட்சியை எழுதியிருக்க முடியவே முடியாது.

மு. மூ: ஆசிரியரவர்களே, உண்மையாகச் சொல்லுகிறேன். நாடகம் ஆரம்ப முதல் முடிவுவரை நானே எழுதினேன். எல்லாம் என் கைச் சரக்கே.

இள: அந்தக் காட்சியில்தான் தாங்கள் கற்பனையின் உச்சத்தை அடைந்திருக்கிறீர்கள். அதை எழுதும்போது தங்களுடைய கற்பனு சக்தி கொழுந்துவிட்டு எரிந்திருக்க வேண்டும்.

மு. மூ: அப்படியா ?

இள: அதனுல்தானே ஞானி, கவிஞன், பைத்தியக்காரன் இம்மூன்று பேரும் ஒரே ரகத்தைச் சார்ந்தவர்கள் என்று மேல் நாட்டுக் கவிஞன் ஒருவன் கூறுகிறுன்.

மு. மூ: ஏன் ?

இள: அம்மூவரும் பாமர மக்களின் அறிவிற்கும், புலனிற்கும் எட்டாத விஷயங்களை அறிந்து எடுத்துக் கூறுகிறுர்கள்.

மு. மூ: நாடகத்தின் முடிவு எப்படி ?

இள: கரும்பு தின்பதைப் போல்தான், ஸார். மிகவும் திடுக்கிடும்படி முடித்திருக்கிறீர்கள். நாடகத்தின் முடிவில் யார்தான் கண்ணீர் விட மாட்டார்கள் ?

மு. மூ: நாடகம் வெற்றியாயுமா ?

இள: நாடக ஆசிரியர் இந்தக் கவலையை மட்டும் விட்டுவிட வேண்டும். வெற்றி தோல்வி நம் கையிலா இருக்கிறது ?

மு. மூ: ஆனல் இந்த நாடகத்தில் தான் இருக்கிறது எனது எதிர்கால வெற்றி.

இள: நீங்கள் அதைப்பற்றி நினைத்து மனதைப் புண்படுத்திக் கொள்ள வேண்டாம். நாடகம் சிலருக்குப் பிடிக்கும். சிலருக்குப் பிடிக்காது. பிடிக்காவிட்டால் கத்துவார்கள். சீட்டியடிப்பார்கள், அல்லது ஊளையிடுவார்கள். அதைப் பற்றி நமக்கென்ன கவலே.

மு. மூ: தங்கள் அபிப்பிராயத்திற்கு என் நன்றி.

இள: நாடகம் அரங்கேற்றம் முடிந்தவுடன் என்னுடைய

உரிமை

துப்பாக்கிகளோ, போர்க் கருவிகளோ மெய்யான உரிமையை ஒருபோதும் அளியா. மக்கள் தங்கள் நேர்மையான கடமைகளை உணரும் போது தான் - அவற்றைச் செயலில் கையாளும் போதுதான் உரிமை என்பதைப் பெற உரிமைபெற்றவர் ஆவர். அரசியல் உரிமை பெறுவது 'மனித உரிமை' பெறுவது ஆகாது. மனித உரிமை வேறு; மண் உரிமை வேறு. அவ்விரண்டும் இந்தியாவுக்கு வேண்டுவனவே. ஆயின், முதலில் வேண்டப்படுவது மண் உரிமை.

—கவி தாகூர்.

"பழரசம்" பத்திரிகையில் தங்களுடைய புகைப் படத்தைப்போட்டு ஒரு விமர்சனம் எழுதி விடுகிறேன். அதன் பிறகு பாருங்கள், உங்கள் பெயர் அடிபடுவதை.

மு. மூ: வணக்கம். நேற்று ஐம்பது ரூபாய் வேண்டுமென்றீர்களே. அதைக் கணக்கப்பிள்ளையிடம் பெற்றுக்கொண்டு போங்கள்.

இள: மிகவும் நன்றி போய் வருகிறேன்.

x x x

மு. மூ: வாருங்கள், சுந்தரம். என்ன கார்த்திகை பிறையை கண்ட மாதிரி இருக்கிறதே?

சுந்தரம்: தாங்கள் பலே பேர் வழி. பெரிய நாடக ஆசிரியர் ஆகிவிட்டீர்களாமே!

மு. மூ: அதற்குள் யார் சொன்னது?

சுந்: என்ன ஸார். ஊர் முழுவதும் தங்களைப் பற்றியே பேசிக்கொள்ளுகிறார்கள். என்னமோ நாடகமாம், அரங்கேற்றமாம்.

மு. மூ: அப்படியா எல்லோருக்கும் தெரிந்து விட்டதா?

சுந்: தெரியாமல் என்ன? தாங்கள் எழுதியிருப்பது சோக நாடகமா? ஹாஸ்ய நாடகமா?

மு. மூ: இதை யார் கவனிக்கப் போகிறார்கள்? என்னுடைய நாடகத்தில் சோகக் கட்டங்களும் சிரிப்பூட்டும் காட்சிகளும் நிறைய இருக்கின்றன.

சுந்: ரொம்ப சரி. நடனம், பாட்டு இவைகளுக்கு இடம் கொடுத்திருக்கிறீர்களா?

மு. மூ: என்ன தம்பி அப்படிக் கேட்டுவிட்டீர்கள்? சர்க்கரையில்லாத பாயசமா? நடனக் காட்சி இல்லாமல் நாடகம் எழுதினால் ஆசிரியர்களை யமலோகத்திற்கு அனுப்பி விடுவார்கள் நாடக விசிறிகள். காதிற்கினிய பாடல்கள், கண்ணைக் கவரும் காட்சிகள், உள்ளத்தை உருக்கும் காதல் சம்பவங்கள், நிறைய இருக்கின்றன.

சுந்: அது தானே கேட்டேன். நீங்கள் அபார மூளைக்காரர். எல்லாம் முன் யோசனையாகவே செய்திருக்கிறீர்கள்.

மு. மூ: இவை மட்டுமா? ஒரு அபூர்வக் காட்சியையும் சிருஷ்டித்திருக்கிறேன்.

சுந்: பேஷ். அது என்ன?

மு. மூ: நாடகத்தின் முடிவில் நீதி மன்றக் காட்சி வருகிறது. கைதிக் கூண்டில் கதாநாயகன் நிற்கிறான்.

"ஏழையைக் கண் பாரையா
கோழையாய் தவிக்கிறேன் மெய்யா
பேழை வயிற்றை வளர்க்கவே ஐயா
இக்கோலம் பூண்டேன் ஜட்ஜ்ஐயா"

என்று ஜட்ஜைப் பார்த்து அவன் கதறி அழுகிறான். ஜட்ஜ் கூட அழுதுவிடுகிறார்.

சுந்: சபாஷ், சபாஷ். ஸார், நீங்கள் கற்பனையின் சிகரத்தைத் தாண்டி விட்டீர்கள். இக்காட்சியைப் பார்த்து விட்டு கண்ணீர் விடாமல் யார்தான் கொட்டகையை விட்டு வெளியே வருவார்கள்? கல்லும் கரைந்து விடுமே.

மு. மூ: அப்படிச்சொல்லுங்கள். அதற்காகத்தான், "இந்நாடகம் பார்க்க வருபவர்கள் பார்க்காமல் கர்ச்சீப், ஒன்று கண்டிப்பாய் கொண்டுவர

வேண்டும்'' என்று நாடக நோட்டீஸில் அச்சடிக்கும் படிச் சொல்லியிருக்கிறேன்.

சுந் : இல்லாவிட்டால் கொட்டகை முழுவதும் ஒரே வெள்ளக் காடாய் போய்விடுமே! தங்கள் நாடகம் வெற்றியடைவது உள்ளங்கை உருளைக் கிழங்கு போல...ஆனல்

மு. மூ : ஆனல்...என்ன...?

சுந் : நாடகத்துடன் நிறுத்தி விடக் கூடாது.

மு. மூ : வேறு என்ன செய்ய வேண்டும்?

சுந் : என்ன ஸார். ஆற்றைக் கடக்க நினைக்கும் தாங்கள் ஓடையைக் கடக்க யோசிக்கிறீர்களே?

மு. மூ : அதற்கெல்லாம் கொடுத்து வைக்க வேண்டாமா? யோகம் வேண்டும், தம்பி, யோகம்.

சுந் : என்ன, ஸார், யோகம்? கொஞ்சம் விளம்பரந்தான் தேவை. எனது நண்பர் ஒருவர் "சினிமா படக்கொலை" என்ற பத்திரிகையின் ஆசிரியர். அவரிடம் சொல்லி விட்டால் தங்களை இவ்வுலக மக்களுக்கு அறிமுகப்படுத்தி விடுவார். எல்லாம் "பப்ளிஸிட்டி" தானே.

மு மூ: நீங்கள் சொல்வது நியாயமாகத்தான் தோன்றுகிறது.

சுந் : உலகத்தில் எல்லாம் இப்படித் தான் நடக்கிறது. கொஞ்சம் வெள்ளை அப்பனை மட்டும் தாராளமாக நடமாட விட்டுவிட்டால் போதும். தங்களை "சகல கலா வல்லபன்" என்றல்லவா அழைப்பார்கள் மக்கள். "நாடக மணி" என்ற பட்டம் கிடைத்தால்கூட நான் ஆச்சரியப்படமாட்டேன்.

மு.மூ : சரிதான், தம்பி, இதோ கொஞ்சம் பணம், வேண்டியதைச் செய்யுங்கள்.

சுந் : போய் வருகிறேன், ஸார். வலிய வருகிற சீதேவியை தங்களுடைய கரங்களில் ஏற்றுக் கொள்ளுங்கள்.

x x x

மு. மூ : வாருங்கள் இளங்கோ, நேரமாகிவிட்டது. கொட்டகைக்குள் போகலாம்.

இள : சரி, இன்னும் பதினைந்து நிமிஷங்கள் தான் இருக்கின்றன.

மு.மூ :இடமெல்லாம் "ரிஸர்வ்" செய்யச் சொல்லிவிட்டேன். வாருங்கள் போகலாம்.

[நாடகம் ஆரம்பமாகிறது]

குரல் 1. ஏ. பாட்டுப்பாடாதே.

குரல் 2. நாட்டியம் வேண்டாம், உள்ளேபோ.

குரல் 3. நாடகத்தை நிறுத்து.

குரல் 4. இந்நாடகத்தை எழுதின ஆசிரியரைத் தாக்க வேண்டும்.

[குழப்பம்]

மு.மூ : என்ன மிஸ்டர் இளங்கோ, நாடகம் நடைபெருது போலிருக்கிறதே?

இள : புது நாடகம் என்ருல் இப்படித்தான். முதலில் கொஞ்சம் குழப்பமாய்த்தான் இருக்கும். போகப் போக எல்லாம் சரியாகிவிடும்.

மு.மூ : சரியாய்ப் போய்விடும் போல் தோன்றவில்லையே. அதோ தரை மகா ஜனங்களைப் பாருங்கள். போர்க்

கோலம் பூண்டல்லவா நிற்கிறீர்கள்?

இள : தரை மகா ஜனங்கள் தானே முக்கிய ரஸிகர்கள். கலாட்டா செய்வதும் அவர்கள் தான். முடிவில் "சபாஷ்" கொடுப்பவர்களும் அவர்களே. இதெல்லாம் ஒரு குழப்பமா?

மு.மூ : எனக்கு என்னமோ மனம் கலங்குகிறது.

இள : என்ன ஸார், வீணுகப் பீதியடைய வேண்டாம். கடைசிக் கட்டம் வந்துவிட்டால் யாவும் சரியாய்ப்போய் விடும்.

மு.மூ : முதல் காட்சி முடிவதற்குள் முன்னமே இவ்வளவு குழப்பம். இன்னும் என்ன நடக்கப்போகிறதோ தெரியவில்லை.

இள : இதற்கெல்லாம் பயப்பட்டால் முடியுமா? எத்தனையோ நாடகங்களில் நடிகர்கள் அடிபட்டு, மிதிபட்டு ஓடியிருக்கிறுர்கள். நாடக ஆசிரியர்கள் கூடத் தாக்கப் பட்டிருகிறுர்கள்.

மு. மூ : அப்படியா?

இள : நீங்கள் கலங்க வேண்டாம், கூட்டம் நம் பக்கம் வரவே வராது.

மு. மூ : மிஸ்டர் இளங்கோ, வெள்ளம் வருமுன் அணை போட்டுக் கொள்ள வேண்டும். அதோ நாலைந்து பேர்கள் கையில் தடியுடன் மேடையை நோக்கி வருகிறுர்கள்.

இள : நம்மை யாருக்கு ஸார் தெரியும்? பயப்படாமல் உட்கார்ந்திருங்கள்.

மு.மூ : மிஸ்டர் இளங்கோ. யாரோ ஒருவன் மேடையில் கல்லை வீசி விட்டான். வீட்டிற்குப் போய்விடலாம். புறப்படுங்கள். வாருங்கள் நிலைமை மிகவும் மோசமாகிக் கொண்டிருக்கிறது.

[குழப்பமான சப்தம்]

மு.மூ : வா, சுப்பையா, நீ சொன்னது தான் உண்மையாய்ப் போய்விட்டது.

சுப் : நாடகம் வெற்றிதானே?

மு.மூ : முதல் காட்சி கொஞ்சம் அமைதியாக நடந்தது.

சுப் : தங்களுடைய வசனத்தை ஜனங்கள் அப்படியே ரசித்திருப்பார்கள், என்ன?

மு.மூ : இரண்டாவது காட்சி ஆரம்பிக்கும் போது கூட்டத்தில் யாரோ ஒருவன் முணுமுணுத்த சப்தம் கேட்டது.

சுப் : நடிகர்கள் நன்குய் நடிக்கவில்லையோ?

மு. மூ : நடிகர்கள் மேல்எவ்வித குற்றமும் கிடையாது. கதாநாயகன் பாகத்தை நம்முடைய பிரம்மநாயகம் பிரமாதமாக நடித்தான்.

சுப் : அப்படியா?

மு. மூ : ஆனுல் காதல் கட்டம் வந்த போது...

சுப் : என்ன நடந்தது?

மு.மூ : மிஸ் அஞ்சுகம் கதாநாயகியாக மேடையில் தோன்றினதும் கொஞ்சம் குழப்பம் ஆரம்பித்தது.

சுப் : என்ன, ஸார்? அஞ்சுகம் அழகாகப் பாடுவாளே? அவள் "அயன் ஸ்திரீ பார்ட்" ஆயிற்றே.

மு.மூ : என்னமோ என்னுடைய பொல்லாத காலம், அவ

ளுக்கு ஜலதோஷம் பிடித்திருந்தது. சாரீரம் கொஞ்சம் தகராறு பண்ணிற்று.

சு: சே...

மு. மூ: திடீரென்று கூட்டத்தில் யாரோ ஒருவன் "நாடகத்தை நிறுத்து" என்று கத்தினன். உடனே பெருங் கூச்சலிட ஆரம்பித்து விட்டார்கள், நாடக ரஸிக சிகாமணிகள்.

சு: அப்படியானல் நாடகம் முழுவதும் நடைபெற வில்லையா?

மு. மூ: நாடகமாவது, நடக்கவாவது? அழுகின பழங்களையும் கற்களையுங் கூட மேடையில் வீச ஆரம்பித்தனர்.

சு: நிலைமை மிகவும் மோசமாய் இருந்திருக்குமே?

மு. மூ: "இந்த நாடகத்தை எழுதின ஆசிரியரைத் தாக்குங்கள்" என்று ஒருவன் கத்தினன். நான் மெதுவாக நழுவி விட்டேன்.

சு: சே, இப்படி நேருமென்று யார் நினைத்தார்கள்?

மு. மூ: வாழையடி வாழையாக வேறு தொழில் செய்து வந்த எனக்கு இந்தச் சனியன் எதற்கப்பா?

சு: இதைத்தான் நான் அன்றே சொன்னேன்.

மு. மூ. நான் நண்பர்கள் என்று நினைத்த சிலர் என்னை இக்கதிக்கு ஆளாக்கிவிட்டார்கள். "நாடகம் அருமையாக எழுதப்பட்டிருக்கிறது. அழகாய் அமைந்திருக்கிறது" என்று என்னை வீணுகப் புகழ்ந்து ஏமாற்றி விட்டார்கள். என் நாடகம் பட்ட பாட்டை நினைக்கும்போது நான் அழுவதா சிரிப்பதா என்று தெரியவில்லை.

சு: நீங்கள் சிரிக்கத்தான் வேண்டும். இனிமேலாவது நாடகம் எழுதுவதை விட்டு விடுங்கள்.

மு. மூ: சூடுண்ட பூனை அடுப்பண்டையில் போகுமா? சத்தியமாக இனிமேல் பேனாவை கடைக்கணக்கு எழுத மட்டும் உபயோகிப்பேன்.

★

உலகில் சிறந்தது!

"சைமா"

பேனக்கள்

இந்தியாவுக்கு
விநியோகஸ்தர்கள் :-

V. G. பன்னீர் தாஸ் & கோ.,
45, ஜீனிஸ் ரோடு,
சென்னை-15.

சிறந்த ரேடியோக்கள்

மர்பி, நேஷனல் எக்கோ,

ரீஸா

: கிடைக்குமிடம் :

V. G. பன்னீர் தாஸ் & கோ.,
49, ஜீனிஸ் ரோடு,
சென்னை-15.

Telegrams : " THIYAGAM "   H. O. Phone No. 55101

P. B. No. 551, Madras-13.   B. O. Phone No. 2238

★

S. S.

&

M. MAYANDI NADAR

GUNNY MERCHANTS

&

COMMISSION AGENTS,

★

BRANCH OFFICE :

110, AUDIAPPA NAICKEN ST.,

MADRAS-1.

HEAD OFFICE :

24, KALMANDAPAM ROAD,

MADRAS-13.

P.R.A & SONS
TINNEVELLY DISTRICT
INDIA (MUKKUDAL P.O.) REGD No 6444
அசல் ராமகிருஷ்ண மார்க்
TRADE MARK
REGD NO 6444
பீடி கம்பெனி முக்கூடல்
RAMAKRISHNA MARK BEEDI

கனவு நனவாகுமா? ஆயிற்றே! எப்படி என்று கேட்கிறீர்கள்? கதைக்குள் நுழையுங்கள்.

ரகுராமனுக்குக் கனவிலே நம்பிக்கை இருந்தது. காதலிலும் நம்பிக்கை இருந்தது.

ஆகவே, கனவில் வந்து அருள் புரிந்த காதலியை 'வெறும் சொப்பனம்' என்று ஒதுக்கிவிட முடியவில்லை அவனால். அது சுவாரஸ்யமான அனுபவம் ஆகும்.

அவனைப் பொறுத்தவரை கனவுகள் எல்லாமே விசேஷமான—ரசமான— புதுமை அனுபவங்கள் தான்.

கனவிலே அவன் அவளைக் கண்டான். ஒரு தடவை கண்டிருந்தால் அதை அவன் மறந்திருக்கக் கூடும்.

அவனுடைய சித்த வெளியிலே எத்தனை எத்தனையோ கனவு மேகங்கள் சஞ்சரிப்பது வழக்கம் தான். விழிப்பு நிலையில் நினைவு வலை வீசி அவற்றைப் பிடித்து இழுக்க அவன் முயற்சிக்கும்போது, பெரும்பாலானவை அகப்படாமல் புகையாய்—நிழலாய் கரைந்து போவதும் சகஜம் தான். சில கனவுகள் தெளிவற்ற சாயைகளாக நினைவிலே படரும்.

ஆனால் இந்தக் கனவு அத் தரத்தில் சேரவில்லை. முதல் முறையே அது அழுத்தமாகப் பதிந்துவிட்டது. அவன் காலையில் கண் விழித்ததும் சிரமப்பட்டு அதை நினைவுகூர வேண்டிய அவசியமும் ஏற்படவில்லை. அது பளிச்சென மன அரங்கில் நிலைபெற்று நின்றது.

—கனவில் அது எந்த இடம் என்று புரியவில்லை. நாகரிகம் அலை புரளும் இடம் என்பது தெரிந்தது. விளக்குகள் ஒளி வீசிக்கொண்டிருந்தது. அவற்றுடன் போட்டி போடுவதுபோல் பகட்டான ஆடை அணி அலங்காரங்களுடன் பெண்கள் மிகுதியாகவே காணப்பட்டனர். அவர்களிடையே தான் அந்த அழகு முகம் பளீரென மிளிர்ந்தது. மின்சார விளக்குகள் மத்தியில் தனி ஒளி சிதறி மிளிரும் மெர்குரி விளக்கு மாதிரி...கவர்ச்சிக்கும் வர்ண மயமான கல்வாழைப் பூக்களுக்கு மிடையில் முழுதலர்ந்து பிரகாசிக்கும் சூரியகாந்தி மலர் போல...தூய வெண்ணிறத் துகில் போர்த்து, மாசுமறு வற்ற மல்லிகைப் பூ போல் ஜம்மென விளங்கினாள் அவள். அவளுடைய தோற்றத்தில் எளிமை இருந்தது. அந்த எளிமையே எடுப்பான அழகாகத் திகழ்ந்தது அவளிடத்தில். அவளிடம் தனி இனிமை இருந்தது. அந்த இனிமை, குழந்தையின் பண்பு போல, புனிதமாகத் தோன்றியது.

—அவன் பார்த்த போது அவள் விழிகளும் பார்த்தன. அவ்விழிகளை வேல் என்றோ, கூர் அம்பு என்றோ கூறத் தயாராக இல்லை

அவன். கடல் என்றோ, கவிதை என்றோ மயங்கவுமில்லை. 'ஆகா! மிக அழகான கண்கள்! இவ்வளவு அழகான கண்களை இதுவரை நான் கண்டதில்லை' என்று தான் எண்ணினான்.

—அவள் உஷையின் புது ஒளி போல் எழில் நிறைந்த மென் சிரிப்பைத் தீட்டினாள் தன் இனிய உதடுகளில்...

அடாடா! 'நாசமாய்ப் போகிற கனவு'...இப்படி எண்ணியதற்காக அவன் தன் மனசையே சபித்துக் கொண்டான்......'பல்லாண்டு பல்லாண்டு பல்லூழி யாண்டு' வாழ அருகதை பெற்ற அந்தக் கனவு அற்பாயுசில் முடிந்து விட்டதே என்று வருந்தினான் ரகுராமன். தொலைந்து போன தூக்கத்தையும், யாரோ வருந்தி வருந்தி அழைத்தது போல் குபீரெனப் பாய்ந்து ஓடி வந்து விட்ட விழிப்பையும் ஏசினான். என்ன பிரயோசனம்? போன கனவு போய் மறைந்தது தானே!

ரகுராமன் அந்தக் கனவைப் பற்றி அடிக்கடி எண்ணிக் களிப்புற்றான். அது போன்ற அழகு முகத்தை அவன் அதுவரை நனவுலகில் சந்தித்ததே இல்லை. இதில் அவனுக்குச் சந்தேகமே கிடையாது.

மறுநாளும் ரகுராமனுடைய கனவில் அதே அழகி காட்சி அளித்தாள். அந்தரத்தில் விட்ட காட்சியைத் தொடர்ந்து காண்பது போலிருந்தது அந்தக் கனவு.

—அவள்...முதல் நாள் வந்த சுந்தரி தான்...இன்றும் வெள்ளைக் கலைத் தரித்த புனித மலராகத்தான் விளங்கினாள். முல்லை மலர்க் கூட்டத்திடையே ஜம்மென்று மிளிரும் குண்டு மல்லிகை போல் அவள் சிறிது நெருங்கி வந்து நின்றது போல் பட்டது. மோகன முறுவல் பூத்த மோகினி ஏதோ சொல்வதற்காகத் தன் பவள உதடுகளை சற்றே பிரித்தாள்......

அட சட்! இந்த நாசமாய்ப் போகிற கனவு! இல்லை, இல்லை, 'வாழிய வாழியவே' என வாழ்த்தப் படவேண்டிய கனவு......இப்படியா முடிந்து போக வேண்டும்? விழிப்பு-அதன் தலையிலே இடி விழ!—இந்த இடத்திலா டுபுக்கெனத் தலைதூக்கிப் பேயாட்டம் போட வேணும்?

ரகுராமனின் உள்ளம் எரிச்சலோடு ஏசியது இப்படி.

அன்று பூராவும் அந்தக் கனவு தவிர வேறு நினைவு எதுவுமே முக்கிய இடம் பெறவில்லை அவன் சிந்தனையில்.

நல்ல காலமாக, மூன்றாவது இரவிலும் அதே கனவு தோன்றியது. இது அதிசயமான நிகழ்ச்சி தான்.

—அதே இடம். அதே அழகி. அதே வெண்துகில். அதே புன்னகை...பாதியில் விட்ட கதையை மீண்டும் எடுத்துப் படிப்பது போலிருந்தது அந்தக் கனவுக் காட்சி.

"எனக்குத் தெரியும்!" என்று அவள் சொன்னாள்.

"என்ன தெரியும்?" என அவன் கேட்டான்.

"நீங்கள் வருவீர்களென்று!"

"எப்படித் தெரியுமாம்?" என்று ஆச்ரியத்துடன் வினவினான் அவன்.

'எப்படியோ தெரியும்!' எனக் கூறிவிட்டு, கலகலவென்று சிரித்தாள் அவள்...

அட கடவுளே! இந்த இடத்திலா அக் கனவு முடிந்துவிட வேண்டும்? விழிப்பு (அதைத் தூக்கம் விழுங்கட்டும்!) ஏன் வந்தது?

ரகுராமனுக்கு மிகுந்த வருத்தம் தான். எனினும் அந்த அழகியைப் பற்றி எண்ணுவதில் அவன் தன் வருத்தத்தை இழந்து விட்டான்.

ஒரே கனவு தொடர்ந்து மூன்று இரவுகளில் வந்திருக்கிறது. எனவே இதில் விசேஷமான விவேகம் இருந்துதான் தீரவேண்டும் என்று அவன் கருதினான்.

கனவுகள் பலிக்கும்; எல்லாம் பலிக்காவிட்டாலும் கூட 'நாலிலே ஒன்றிரண்டு' அவசியம் நிகழ்ச்சிகளாக நடந்தே தீரும் என்ற நம்பிக்கை அவனுக்கு உண்டு. இந்தக் கனவு பலிக்காமல் போகாது என்று

அவனுடைய மனம் சொன்னது. இல்லாவிட்டால் அது ஏன் மும் முறை தோன்ற வேண்டும் என்று மனக்குறளி சவால் விடுத்தது.

தனது வாழ்விலே புதுமை மலரும்; திடீரென்று காதல் எதிர்ப்படும்; காதலி வருகையால் வாழ்வு வளமும் பசுமையும் பெறும் என்று அடிக்கடி ஆசையோடு எண்ணி மகிழ்கிறவர்களில் ரகுராமனும் ஒருவன். அவன் உள்ளப் பண்ணையில் வளரும் ஆசைப்பயிருக்கு வான் மழையாக வந்து வாய்ந்தது இன்பக் கனவு.

முகங்களை மொய்க்கும் வண்டுகள் ஆகிவிட்டன அவன் விழிகள்.

அவன் மீது அநேகர் சந்தேகம் கொள்ளத் தொடங்கியிருந்தனர். அவனுக்கு 'பெண்பித்து' என்று சிலர் முடிவு கட்டினர். அதெல்லாம் அவனுக்குத் தெரியாது. கனவே நினைவாக, கருமமே கண்ணுக அலைந்தான் அவன்.

ரகுராமன் ஏமாறவில்லை. அவளைக் கண்டு பிடித்து விட்டான்.

ஆமாம். கனவில் கண்ட கண்ணழகியைத் தான். அதே மூக்கு! அதே முழி! அதே நெற்றி! அதே புன்

அன்று முதல் அவன் அவளைத் தேடுவதில் ஆர்வம் காட்டினன். பெண்கள் அதிகமாகத் தென்படக் கூடிய இடங்களில் எல்லாம் ரகுராமனும் தென்பட்டான். கல்லூரி வகுப்புகள் முடியும் நேரத்தில் ரஸ்தாவில் அவன் நின்றுன். ரயில்வே ஸ்டேஷனில் அவனுக்கு அடிக்கடி வேலை ஏற்பட்டது. சினிமாத் தியேட்டர்களின் முன்னும், பஜாரில் இரவு நேரத்திலும் அவன் உலாவி வந்தான். பெண்களின்

னகை! அதே முகம்! அவளே அவளே, அவளே தான்!

எக்ஸிபிஷன் ஸ்டால் ஒன்றில் அவள் காட்சி தந்தாள். அங்கு வெறும் காட்சிப் பொருளாக அவள் அமர்ந்திருந்தாளில்லை! பொருள்கள் சிலவற்றை விலை கூறி விற்கும் ஆளாக இருந்தாள்.

அவள் என்ன செய்து கொண்டிருந்தாள் என்கிற கவலை அவனுக்குக் கிடையாது. அவள் உயிரோடு இருந்தாளே! அது அற்புதம் அல்

லவா? அதிசயம், ஆனால் உண்மை! என்ற ரகத்து நிகழ்ச்சி இல்லையா இது ?

ரகுராமன் அவளையே பார்த்தபடி முன்னேறினன். அவளும் அவனையே புன்னகையோடு நோக்கி நின்ருள்.

அவன் அவள் அருகே சென்ருன். அவள் கைகூப்பி வரவேற்ருள்.

''நான் உங்களைப்பார்ப்பதற்காகத் தான் இங்கே வந்தேன்'' என்ருன் ரகுராமன்.

"தெரியும்'' என்ருள் அழகி.

அவன் வியப்படைந்து 'எப்படி?' என்று கேட்டான்.

'எப்படியோ தெரியும்!' என்று சொல்லி விட்டுச் சிரித்தாள் அவள்.

அந்தச் சிரிப்பொலி இசை அமுதமாக ஒலித்தது அவன் காதில். இன்ப மழையாக நனைத்தது அவன் உளத்தை. இனியும் அவன் ஏன் சந்தேகப்பட வேண்டும் ? அவளிடம் தன் கனவைப் பற்றிச் சொன்னன். தன் ஆசையை எடுத்துச் சொன்னன். திருவருள் மகிமை பற்றிச் சொன்னன். தனது புதிய காரைப் பற்றியும், தனி வீட்டைப் பற்றியும், எதிர்கால இன்ப வாழ்வு பற்றியும் சொன்னன். தன்னை மணந்து கொள்ளச் சம்மதமா என்றும் கேட்டு விட்டான்.

காலத்தின் மதிப்பு அவனுக்குத் தெரியும். காலத்தை ஏலத்தில் விட்டு நஷ்டப்பட்டுக் கொண்டிருப்பது ரகுராமனுக்கு என்றுமே பிடிக்காது தான்.

அப்பொழுது பிற்பகல் மூன்று மணி. எக்ஸிபிஷன் கும்பல் சேர நேரமிருந்தது இன்னும். அவள் நின்று வியாபாரத்தைக் கவனித்து வந்த ஸ்டால் பக்கம் ஒரு நாய்—ஒரு காக்கை கூட எட்டிப் பார்க்கவில்லை. ஆகவே அவ்விருவரும் அமைதியாக அமர்ந்து பேசி முடிப்பதற்குத் தடை எதுவும் ஏற்படவே இல்லை.

அவள் தன் பெயர் மாதவி என்று சொன்னள். தனது எதிர்காலம் அவன் உருவில் வந்து கனவில் ஒளி காட்டியது என்றும் அறிவித்தாள்.

'நான் உங்களைப் போல் மும்முறை ஒரே கனவைக் காணவில்லை. ஒரே ஒரு தடவை தான் கண்டேன். அன்று முதல் உங்கள் வரவை எதிர் பார்த்துக் கொண்டே இருக்கிறேன்' என்ருள் அவள். வசிகரிக்கும் புன் முறுவல் பூத்த ஒளி வீசியது அவள் முகம். வாய் பேசாத பேச்சை எல்லாம் கண்கள் பேசின.

அதன் பிறகு ரகுராமனும் மாதவியும் கணவன் மனைவியாக மாறுவதற்கு வெகு நாட்கள் பிடிக்கவில்லை.

'இந்த அழகி உனக்கு எங்கே கிடைத்தாள்?' என்று ரகுராமனின் நண்பர்கள் சிலர் அவனைக் கேட்பது உண்டு.

'எக்ஸிபிஷனில் யார் யாரோ என்னென்னவோ வாங்குகிருர்கள். நான் இவளை வாங்கினேன். அன்பு தான் நான் கொடுத்த விலை' என்று அவன் தமாஷாகக் குறிப்பிடுவது வழக்கமாகி விட்டது.

'மாதவி, நிஜமாகவே நீ கனவில் அவரைக் கண்டு மனம் பறிகொடுத்தாயாடி ?' என்று ஒரு சமயம்

உலகம் ஒரு கடைத் தெரு. இந்தக் கடைத் தெருவில் மோசக்காரர்கள் விற்கும் இலந்தை, திராட்சையின் விலை போகும். ஆனல், நாணய முள்ளவர்களின் திராட்சை, களாப்பழத்தின் விலை கூட போவதில்லை.

—வி. ஸ. காண்டேகர்.

அவளுடைய தோழி மல்லிகா கேட்டாள். மாதவி மர்மம் நிறைந்த சிரிப்பு சிரித்தாள்.

'சும்மா சொல்லடி கண்ணு. என்னிடம் ஏன் இந்த பிகுவெல்லாம்?' என்று கிண்டினாள் சிநேகிதி.

'எனக்கு அவரைப் பிடித்துவிட்டது. அவர் பேச்சு மிகவும் பிடித்திருந்தது......வேலை பார்த்து வாழ வேண்டிய பிழைப்பு எனக்குப் பிடிக்கவில்லை!'

'அவர் பேச்சு மனசுக்குப் பிடிக்காமலா இருந்திருக்கும் பின்னே? கார், சொந்த வீடு, சுகவாசம், பாங்கில் பணம் என்கிற சுவையான விஷயங்கள் எல்லாம் அதில் விரவிக் கிடக்கவில்லையா என்ன!' என்று சொல்லி, விளையாட்டாகச்சிரித்தாள் மல்லிகா.

மாதவி ஒன்றும் பேசவில்லை. பேச்சுக்கு அவசியமும் இல்லை தானே!

'எங்கள் மாதவி கெட்டிக்காரி. சந்தர்ப்பத்துக்குத் தகுந்தபடி நடந்து கொள்ளும் சாமர்த்தியம் பெற்றவள். அவளுக்குக் கற்பனைத் திறமையும் உண்டு.........இல்லையாடி மாதவி?' என்று கேலி பேசினாள் தோழி.

அந்த விவகாரம் எப்படிப் போயினும் சரியே. மாதவியை மனைவியாக வரித்த ரகுராமன் வருத்தப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டதே யில்லை.

பணமும் பனிக்கட்டியும்

ஆங்கில நாட்டு அரசன் மாகபெட்ரிக் தன் அரண்மனை உத்தியோகஸ்தர்களுக்கும், பிரபுக்களுக்கும் ஒரு சமயம்விருந்து வைத்தானாம். அந்த விருந்து முடிந்ததும் அங்குள்ளவர்களை நோக்கி, " அன்பர்களே, நமக்கோ வரிப்பணம் அதிகமாக வருகிறது. ஆனால் அரசாங்க பொக்கிஷம் குறைந்தே இருக்கிறது. அதன் காரணத்தை உங்களில் யாராவது சொல்ல முடியுமா?" என்று கேட்டானாம். அப்பொது அங்கே குழுமியுள்ளவர்களுள் வயதிலும் அறிவிலும் முதிர்ந்த இராணுவத் தலைவர் எழுந்து, " மகராஜா பணத்திற்கு என்ன நேருகிறது என்பதை உங்களுக்குக் காட்டுகிறேன் " என்று கூறிவிட்டு ஒரு துண்டு பனிக்கட்டியை (ஐஸ்) எடுத்து எல்லோருக்கும் அதன் அளவைக் காட்டிவிட்டு அதைப் பக்கத்திலிருப்பவரிடம் கொடுத்து ஒவ்வொருவராக தன் கரத்தில் தாங்கிப்பார்வையிட்டு முடிவில் அரசனிடம் கொடுக்கச் சொன்னார். அந்தப் பெரிய கட்டி எல்லோரிடமும் கைமாறிய பிறகு,அரசனிடம் வந்து சேர்வதற்குள் ஒரு பட்டாணி அளவுக்கு வந்துவிட்டதாம். அதைக் காட்டி அந்த வயோதிக ராணுவத் தலைவர், "அரசே, வரிப் பணமும் இப்படித்தான். இது பலர் கைமாறுவதால் குறைந்து விடுகிறது " என்றாராம்.

கட்டிட வேலைகளுக்கெல்லாம்
திட்டமாக குறிக்க வேண்டியது..



IC

சூலம் மார்க்
சங்கர் பிராண்ட்
போர்ட்லண்ட் ஸிமெண்ட்

திடத்திலும், தரத்திலும், தேர்ந்தது

சர்க்கார் சோதனைச்சாலையின் நற்சாட்சி பத்திரம் பெற்றது

இந்தியா ஸிமெண்ட்ஸ் லிட்

தொழிற்சாலை: சங்கர் நகர், திருநெல்வேலி ஜில்லா
ரிஜிஸ்டர்ட் ஆபீஸ்: 11/12. செகெண்ட் லைன் பீச், மதராஸ்-1

உண்மையில் உறுதியாக,
குறைந்த செலவில்
உங்கள் வீட்டை கட்ட
இதோ நவீன முறை!



நிரந்தரமானது
இணைக்க சுலபம்
பார்வைக்கு
திருப்தி
கொடுக்கும்

சிக்கனமானது
ஜலம் உட்புகாது
தீயை தடுக்கக்
கூடியது

"EVEREST"
ASBESTOS CEMENT
TRAFFORD SHEETS



A.C. ட்ராபோர்டு &
ப்ளெயின் ஷீட்டுகள்

A.C. மழை ஜல பைப்புகள்

M. KUPPUSAWMY NAICKER

எம். குப்புசாமி நாயக்கர்

ஸ்டாக்கிஸ்டுகள்: ஆஸ்பெஸ்டாஸ் ஸிமெண்ட் லிமிடெட்

15, செம்புதாஸ் தெரு, சென்னை-1

வாழ்க! வாழ்க!

"... கொட்டு மேளம் முழங்கியது; மணமகன் மந்தகாசம் புரிந்து மணமகள் கழுத்தில் மூன்று முடிச்சுக்கள் இட்டுத் தாலி பூட்டினான். பெரியோர்கள் 'வாழ்க! வாழ்க!' என்று ஆசி வழங்கினர்.

விரிந்து கிடந்த அந்தப் பத்திரிகையைச் 'சடக்'கென்று மூடினாள் வத்ஸலா; அவள் பெருமூச்சு விட்டாள். மாரிக்காலத்து வானம் போல இருண்டது அவள் முகம். கோடை மழை கொட்டியது அவளது விழிகளிலிருந்து. அவள் விம்மினாள்.

"வத்ஸலா!..." என்று கூப்பிட்டுக் கொண்டே மாடிப்படியேறி வந்தாள் அவள் அன்னை பார்வதி அம்மாள்.

வத்ஸலா சேலை நுணியை எடுத்துக் கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள்.

"வத்ஸலா, கல்யாணப் பத்திரிகைகளுக் கெல்லாம் விலாசம் எழுதி விட்டாயா? உன் சிநேகிதிகள் யாரையும் மறந்து விடாதே. உன் தோழி கோமதி தன் கல்யாணத்துக்குப் பத்திரிகை அனுப்ப மறந்ததுக்கு உனக்கு எவ்வளவு கோபம் வந்தது? ஆகவே, ஜாக்கிரதையாக எல்லாவற்றையும் எழுதித் தபாலில் சேர்த்துவிடு," என்றாள் தாய்.

வத்ஸலாவுக்குச் சிரிக்கத் தோன்றினால்தானே?— அவள் உலாவி நின்ற உலகத்தைப் பற்றி யாருக்கு என்ன தெரியும்?

இரவின் மோனத் தவத்தில் உலகம் மெய்மறந்து கிடந்தது, 'பொய்யுடையோர் அறிவு தனைப் புலன்கள் மூடும் பொற்பதுபோல்'!

"வாம்மா, சாப்பிடலாம்."

"நீ முதலிலே போ, அம்மா. இதோ நொடியிலே நான் வந்து விடுகிறேன்."

மேஜைமீது அழைப்புகள் குவிந்திருந்தன; முகவரிகள் பளிச்சிட்டன; தபால்தலைகள் அழகாகக் காட்சியளித்தன. கடைசியில் எல்லாவற்றையும் கட்டி ஓர் ஓரத்தே வைத்தாள் வத்ஸலா.

பூவை. எஸ். ஆறுமுகம்

அவள் எஞ்சியிருந்த அந்தத் திருமண அழைப்பைக் கையில் எடுத்தாள்; வாய்விட்டுப் படித்தாள். 'ஸ்ரீ மோகன சுந்தரம் அவர்கள், மாம்பலம், சென்னை' என்ற வரிகள் கோலம் பரப்பின.

"அத்தான்!.... அத்தான்!" என்று மீண்டும் புலம்பலானாள் வத்ஸலா.

கனவுகள் இல்லையேல், வாழ்க்கையில் வளம் ஏது? வனப்பு ஏது?

எல்லாக் கனவுகளுக்குமே ஒருருவாகத் திகழ்ந்தான் அவளது ஆசை அத்தான். ஆகவே, அவள் கனவு கண்டாள். அவன் கனவுப் பொருள் ஆனான். அவள்—வத்ஸலா! அவன்—மோகன சுந்தரம்! "எனக்கு என் அத்தான் தான் எல்லாம்; அத்தானைத்தான் கல்யாணம் பண்ணிக் கொள்வேன்!" என்றுதான் அவள் அன்றுவரை முடிவிட்டிருந்தாள். அவள் முடிவு அவளுடைய தோழியர் வட்டம்வரை எதிரொலித்தது. வத்ஸலா—மோகன சுந்தரம் என்னும் பெயர்களை இணைத்துக் கேலி பண்ணவும் அவர்கள் தவறவில்லை. அவளுடைய கனவுக் கோளம் அவளுள் உயிர்ப்பாகி, உயிர் நாடியாகிச் சுழன்றது.

மோகன சுந்தரம் வத்ஸலாவுக்கு அத்தான் முறை வேண்டும். வத்ஸலா பணக்கார வீட்டுப் பெண். அவனும் நிதி மிகுந்த குடும்பச் சொத்துதான். இந்நிலை சில ஆண்டுகள் வரையில் மட்டுமே நீடிக்க முடிந்தது. அந்தக் கால எல்லைக்குள்ளேதான் அவனும் அவளும் மணப் பருவம் எய்தினர்; திருமணப் பேச்சும் நடந்து முடிந்தது; ஜாதகங்கள் அத்துணை பொருத்தம் சொல்லவில்லையென்றாலும், உறவுமுறை காரணத்தினால், இருவருக்கும் மணம் முடிக்கவும் திட்டமிட்டார்கள், இருதரப்புப் பெற்றோர்களும்.

கல்யாணத்திற்குத்தேதிவைத்தாகிவிட்டது. அப்பொழுதுதான் அந்த எதிர்பாராத சம்பவம் நடந்தது. மோகன சுந்தரம் பட்டணத்திலிருந்து திருச்சிக்குப் போகவேண்டியிருந்தது. கலியாண விஷயமான அலுவல்கள். திரும்பி வரும் சமயம், அவன் நிலை பரிதாபத்திற்குள்ளாகிவிட்டது. ஆணழகனாகச் சென்றவன் எப்படியோ மாரிவிட்டான், பாவம்! திடீரென்று அவனுக்கு 'முடக்குவாத நோய்' வந்துவிட்டது. காரில் கொண்டுவந்து சேர்த்தார்கள். இப்படிப்பட்ட நிலையிலே அக்கல்யாணம் எப்படி நடக்க முடியும்!

வத்ஸலா விம்மியழுதாள். "அப்பா, இந்தக் கல்யாணம் நடந்தே திரவேண்டும். கல்யாணத்துக்கு முன் இப்படிப்பட்ட வியாதி அத்தானுக்கு வந்ததனால்தானே இன்று கல்யாணத்தை நிறுத்த முடிவுகட்டுகிறீர்கள்? கல்யாணத்துக்குப்பிறகு—ஏன், தாலிகட்டிய அடுத்த கணம் என் அத்தானுக்கு இதே நோய் பீடிக்கப்பட்டால் என்ன செய்வீர்கள்? பின்னர் விதி அமைத்துக் கொடுக்கும் வழியில் அமர்ந்திருக்கக் காத்துக் கிடக்கும் என் தாலி பாக்கியம்

இப்போதே அதற்கான ஒரு முடிவைக் காணட்டுமே! அப்புறம், என் தாலியின் அருள் காட்டும் வழிப்படி எல்லாம் நடக்கட்டுமே!''

இச் செய்தியைக் கேட்டதும் படுத்த படுக்கையில் கிடந்த மோகனசுந்தரம் அவளை அழைத்துவரச் சொல்லி ஆறுதல் பல சொன்னான். அவள் கேட்கவில்லை. அடுத்த நாள் தன் அன்பு அத்தானைப் பார்க்கச் சென்ற தருணம் அவளுக்கு ஒரு தபால் வந்தது.

"அன்புள்ள வத்ஸலா,

இந்தக் கடிதம் உன்னை ஆச்சரியத்திற்குள்ளாக்கும். நீ அழுவாய். நான் எப்படி ஆறுதல் சொல்வேன்? நான் அழுவதை நீ உன் மனக்கண் மூலமாவது அறிவாயா? கடவுள் வஞ்சகன். நம்மைப் பிரித்துவிட்டான்! என் விதி அப்படி! என்னை மறந்து விடு, வத்ஸலா; மறந்து விடு! உனக்கு ஆறுதல் சொல்லத் தெரியாததால் தான் இரவோடு இரவாகத் திருச்சிக்குப் புறப்பட்டுவிட்டேன். வைத்தியத்துக்கு வேறு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன, இங்கே பட்டணத்திலே. ஆனால் என் பயணம் என் அப்பா, அம்மாவுக்குக்கூடத் தெரியாது. உற்ற நண்பனின் உதவியுடன் புறப்பட்டுவிட்டேன். உன்னிடம் ஒரு வேண்டுகோள், அல்ல, உரிமைப் பிச்சை கேட்கிறேன். உனக்குரிய மணாளனை நீயே தேர்ந்தெடுத்துக்கொள். உன் திருமணச் செய்தி கிடைத்தால் தான், நீ என்னை மறுபடியும் நேருக்கு நேராகக் காண முடியும்! எனக்கு ஒரே ஆசைக் கனவு; மறு பிறப்பிலாகிலும் எனக்கு உன்போல ஒரு வத்ஸலா கிடைக்க வேண்டும். பலிக்குமென்ற கனவுடன் இன்னமும் உயிர்ப்பற்றுக் கொண்டிருக்கிறேன். உன் அத்தானை நீ மறக்கமாட்டாயே?

உன் அன்புள்ள
அத்தான்,
மோகன சுந்தரம்''.

உணவு உறக்கமின்றிப் பைத்தியம் பிடித்தவள் போலாகிவிட்டாள் வத்ஸலா; சதா "அத்தான், அத்தான்!" என்று பிதற்றினாள்.

நாட்கள் ஓடின.

வத்ஸலாவுக்குத் திருமணம் நிச்சயிக்கப்பட்டது. முன்பின் தெரியாத மாப்பிள்ளை. அவள் கண்கள் அந்தப் பெயர் மீது ஓடின. பெயர்: முகுந்தன்!



மனைவி: நீங்க எங்கே போனாலும் போய்த்தொலைங்க. அந்தப் பையை மட்டும் கொடுத்திட்டுப் போங்க. நம்ம டி. டி. கே. க்குப் பயந்து என் நகையெல்லாம் அதில் பத்திரமா வச்சிருக்கேன்!

முகுந்தன்!— புராணகாலத்திலே ராதைக்கு வாய்த்தாற் போன்ற முகுந்தனேதானே?

வத்ஸலாவின் மார்பிலே மங்கல நாண் இழைந்தது. அவள் முகுந்தனுக்குரிய சொத்தானாள். யார் யாரோ வாழ்த்துக்கள் அனுப்பினர்கள்; யார் யாரோ திருமணத்துக்கு 'நாலு நாள்' முன்னதாகவே வந்திருந்தார்கள், அழைப்பில் கண்டிருந்த வேண்டுகோளுக்குப் பங்கம் விளைவிக்காமல்.

வத்ஸலாவுக்கு அந்த ஒரு வாழ்த்துமடல்தான் ஆறுதல் அளித்தது. அதுதான் மோகன சுந்தரத்தின் ஆசி!— "புதுமணத் தம்பதிகள் வாழ்க, பல்லூழி யென்று வாழ்த்துகின்றேன். இல்லறமாம் நல்வாழ்வு சீரும் சிறப்பும் பெற்றுத் திகழப் பிரார்த்திக்கிறேன்."

ஆயிரந்தடவைகள் படித்துவிட்டாளே!—கண்ணீரை வரவழைக்க உதவியதும் அந்த இரண்டு வரிகள் தாம்; வழிந்த விழி வெள்ளத்தைத் துடைத்துவிட கை கொடுத்ததும் அதே இரண்டு வரிகள்தாம்!

"அத்தான்!... அத்தான்!" என்று வாய் ஓயாமல் அழைத்தாள் வத்ஸலா. மோகன சுந்தரம்—அவள் அத்தான் கண்களுக்குத் தட்டுப்படக்காணுமே! அவன் வரவில்லை; அவனுக்குப் பதிலாகத்தான் அந்த வாழ்த்து வந்தது.

'என் திருமணச் செய்தி கிடைத்தால் நேருக்கு நேராக நான் உங்களைக் காணமுடியும் என்று உங்கள் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தீர்களே, அத்தான்? என் திருமணம்கூட நடந்து முடிந்து இரண்டு மாதங்கள் ஆகிவிட்டனவே!... அத்தான், ஒரு முறைகூட உங்களை இனி நான் பார்க்க முடியாதா?" என்று அவள் பேதை நெஞ்சம் புலம்பியது—தனிமையில்!

மோகன சுந்தரம் வரவே இல்லை!

x x x

அன்று முதல் இரவு. வாழ்க்கைத் திருவிழாவுக்கு அதுதான் தேரோட்டத் திருநாள். அவனும் அவளும் 'அவனுள் அவளாக' 'அவளுள் அவனுக' உருமாற வேண்டிய சோதனைக கட்டம் அது.

புதுமணத் தம்பதிகளுக்கு 'லாலி, லாலி, சுப லாலி!' என்று பாட்டுப் பாடிற்று புது நிலவு.

வத்ஸலா பால் நிறைந்த தம்ளரை முகுந்தனிடம் நீட்டினாள். அவன் அதை வாங்கியபோது, அவனுடைய மணிக்கட்டில் சூடான நீர்த் துளிகள் தெறித்து விழுந்ததை உணர்ந்தான்.

"வத்ஸலா!"

"அத்தான்!"

"என்ன, உன் அத்தான் மோகனசுந்தரத்தையா அழைக்கிருய்?"

"...ஹூம் ...இல்லை! உங்களைத்தான் அழைத்தேன்!"

"ஓ!..." —அவன் நெடுமூச்சு விட்டான்.

மறுநாள் பொழுது புலர்ந்தது.

முதல் வேலையாக, "அத்தான், உங்களுக்கு என்னுடைய சொந்த அத்தான் மோகன சுந்தரத்தைத் தெரியுமா?" என்ருள் வத்ஸலா.

"நன்ருகத் தெரியும். உன்னைப் பற்றி அவன்தான் சொன்னன்."

"அப்படியா ?... அவர் இப்போது எங்கே இருக்கிருர் ?"

"ம்...அவனை இனி நீ பார்க்க முடியாது !"

"ஒரு முறைகூடப் பார்க்க முடியாதா?...அத்தான், நீங்கள் அனுமதி தரமாட்டீர்களா ?"

"வத்ஸலா, அவன் நம் பார்வைக்கு இனி அகப்படமாட்டான் !"

"ஏன்; அத்தான் ?"

"அவன் இந்த உலகில் இல்லை !"

"ஆ!... ஐயோ, அத்தான் !"

மனைவியிடம் நிரூபித்துக் காட்டக் காத்துக் கிடந்த அந்தத் தந்தியில்அவளுடைய கண்ணீர்த் துளிகள் வழிந்து கொண்டிருந்தன.

'மோகன சுந்தரம் மாரடைப்பிஞல் இறந்து விட்டான் ! வி.பி.கந்தசாமி'

முகுந்தன் எழுதிய 'தனிக் கடிதம்' ஒன்று மைலாப்பூர் தலைமைத் தபாலாபீஸில் சேர்க்கப்பட்டது.

"அன்புள்ள நண்பர் மோகன சுந்தரம் அவர்களுக்கு.

உங்கள் தந்தி கிடைத்தது. பாவம், வத்ஸலாவைப் பார்க்கவே பரிதாபமாக இருக்கிறது. உங்கள் யோசனை எந்த முடிவுக்குக் கொண்டு விடுமோ, அது ஆண்டவனுக்குத் தான் வெளிச்சம்!

உங்களுடைய 'முடக்கு வாத நோய்' சென்ற வாரம் பூரண குணமடைந்ததாக எழுதியிருக்கிறீர்கள். இந்தத் திருப்பம் முன் கூட்டியே ஏற்பட்டிருந்தால், வத்ஸலாவை நீங்கள் உங்கள் நிழலுக்குள் அடக்கி வைத்திருக்கலாமே!— ஐயோ, விதி வலிது!...

பம்பாயில் உங்களைச் சந்திக்க விரைவில் வருகிறேன்.

உங்கள் தியாக உள்ளம் எங்கள் தாம்பத்தியத்துக்கு ஒரு நினைவுச் சின்னம்! உங்கள் அன்பை என்றும் மறவேன்.

இப்படிக்கு,
முகுந்தன்."

கான்ஸடபிள்: திருட்டுப் பயலே! எங்கே போக யோசித்துக்கிட்டு நிக்கிறே?

சந்தேகப் பேர்வழி: அந்த ஏலக் கடையில் ஒரு மணிப் பர்ஸ் எடுக்கலாமென்று யோசித்துக்கிட்டு நிக்கிறேன்.

32 இனிய மணம்கமழும்
302 ஐவ்வாது
3002 பத்திகள்
: தயாரிப்பவர்கள் :
S. V. செல்லக்கனி & கோ
மீனாக்ஷி கோயில் தெரு, மதுரை.

இம்பீரியல்
எலக்ட்ரிக் & ரேடியோ கம்பெனி
G. E. C. ரேடியோ டீலர்ஸ்
&
"IERCO" ஆம்பிளிபயர் தயாரிப்பாளர்கள்,
164, கீழவெளி வீதி, மதுரை — விருதுநகர்.

உலகப் பிரசித்தி பெற்ற

டாடா - மெர்ஸிடிஸ் - பென்ஸ்

டீஸல் டிரக் - பஸ் சேஸிஸ்

உலகத்தின் முதலாவது டீஸல்
இன்ஜின்

ஜெர்மனி தேசத்தின்
டெய்ம்லர் பென்ஸ் தயாரிப்பு.



மாடல் LP 5200/48—5டன்
"புல் பார்வார்ட்" கண்ட்ரோல் சேஸிஸ் 190" W. B.
பஸ் சொந்தக்காரர்களுக்கும் ஸ்டேட் டிரான்ஸ்போர்ட்டுக்கும்
உகந்தது.

எல்லா மேக்குகளுக்கும் மாற்றி அமைக்க
தனி டீஸல் இன்ஜின்களும் கிடைக்கும்.

மதுரை, ராமனாதபுரம், திருநெல்வேலி ஜில்லாக்களுக்கு
அதிகாரம்பெற்ற டீலர்ஸ் :

பாண்டியன்

ஆட்டோமோபைல்ஸ் லிமிடெட்.

5, ஸ்காட்ரோடு : மதுரை.

ஜெகம் புகழும்

செடி மார்க்

பீடிகள்

සෙඩි මාර්ක් බීඩි



செடி மார்க் பீடி

உரிமையாளர்கள் :—

P. முகம்மதுமைதீன் அன் பிரதர்

செடி மார்க் பீடி தொழிற்சாலை

மேலப்பாளையம்.

(நெல்லை ஜில்லா)

நண்பனின் தியாகம்

—பால்வண்ணன்—

நட்புக்காக காதலையே தியாகம் செய்தான். அவனின் நல்ல உள்ளம்—உயர்ந்த நோக்கம்—சிறந்த பண்பு இவைகளுக்கு இணையாக எதைச் சொல்ல முடியும்? உண்மையான தியாக உணர்ச்சியை இக்கதையில் காணலாம்.

மரகதம்

வளமிழந்து வயிறு காய்ந்து துன்புறும் குடும்பத்தில் பிறக்கவில்லை நான். வளம் நிறம்பி, பசியைக் கனவிலும் பார்த்தறியாத பணக்காரக்குடும்பத்தில் தான் பிறந்தேன். நான்தான் எங்கள் குடும்பத்தின் முதல் குழந்தை; அதுமட்டுமல்ல கடைசிக் குழந்தையும் கூட. ஓராண்டுவரையில்தான் என் தாய் என்னைப் பிரியத்தோடு பேணி வளர்க்க இயற்கை இடம் தந்தது. பின்னர் என் தந்தை அன்னையாகவும் மாறி என்னை அன்புடன் வளர்த்து வந்தார். நானும் தவழ்ந்து, நடந்து, ஓடியாடி பாவாடைக் கட்டும் பருவம் அடைந்தேன். பள்ளியில் படிக்க அனுப்பினார்கள். ஒருவாறு உயர்நிலைப் பள்ளியைத் தாண்டிக் கல்லூரியில் கால் வைத்தேன்.

நான் கல்லூரியில் நுழைவதற்குமுன் என் தந்தை அறிவுறுத்திய அறிவுரைகள் பல. "அம்மா! கல்லூரி என்பது அறிவை விருத்தி செய்யும் ஓர் ஆலயம். அங்கு போதிக்கப்படுகின்ற நூல்கள், மூர்த்திகள்; அந்த மூர்த்திகளிடமுள்ள நல்லறிவு என்னும் வரத்தை வாங்கி மாணவர்களுக்கு அளிக்கும் ஆசிரியர்கள், அர்ச்சகர்கள்; அவர்களுக்குத் தரப்படும் சம்பளம். தட்சணை; இதனை நீ மறந்துவிடக்கூடாது." இன்றைய மாணவர்கள் கல்லூரியை வேறுவிதமாகப் பயன்படுத்திக் கொள்ளுகின்றனர். ஆகவேநீயும்அவர்களைப்போல் ஆகாமல் தெளிவான அறிவோடு எதையும் ஆராய்ந்து செய்யவேண்டும். மேலும், இன்றுள்ள கல்லூரிகளில் கல்வி பயிலும் மாணவர்களில் பெரும்பான்மையோர், கல்லூரிப் படிப்புடன், காதல் படிப்

யையும் சேர்ந்து படித்துப் பழகிக் கொள்கின்றனர். இதனுல், பெரும்பான்மையோர் எதிலும் வெற்றி பெருமல் தோல்வி அடைந்துவிடுகின்றனர். பின்னர் பெருந் துன்பமடைகின்றனர். ஆகையால் நீ மிகவும் எச்சரிக்கையாகவும், அறிவோடும் நடந்துகொள்ளவேண்டும்.” என்று கூறியது இன்னும் என் நினைவில் இருக்கிறது. நான் மாத்திரம் என்ன? என் தந்தையின் சொல்லைத் தட்டி நடப்பவளா? அவர் என்னை சிறு வயதிலிருந்தே நல்ல முறையில் பழக்கி இருக்கிருரே; நான் எப்படித் தவறு செய்யமுடியும்?

கல்லூரிக்குச் செல்வேன், குனிந்த தலையே நிமிர்த்தாமல்; வீட்டிற்கு வரும்போதும் அப்படித்தான். அவ்வளவு எச்சரிக்கையாகத்தான் நடந்துவந்தேன். ஒருநாள் இரண்டுநாள் அல்ல; மூன்று ஆண்டுகள்! ஆரம்பத்தில் என் நடவடிக்கையைக்கவனித்த என்தோழிகள் என்னைப்பற்றிப் பேசியப் பேச்சுக்கள்— அப்பப்பா! சகிக்கவே முடியாது. அவ்வளவு குறும்புத்தனம் கலந்திருந்தது. பெண்களே இப்படியென்ருல், ஆண்களைப்பற்றிச் சொல்லவேண்டுமா? ஆனல் நான் இவைகளை மதியாமல், யாரையோ பேசுவதாக கருதிக்கொண்டேன். அப்படி நான் பழகியபடியால் அவர்கள் வீசிய வலையில் சிக்காமல் தப்பமுடிந்தது.

கல்லூரியில் எனக்குப் பல தோழிகள் இருந்தாலும் எனக்குப் பிடித்தமானவள் ஒருத்தித்தான். அவள் பெயர் மீனு. நாங்கள் இருவரும் ஒன்ருய் இருப்பதுகூட மற்றவர்களுக்குப் பிடிக்கவில்லை. ‘ஏன் இந்த மனித இனத்திற்குமட்டும் இந்தப் பொருமைக் குணம் இருக்கவேண்டும்? இந்த இழிந்த குணம் கேவலமான மிருகங்களிடம் இல்லையே! மனிதன் மிருகத்தைவிட உயர்ந்தவன் என்று கூறுகிருர்களே! அது உண்மையானல் மனிதன் பொருமை அற்று இருக்க வேண்டுமே’ என்ற எண்ணம் அப்போது எழும்; என்னையும் மீனுவையும் பிரிக்க எத்தனையோ சதிசெய்து தோற்றனர். இவ்வளவு நிகழ்ச்சிக்குப் பிறகு அவர்களே திருந்த ஆரம்பித்தனர். எங்களை மதிக்க ஆரம்பித்தனர். இந்த மாறுதலைக்கண்டு நான் மகிழவில்லை. ஏனென்ருல் என் பாட்டி அடிக்கடி, “நீ, யார் என்ன சொன்னுலும், செய்தாலும், சகித்துக்கொண்டு அவர்களுக்கு மனதார தீங்கு செய்யாமல் இருந்தால் அவர்களும் திருந்துவார்கள். உனக்கும் பெருமை அளிப்பார்கள். அப்படியின்றி நீயும் அவர்களைப் போல் தீங்கு செய்தால், இருவருடைய விரோதமும், வளர்ந்து தீராப் பகையாக முடியும். சில சமயங்களில், உயிராபத்தும் நேரும். இதற்குப்

பல உதாரணங்கள் உண்டு.'' என்று பல நீதிக் கதைகளைச் சொல்லி விளக்குவாள். அப்போது என் பாட்டியின் சொல்லைக் கேட்கும அளவுக்குத்தான் அறிவு இருந்ததே யொழிய, அறியும் அளவுக்கு இல்லை. இப்போதுதான், என் பாட்டியின் சொல்லின் அருமையை அறிந்து அனுபவிக்க முடிகிறது. ''இன்னு செய்தாரை ஒருத்தல் அவர் நாண நன்நயம் செய்துவிடல்'' என்னும் குறளடியினை இன்று படித்தேன். ஆனல் இதற்கு விளக்கம், சிறுவயதிலே என் பாட்டியின் வாயால்கேட்டேன். உண்மையில் என் பாட்டி, குறள் படிக்கவில்லை; எனினும் குறளின் உண்மை அவளின் அநுபவம் வாய்ந்த உள்ளத்தில் ஊறிவளர்ந்திருந்த தன்மையை நினைத்துப் பார்த்து வியந்தேன். 'வாழ்க தமிழருள்ளம், வாழ்க தமிழருண்மை' என்று என்னுளம் வாழ்த்தியது.

ஒருநாள் எங்கள் கல்லூரியில் தமிழ்ப் பேரவை நிர்வாகிகள் தேர்தல் நடைபெற்றது. அந்தத் தேர்தலில் என்னை

யும் பங்கெடுத்துக் கொள்ளும் படிஎன்உயிர்த்தோழி மீனு வற் புறுத்தினுள். மற்ற தோழிகள் அவளை ஆமோதித்தனர். அவர் கள் செய்கை என்னை அவர் கள் கட்டளைக்குட்பட செய் தது. செயலாளர் பதவிக்கு என் பெயரை முன்மொழிந் தாள் மீனு; மற்றவர்கள் உடனே ஆமோதித்துவிட்ட னர். ஏகமனதாக தேர்ந்தெடுக் கப்பட்டு விட்டேன். நான் வெற்றி பெற்றது என்னைத் தவிர எல்லோருக்கும் மகிழ்ச் சியளித்தது. என் தலைமீது சுமை ஏறியதுபோலிருந்தது. ''தமிழ்ப் பேரவை; அதனை ஆளும் பொறுப்பு எனக்கு !'' என்று என் வாய் மெள்ள முணுமுணுத்தது. 'முன்பின் அறியாத—அநுபவம் பெருத ஒன்றை எப்படி செய்வது ?' என்ற பயம் என் பிடரியைப் பிடித்து உலுக்கியது. அன் றெல்லாம் எவருடனும் பேச வில்லை. என் சிந்தனை எங் கெங்கோ சென்று உலாவியது. உண்மையிலேயே என் தோழி மீனுவைக் கடிந்து கொண் டேன்.

அன்று இரவு 8 மணிக்கு மகிழ்ச்சி முகத்திலே தாண்ட வமாட—உதடுகள் புன்ன கைப் பூக்க மீனு என் வீட் டிற்கு வந்தாள். ''ஏன் வாட்ட மாய் இருக்கிருய் ? எப்படித் தமிழ்ப் பேரவையை நடத்து வது என்றுதானே ? பைத்தி யக்காரப்பெண், உள்ளத்திலே உரம் இல்லாதவள்; மன சக்தி யின் பெருமையை உணராத வள் என்பது தெரிந்துதான் இங்கு வந்தேன். நான் எதிர் பார்த்தபடியே ஏங்கிக்கிடக்கி ருய் !'' என்ருள்.

''மீனு! எனக்கு உண்மையி லேயே பயமாய் இருக்கிறது. எப்படி இந்தப் பேரவையை நடத்துவது என்று புரிய வில்லை. ராஜினுமா செய்து விடலாம் என்று நினைக்கிறேன் நீ என்ன சொல்லுகிருய்?'' என்று கூறி முடிப்பதற்குள், *''நீதான் நாட்டுக்குத் தொண்டு செய்யப் போகிறவளா ? அன் ருெருநாள் கடற்கரையில் என் னிடம் சொன்னதை மறந்து விட்டாயா ? 'பிறந்து விட்ட நாம் இறப்பது மெய் ; இருக் கும் நாள் சிலவே. இதற் குள் நாம் வாழவேண்டும், ஏழை மக்களுக்கு நல்லவாழ்வு தரவேண்டும். இன்று ஏழை மக்கள் வாழ்விழந்து வாடு கின்றனர். இந்த நிலையை மாற்றி புதிய சமுதாயத்தை தோற்றுவிக்க வேண்டும். அந்தச் சமுதாயத்தில் மக் களுக்காக வாழ்வு இருக்க வேண்டுமே ஒழிய வாழ்வுக் காக மக்கள் ஏங்கி அலையக் கூடாது என்றெல்லாம் வீர முழக்கம் செய்தாயே, அது என்னவாயிற்று ? கல்லூரித் தமிழ்ப் பேரவை செயலாள ராகப்பணியாற்றப் பயப்படும் உன்போன்ற பேதைகள் எப் படி நாட்டின் நன்மைக்காக உழைக்கமுடியும்? கல்லூரியில் படித்த நீயே இப்படி பயந்*

தால், கல்வி வாசனையற்ற கிராமத்துப் பெண்களைப்பற்றி கேட்கவா வேண்டும்? நீ பேசத் தெரியாதவளா? எழுத்தாற்றல் உன்னிடம் இல்லாமலா நீ எழுதும் கட்டுரைகள், கதைகள் உனக்குப் பரிசுகள் வாங்கித் தருகின்றன? பேதைப் பெண்ணே! ஏன் இந்த வீண்கலக்கம்?'' என்று ஒரு சொற்பொழிவே நிகழ்த்தி விட்டாள். அவளுடைய உணர்ச்சி கலந்த சொற்கள் என் இழந்த நம்பிக்கையை மீட்டுத் தந்தது. என் பயம் பறந்து விட்டது. நானும் அடுத்த நாள் முதல் பணியாற்றிக்கொண்டு வந்தேன். அவள்தான் என்னை இவ்வளவு முன்னேற்றத்திற்குக் கொண்டு வந்தவள். கல்லூரியில் என் பெயர் அறியாதார், 'அறியாதார்' என்ற அளவுக்கு ஆக்கி விட்டாள். தூங்கா விளக்கிற்கும் தூண்டுகோல் தேவை. அறிவுள்ள மாணவனுக்கும் ஆசிரியர் தேவை. அதுபோல் நான் பொதுவாழ்வில் தளர்ச்சி யடையாமல் இருக்க எனக்கு மீனு தேவை.

ஓராண்டு கழிந்தது. கல்லூரி ஆண்டு விழா வந்தது. கல்லூரி மண்டபத்தில் மாணவர்கள், ஆசிரியர்கள், மற்றவர்கள் குழுமியிருந்தனர். பல பேச்சாளர்களும் வந்திருந்தனர். நானும் பேச வேண்டுமாய் கேட்டுக்கொள்ளப் பட்டேன். தலைவர் பேசினார். முறையே மற்ற சொற்பொழிவாளர்கள் தங்கள் அறிவுத்திறனை சொற்களுடன் கலந்து காட்டினார்கள். என் முறை வந்தது. நான் பேச வேண்டிய பொருள் 'பெண்கள் உரிமை' என்பதாகும். நான் பேசுவேன் என்று என் பெயரைக் குறிப்பிட்டார் தலைவர். கல்லூரி மண்டபமே அதிரும் அளவுக்குக் கைதட்டல் ஒலி எழுந்தது. எனக்கு ஏற்பட்ட மகிழ்ச்சியும் உற்சாகமும் சொல்ல வேண்டியதில்லை. பெருமிதத்துடன் எழுந்து பேச முற்பட்டேன். "பெண்கள் பேரீச்சம் பழத்தைப் போன்றவர்கள். பேரீச்சம் பழம் இனிப்பாய் இருக்கிறதுஎன்ற காரணத்தால்அதை ஒரே அடியாய் கடித்தால் பல் உடையும். அதுபோல் தான் பெண்கள்எவ்வளவுகொடுமை செய்தாலும் தாங்கிக் கொண்டு நமக்கு வாழ்வில் இன்பம் தருகிறார்கள் என்று

விமலனும்

விஞ்ஞானமும்

விஞ்ஞானம் என்பது கையைக் கட்டி உட்கார்ந்து கொண்டு "ஈசா, யாவும் உன் செயலே!" என்று பிரார்த்தனை புரிவதில்லை; நிகழ்ச்சிகளுக்குக் காரணத்தைக் கண்டு பிடிக்க அது முயலுகிறது.

—ஜவஹர்லால் நேரு

எண்ணி மேலும் மேலும் கொடுமை படுத்தினல், பெண்ணினத்தின் சீற்றம் ஆண்களின் கொட்டத்தை நிச்சயமாக அடக்கிவிடும்'' என்று சொல்லி முடித்தேன். அப்பப்பா! என்ன சொல்வேன். ஒரே கையடி, சந்தோஷ கூக்குரல். என் பேச்சுக்கு நல்ல மதிப்பு. எனக்கு இருந்த ஆணவம் வளர்ந்து நீண்டது. நானும் வீராங்கனைபோல் நாற்காலியில் அலட்சியமாக அமர்ந்து கொண்டேன்.

எனக்குப் பின்னல் ஒருவர் பேசினர். நான் அந்தப் பேச்சுகளைக் கேட்க வில்லை. அலட்சியமாக இருந்தேன். திடீரென்று கைத் தட்டும் சத்தம் என் காதுகளைத் துளைத்தது. ஆம்! நான் பெருத அளவு பலமான கைத் தட்டல். எனக்கு ஒரே வியப்பு! 'இவன் என்ன நம்மை விட அதிகமாய் பேசி விட்டிருப்பான்' என்று எண்ணியவாறு அவன் பேச்சைக் கேட்கலானேன். "எனக்கு முன் பேசிய தோழியர் பெண்கள் அருமையை ஆண்கள் அறிவதில்லை யென்றும், பெண்கள் பேரீச்சம் பழம் என்றும் அதனை ஒரே அடியாகக் கடிக்காதிர்கள், பல்உடைந்துவிடும் என்றும் எச்சரிக்கை விடுத்தார். நான் பெண்களைப்பற்றி சில உதாரணங்களை எடுத்துக் காட்ட விழைகிறேன். தேன் இல்லாத தேனடை கூட அழகாகத்தானிருக்கும், ஆனல் அதுவெறும் அழகுதான், அதனிடம் தேனின் இனிமையைச் சுவைக்க முடியாதே! இப்படிபட்டப் பெண்களும் உண்டே! அழகு, ஆடம்பரம், படிப்பு எல்லாம் இருக்கும். ஆனல் சிறந்த பண்பு இல்லாத பெண்டிரும் இம்மாநிலத்தில் உண்டே! இதை எனக்கு முன் பேசிய தோழியர் உணர வேண்டும். மேலும் பெண்களுக்கு மதிப்புத் தருவதில்லை என்றும் ஆண் வர்க்கத்தைக் கண்டித்தும் பேசினர். நாம் பெண்ணினத்தை தெய்வம் போல் மதிக்கிறேம். ஆனல் பெருவாரியான பெண்கள் பலவீனமானவர்கள். அவர்கள் ஆண்கள் உதவியின்றி வெளியே செல்ல முடியாதே? இதற்கு நாம் என்ன செய்ய முடியும்? வளைக்குள் பதுங்கி இருக்கும் வரையில் முயல் பாதுகாப்புடன் இருக்கிறது. ஆனல் வெளியே வந்தவுடன், நாய்களோ, மனிதர்களோ அதனை அடித்தோ அல்லது பிடித்தோ விடுகின்றனர். அதைப்போலத்தான் பெண்கள், வீட்டின் உள்ளே இருக்கும் வரையில் பாதுகாப்புடன் இருக்கிறர்கள்.

எமது வாடிக்கையாளருக்கும், ஆதரவாளருக்கும்

எமது மனமுவந்த சுதந்திர தின நல்வாழ்த்துக்கள் !

நீடித்து உழைக்கும்

பாத்திரங்கள்

எங்களிடத்தில் அலுமினியம், கண்ணுடி சாமான்கள், பீங்கான், எனமல் தினுசுகள், விளக்குகள், ஊறுகாய் ஜாடி, புட்டி, கார்க்கு, எவர்சில்வர் பாத்திரங்கள் மற்றும் பலவித மான சாமான்களும் மொத்தமாகவும், சில்லறையாகவும் கிடைக்கும்.

சு. சந்தோஷ நாடார் & சன்

1/4, ஈவினிங் பஜார், பி.டி. மதருஸ்.



S. SANTHOSA NADAR & SON

1/4, EVENING BAZAR ..... PT. MADRAS.

BAROOL

கிளை ஆபீஸ் : 23, நைனியப்ப நாய்க்கன் தெரு, மதராஸ்-3.
37, ஹைரோடு, திருநெல்வேலி ஜங்ஷன்.

வீட்டிற்கும் தோட்டத்திற்கும்
வேண்டியமட்டும்
தண்ணீர் எடுக்க
ஒரு

டெமிங் "மார்வெல்"

வாட்டர் ஸிஸ்டம்

அமைத்துவிடுங்கள்.



இந்த பம்பு செட்டுகளை தற்போது உங்கள் வீட்டிலுள்ள கிணற்றிலும் அல்லது குழாயக் கிணற்றிலும் சுலபமாய் அமைக்கலாம். நீளமான குழாய் மாட்டுவது, உயரத்தில் டாங்கிகள் கட்டுவது முதலியவை தேவையில்லை. அவை முழுவதும் தானாகவே (ஆட்டோமாட்டிக்) வேலை செய்வதுடன் வருஷக் கணக்கில் திருப்திகரமாக சேவை புரியும்



குழாயைத் திறந்தால் தண்ணீர் கிடைக்கும்

டெமிங் "மார்வெல்" வாட்டர் ஸிஸ்டம்

விசாரிக்குமிடம் :

ஈசன் இன்ஜினீயரிங் கம்பெனி லிட்.,

5-7, ஸெகண்ட் லைன் பீச், மதருஸ்-1.

மீறிச் சென்றால் ஆபத்துக்குள்ளாகின்றனர். இதற்காக நாம் என்ன செய்யமுடியும்? பலவீனமான பெண்கள் பாதுகாப்புடன் வெளியில் செல்லவேண்டும். பலமுள்ளவர்களைப்பற்றிக்கவலை இல்லை'' என்று பேசிக்கொண்டே போனார். எனக்கு என்ன செய்வதென்றே தோன்றவில்லை. அவர் பேச்சுக்களில் குறும்பும் உண்மையும் ஒன்று சேர்ந்திருந்தன. அவர் என் வகுப்பில் படிக்கும் மாணவர் தான். பரமசாதுபோல் இருப்பார்; இப்படி பேசுவார் என்று நான் நம்பவேயில்லை. பெண்களுக்கு ஆண்கள் உரிமை தருவதில்லை என்பதற்கு நான் எடுத்துக்காட்டிய ஆதாரங்கள் எல்லாவற்றையும் உடைத்தெறிந்தார். பெண்கள் தான் ஆண்களுக்கு உரிமை தர மறுக்கின்றனர் என்பதையும் எடுத்து விளக்கினார். அவர் விளக்கம் சரி என்று என் மனமே ஏற்றுக்கொண்டதென்றால் மற்றவர்களைப் பற்றிக்கேட்கவும்வேண்டுமா? நள்ளிரவில் அரசிழந்து அடர்ந்த காட்டடைந்த அரசன் நிலையை அடைந்தேன். நான் தான் நன்றி கூறவேண்டும். என்றால் எழுந்திருக்கவே முடியவில்லை. என் பணியை மீனுவுக்கு அளித்தேன். விழா முடிந்து வீடடைந்தேன்.

மணிவண்ணன்

நான் என் கல்லூரி வாழ்வில் பலரிடம் பழகுகிறேன். பல பெண்கள் என்னிடம் நெருங்கிப் பழகியதுண்டு; பாடங்களில் உள்ள சந்தேகங்களைத் தீர்த்துக்கொள்ள வருவர். சிலர்சினிமாவுக்குஅழைக்க வருவர் சிலர். கடற் காற்று வாங்க அழைக்க வருவர் சிலர். இவர்களுடைய சிரிப்பும்,பேச்சும், நடையும், எழிலும் என்னை மயக்கியதில்லை. ஆனால் அந்த மரகதவல்லியின் எழிலில், பண்பில் என் மனம் ஏன் இப்படி ஒன்றி விட்டது? எத்தனை முறைசிந்தித்து பார்த்தாலும்எனக்குப் புரியவேயில்லை. அவளிடம் நான் நெருங்கியதில்லை; ஒரு நாள் கூட பேசியதில்லை.என்றாலும் அந்த எழிலரசி மற்றவர்கள்பெறமுடியாத

புதுமையின் பொலிவு

மாரிமுத்து

—o—

கூவெனக் குயில்கள் கூவக்,
குளிரிளம் சோலை தன்னில்
வாவெனத் தலைகள் ஆட்டித்
தேமலர் வரவு கூறப்
போவெனத் தள்ளும் அன்புப்
பொதிகையின் தென்றல் வந்து
மேவிய போது உற்றப்
புதுமையை என்ன வென்பேன்?

என் உள்ளத்தில் எப்படி இடம் பெற்றுள்? இதைஎன்ன வென்பது? காதலா? அல்லது பாசமா? காதல் என்றால் அவள் என்னை ஒருமுறை கூட கனிவோடு கண்களால் நோக்கியது கிடையாதே! காதல் என்றால் இருவர் மனமும் ஒருமைபட வேண்டாமா? நான் அவளிடம் பேச வேண்டி செய்த ஏற்பாடுகள் எல்லாம் பயனற்ற தாக்கி விட்டாளே.குனிந்த தலையை நிமிராத அந்தக் கோமளவல்லி யிடம் கொஞ்சு மொழி பேசுவது எப்படி? என்ற ஏக்கம் என் பிடர் பிடித்து உலுக்கியது.

ஒருநாள், ஆம்! அது கல்லூரி ஆண்டுவிழா. அன்று அவள் பேசினாள்; நானும்பேசினேன். நான் பேசுவதற்குமுன் மலர்ச்சியுடன் இருந்த அவள் முகம் நான் பேசிய பிறகு வாடி விட்டதே! இந்த வாட்டத்திற்குக் காரணம் என் பேச்சாகத் தான் இருக்கும் என்று எண்ணினேன்—இரவெல்லாம் தூங்கவில்லை· அவள் வருத்தத்திற்குக் காரணம் என் பேச்சாக இருந்தால் மன்னிக்க வேண்டுமாய் கேட்டுக் கொண்டு ஒரு கடிதம் எழுதினேன். அதற்கு அவள் எழுதிய பதில்:—

நண்பரே!

இருளை ஓட்டவும் ஒளியை உண்டாக்கவும் ஏற்றி வைப்பது விளக்கு. அது சுடர் விட்டு எரியும்போது சில விட்டில் பூச்சிகள் சுடரை நோக்கி ஓடி வந்து வீழ்ந்து மடியும் பழம் என்று நம்பிய காரணத்தால், விட்டில் பூச்சைக்கொல்லவும், இருளை ஓட்டவும் ஆற்றல் படைத்த ஒளி விளக்கில் இடையிடையே சிட்டங்கள் சேர்ந்து ஒளியை மங்கும் படி செய்யும். அந்தச் சிட்டத்தை தூண்டுகோல் மூலம் தட்டிவிட்டு, மங்கிய ஒளியைப் போக்கி பிரகாசிக்கச் செய்வர் விளக்கின் அருமையும், தேவையும் தெரிந்தோர். இது தங்களுக்கும் தெரியும். ஆனால் நான் நம் கல்லூரியில் ஏற்றி வைக்கப்பட்ட திருவிளக்கு என்று எண்ணிக் கொண்டிருந்தேன். விட்டில் பூச்சிகள் போல பலர் வந்ததுண்டு. ஆனால் தாங்கள், நான் ஆணவத்திடம் அடிமைபட்டு, மமதையிடம் மண்டியிட்டுக் கொண்டு இருந்த போது, விளக்கின் சிட்டங்களைத்தட்டி விட்டு ஒளியை உண்டாக்க வந்தவர் போல வந்து சொல்லாற்றல் மூலம் என்னை ஆணவத்திடம் இருந்து மீட்டினீர்; மமதையிடம் இருந்து காப்பாற்றினீர்; அறிவொளியை அதிகமாக்கினீர். இதை உணர்ந்த காரணத்தால் வருந்தினேன். இதுதான் என் வருத்தத்திற்குக் காரணம். உண்மை இப்படி இருக்க தாங்கள் என்னிடம் மன்னிப்புக் கோரி எழுதி இருந்தீர்.இப்போது யார் எவரிடம் மன்னிப்புக் கேட்கவேண்டும் என்பது விளங்கிவிடும். ஆகவே நான்

உங்களை மன்னிக்க வேண்டியவள் அல்ல; வாழ்நாள் உள்ளளவும் மறவாதிருக்கவேண்டியவள்.

அன்புள்ள,
மரகதம்.

இக்கடிதத்தின் கடைசி அடி "வாழ்நாள் உள்ளளவும் மறவாதிருக்க வேண்டியவள்" இதன் கருத்து என்ன என்று என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. பலமுறை படித்தேன். இரவெல்லாம் உறக்கம் வரவில்லை. எத்தனையோ இன்பக் கனவுகள்.

மறுநாள் கல்லூரி மண்டபத்தில் காத்திருந்தேன். பச்சை பட்டுடை உடுத்து மரகதக் கொடி போல்வந்தாள். என்றுமே உயர்த்தாத தன் தலையை உயர்த்தி விழி அம்புகளை என் மீது ஒரு முறை பாய்ச்சிவிட்டு, மோகன முறுவல் ஒன்றையும் எனக்கு அளித்து விட்டு வகுப்புக்குள் நுழைந்தாள். மரகதவல்லியின் விழி அம்புகளால் தாக்குண்ட நான் செய்வதொன்றும் தெரியாது தியங்கினேன்; மயங்கினேன்; என் நினைவையே இழந்தேன். கல்லூரி ஆரம்ப அறிவிப்பு மணியொலி என் நினைவைக் கலைத்து வகுப்புக்குள் நுழையச் செய்தது.

அன்றெல்லாம் எனக்கு படிப்பின் மீது மனம் செல்ல வில்லை. அவளை இன்று எப்படி யாவது கண்டு பேசியே ஆகவேண்டும் என்று என் மனம் துடி துடித்தது. என்மனம்எத்தனையோகேள்விகளை எழுப்பியது. மனம் ஒரு குரங்கு தானே! அது ஒரு வினடியும் ஓய்வு கொள்ளாமல் எதையாகிலும் செய்து கொண்டு தானே இருக்கும்? இப்போதுஎன் மனக்குரங்கு மரகதவல்லியிடம் தாவி குதிக்க ஆரம்பித்து விட்டது.

மாலைநேரம்; மனதிலே அமைதியில்லை. கடற் கரையை நோககி நடந்தேன். எவ்வளவோ மறக்க முயன்றும் என் மனக்கண்ணில் மரகத வல்லியின் முகம் தோன்றித்தோன்றி மறைகிறது. மணற்பரப்பில் உட்கார்ந்தேன். மரகதம் என்னை ஏற்றுக்கொள்வாளா? என்று எண்ணியவாறு கடலை நோக்கினேன். கடலும் ஆகாயமும் ஒன்றை ஒன்று தழுவிக்கொண்டிருந்த காட்சியைக் கண்டேன். என் சிந்தனை அதிலேயே பதிந்திருந்தது. அப்போது என் தோளையாரோ பற்றிஅழுத்துவது உணர்ந்தேன்; நினைவு கலைந்தது. என் பக்கத்தில் உட்கார்ந்திருந்தான் என் ஆருயிர் நண்பன் அருளப்பன். "என்ன, யோசனை

அன்புடையீர்,

வணக்கம்

"புதுமை" மீண்டும் பொலிவுறுவது தெரிந்து மகிழ்ச்சி அடைகிறேன். வளர்ந்துவரும் தமிழ் இலக்கியத்துக்குத் தங்கள் பத்திரிகை நல்லுரம் ஊட்ட வேண்டுமென்று வாழ்த்துகிறேன்.

அன்பன்,
கி. வா. ஜகந்நாதன்.

பலமாயிருக்கிறதே'' என்றான். நான் "நண்பா! அதோ பார் க்கடல் காதலன் ஆகாயப் பெண்ணின் கன்னத்தில் முத்தமிடுகிறான். அந்த இன்ப உணர்ச்சியால் ஆகாயப் பெண்ணின் முகம் எப்படி சிவந்து வருகிறது'' என்றேன். "சபாஷ் நண்பா! உன்னிடம் இவ்வளவு கற்பனைச் சக்தி இருக்கும் என்று நான் நினைக்கவே இல்லை'' என்றான். "கற்பனை என்பது ஆகாயத்தில் இருந்து கீழே இறங்கி வரும் அற்புதப் பொருளல்ல; எல்லோரும் கற்பனை செய்யமுடியும் கற்பனை செய்ய அவன் பட்டம் பெற்றவனாக இருக்க வேண்டிய அவசியமில்லை. சிந்தனைகள் நமக்குத் தோன்றும் போது—நல்ல எண்ணங்கள் நமது கருத்தில் சுரக்கும்போது அலட்சியமாக இருந்து விடுகின்றோம். புதிய அனுபவங்கள் தோன்றும் போதும் அதனை உடனே மறந்து விடுகின்றோம். ஆனால், ஒரு சிலர் தங்கள் அனுபவங்களையும், சிந்தனைகளையும், புதுமை எண்ணங்களையும் தங்கள் உணர்வோடு கலந்து நல்ல வார்த்தைகள் மூலம் கவியாகவும்,காவியங்களாகவும், கதைகளாகவும் தீட்டி விடுகிறார்கள். அதனால் அவர்கள் சிந்தனையாளர்கள்—அறிஞர்கள் – கலைஞர்கள் என்ற பட்டம் பெறுகின்றனர்.

நாம் நமது எண்ணங்களை மதிப்பதில்லை ஏன்?'நான்ஒருசாதாரண மாணவன்' என்று நம்மைப்பற்றி நாமே குறைத்து மதிப்புப்போடும் ஒரு சூழ்நிலையில் இருக்கிறோம். இந்த நிலைமை மாறவேண்டும்', என்று சொன்னேன். அவன் வியப்புடன் கேட்டுக்கொண்டிருந்தான். எனக்கும் அதற்கு மேல் பேச ஓடவில்லை. என் நண்பன் அருளப்பன் என்னைப்போல் ஏழை அல்ல; பணக்காரன்; நல்ல குணக்காரன். அவனிடம் என் காதலைப்பற்றி சொல்லவேண்டும் என்ற ஆசை ஏற்பட்டது. நான் அவனிடம் எதையும் ஒளித்ததே கிடையாது. எனவே நான் ஒருத்தியை காதலிக்கிறேன்'' என்றேன். "உனக்குக் காதலிக்கக் கூடத் தெரியுமா ?'' என்றான். ஆம்! இப்போதுதான் நான் காதலிக்கும் தகுதியுடையவள் கிடைத்தாள் என்றேன். "அப்படியென்றால் அவளுக்காகத் தான் காத்திருக்கிறாயா ? நான் இருப்பது தவறுதான்'' என்று கூறிக்கொண்டே எழுந்தான். நான் தடுத்து அவளிடம் ஒரு முறைகூட பேசியதே இல்லை! என்றேன் பேசியதே இல்லையா என்று வியப்புடன் கேட்டு கொண்டே உட்கார்ந்தான்.

"பேசவில்லை; ஆனால் காதலித்துவிட்டாய் அப்படித்தானே'' என்றான்.

"ஆமாம்'' என்றேன்.

"நன்றாக இருக்கிறது உன் கூற்று வயிரார உண்டேன்; ஆனால் பசி இருந்தபடியே இருக்கிறது. என் கண்களுக்குப் பார்வை உண்டு; ஆனால் எதிரில் உள்ள எதுவும் தெரியவில்லை என்பதுபோல் இல்லை நீ கூறுவது ?'' என்றான்.

"இந்தக் கடிதத்தைப் பார்! இந்தக் கடைசீயடி'' என்று கடிதத்தைக் காட்டினேன். "வாழ் நாள் உள்ளளவும் மறவாதிருக்க வேண்டியவள்'' என்று இருக்கிறது அதைக்கண்டு நீ மயங்கி விட்டாய் போலிருக்கிறது'' என்றான்.

"அப்படி யென்றால் அவள் என்னைக் காதலிக்கவில்லை யென்கிறாயா? இன்று என்னை அன்போடு பார்த்தாள். ஆசையோடு புன்முறுவல் பூத்தாள். அதற்கெல்லாம் என்ன பொருள்?'' என்றேன்.

"அவள் உன்னைக் காதலித்தாள் என்பதற்கு என்ன அடையாளம் வைத்திருக்கிறாய்? காற்று வயல் வெளிகளிலும் வீசுகின்றது; மலர்ச் சோலையிலும் வீசுகின்றது; ஆனால் மக்கள் வயலில் வீசும் காற்றையா விரும்புகின்றனர்? இல்லை மலர்ச்சோலையில் வீசும் காற்றை விரும்புகின்றனர். ஏன்? அங்கு மணங்கலந்த தென்றல் வீசும் என்று. அதுபோல உன் காதல், வயலிலே வீசிய காற்றாக இல்லாமல், மலர்ச்சோலையிலே வீசும் காற்றாக இருக்க வேண்டும் என்பதுதான் என் ஆசை! ஆகவே நீ அவளை சந்தித்து உன் காதலைத் தெரிவித்து, அவள் மன நிலையை அறிந்துகொள். பின்னர் மற்றவைகளை ஆராய்வோம். நான் போகவேண்டும்; நாளைக்குச் சந்திக்கிறேன். என்று கூறிவிட்டுச் சென்றான். அருளப்பன் சொன்னவைஅனைத்தும் உண்மை. அவளது விருப்பம் என்னவென்று அறியாமலே எதையும் தீர்மானிக்கக் கூடாது தான், என்று எண்ணமிட்டுக் கொண்டே திரும்பி உட்கார்ந்தேன். என்ன ஆச்சரியம்! என் கண்களை நான் நம்பமுடியவில்லை. மிகவும் ஊன்றி கவனித்தேன். ஆம்! அவள்தான் என் உள்ளத்தில் ஒளிவிட்டுப் பிரகாசிக்கும் உருவம்தான். தனியாக வந்திருந்தாள். கண்ணிமைக்காமல் பார்த்துக் கொண்டேயிருந்தேன். இந்தச் சமயத்தைப்போல நல்ல சமயம் வாய்க்காது எனவே துணிந்து அவளை நோக்கி நடந்தேன். மாலை வணக்கம்கூறியபடி அவள் அருகில் உட்கார்ந்தேன்.

அடுத்த இதழில் முடியும்.

தேன் துளிகள்

உலகம் ஓர் உருண்டை அதை உருட்டிவிட்டப் பக்கம் அது உருளும். அதே சமயத்தில் அதற்கு இஷ்டப்பட்ட பக்கமும் அது உருளும். — ஸ்டாலின்

ஒரு மனிதன் இறந்த பிறகுதான் அவனுக்கும் உலகத்திற்கும் நல்ல வகையிலோ கெட்ட வகையிலோ தொடர்பு ஏற்படுகிறது. —காந்தி.

இயற்கையும் வாழ்வும்

1. எழிலும் ஒளியும் இழைந்து வானில்
எழுச்சி யூட்டுது
பொழியும் நிலவில் உள்ளம் தோய்ந்து.
புதுமை கொள்ளுது

2. கடலினோரக் காவில் தென்றல்
கனிந்து பாயுது
மடல் விரிந்து மலர் குலுங்கி
மகிழ்ச்சி யூட்டுது.

3. அலகின் சேர்க்கை விலகா ஜோடி
ஆனந்தப் பறவை
உலகை மறந்து இன்ப லயத்தில்
உவகை கொள்ளுது.

4. வாழ்வும் வாக்கும் இணைந் துயிர்த்து
வளமை யூட்டாவோ
தாழ்வு நீக்கி தகைமை சேர்த்து
தரணி உய்யவே !

—சுவாமி ஆ. ஜோ. அடைக்கலம்.

எங்கள் 40 குச்சி கோபுரம் மார்க், சிம்கோ லைட் மார்க், சிம்கோ சைகில் மார்க், மைனர்சைஸ் சீனு லேடி மார்க் 60 வேட்டை சிங்கம் மார்க் தீப்பெட்டிகள்.



கடற்கரை குளிர்ப் பிரதேசங்களுக்கும், மற்றும் மலபார் மலைக்கும் உகந்தது.

★

சிறந்த விதமான சரக்கு உற்பத்தி !

★

சிறப்பான பொதுஜன ஆதரவு !

தினம் குடிசைத் தொழிலாகத் தயாராகும் 3300 குரோஸ்கள் தீப்பெட்டிகளும் எங்களுடைய டெப்போக்களிலேயே செலவாகின்றன.

சிம்கோ :: :: சிவகாசி S. I.

போன் : 63 — தந்தி : *SIMCO*

வியாபாரிகளுக்கும், வாடிக்கைக்காரர்களுக்கும்
மற்றும் ஆதரவாளர்களுக்கும் எங்களது
சுதந்திர எழுச்சி நூற்றுண்டு விழா
வாழ்த்துக்கள்

சண்முகம் டிரான்ஸ்போர்ட்
பஸ் & லாரி சர்வீஸ்

அருப்புக்கோட்டை

போன்: 203 தந்தி: "TRANSPORT"

எங்களுடைய லாரிகள் கீழ்க்கண்ட ஊர்களுக்கு தினசரி போய் வந்து கொண்டிருக்கின்றன.



1. அருப்புக்கோட்டை To ராஜபாளையம்
2. அருப்புக்கோட்டை To தூத்துக்குடி
3. விருதுநகர் To பெருநாழி
4. விருதுநகர் To கடலாடி (Via) முதுகுளத்தூர்
5. மதுரை To சாயல்குடி
6. மதுரை To அருப்புக்கோட்டை

பொதுஜனங்களும் வியாபாரிகளும் எங்களை ஆதரிக்கும்படி பணிவுடன் கேட்டுக் கொள்கிறோம்.

போன்: 512 - பிராஞ்சு: மதுரை - தந்தி: "TRANSPORT"

விமர்சனம்

புதுமைப் பித்தன்

புதுமையும் பித்தமும் கலந்த பெயர். இந்த ஒரு பெயரிலே, இரட்டை உருவங்கள் பிரதிபலிக்கின்றன. ஒன்று—எழுத்தாளர் புதுமைப்பித்தன். அவர் அமரராகி விட்டார் அல்லது தமிழகம் அவருக்கு 'அமரத்வம்' அளித்து விட்டது. அவர் அமரராகி விட்டதுபோலவே அவருடைய எழுத்துக்களும் அமரத்வம் பெற்று விட்டன. "எப்படியோ ஒரு நல்ல சிறுகதை ஆசிரியர் என்று 'சிலரிடத்தில்' பெயரெடுத்தவர் புதுமைப் பித்தன்'' என்கிறார் கவிஞர் ஒருவர்—கவிஞர் என்றால் 'அந்தக் கவிஞர்'—காரை முத்துப் புலவர். அவருடைய வாசகத்தில் 'எப்படியோ' என்ற சொல்லடுக்கை நீக்கி, 'சிலரிடத்தில் என்பதற்குப் பதிலாக 'பலரிடத்தில்' என்று அமைத்து விட்டால், நம் கருத்துக்கு அவர் வந்த மாதிரிதான்! புதுமைப் பித்தனை நிரந்தரமாக வாழவைத்துக் கொண்டிருப்பவை அன்னாரது எழுத்துக்கள்தாம்; என்றாலும், அவருடைய நினைவுக்கு ஒரு சின்னம் ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார்கள் சிவகாமி பிக்சர்ஸார்-நம் பாராட்டுக்களை இப்பொழுதே தெரிவித்தால்தான் நல்லது.

தமிழ்ப்பட உலகிலே ஒரு கெட்ட பழக்கம் நிலவி வருகிறது. இந்தக் கெட்ட பழக்கத்தற்குப் புண்ணியம் சேர்த்துக் கொள்ளுபவர்கள் மடாதிபதிகள் மட்டுமல்ல; எழுத்தாளர்களும்கூடத்தான்! அந்தக் கெட்ட பழக்கம் என்ன தெரியுமா?—'அம்மையப்பன்'; 'சுகம் எங்கே?' என்ற இரண்டு பெயர்களும் நினைவுக்குக் கொண்டு வாருங்கள். இவ்விரண்டு படங்களுக்கும் இடையில் அப்பாவி ஆங்கில எழுத்தாளர் ஒருவர் ஊசலாடிக் கொண்டிருக்கின்ற மரண வேதனையின் குரலைக் கேட்க முடிகின்றதல்லவா?—இது பழங்கதை!

இனி, புதிய கதைக்கு வருவோம். இன்னொரு மேல் நாட்டு ஆசிரியர். அவர்தான் தமிழ் நாட்டில் சென்ற ஆண்டு உலாவி வந்தார்; இப்பொழுது மறுபடியும் பவனி வரத் தொடங்கியுள்ளார். இதிலும் ஓர் அதிசயம் என்னவென்றால், அவரைத் தமிழ்த் திரையுலகம்

வலம்புரி பிக்சர்சாரின் 'திருமணத்தில்' ஆர். கணேசன், சாவித்திரி.

மறந்து விட்டது. மாயாலோகம் அல்லவா? அதனுல்தான், அன்று நாம் 'மர்மவீரனை'ச் சந்தித்தோம். இன்று 'புதுமைப் பித்தனை'க் காண்கிரேம்.

தமிழ் எழுத்தாளர் ஒருவர்; அவர் கலைஞர்; அத்துடன் இந்நாளையச் சட்டசபையின் பரபரப்புக்குக் காரணமான ஒரு சிலருள் ஒருவர். அவர்தான் இவர்!—'புதுமைப் பித்தன்'—திரைக்கதை வசனம்: கலைஞர் மு. கருணநிதி என்னும் விளம்பரத்துடன் அழகிகளும் புன்னகை பூக்கின்றனர்... சுவரொட்டிகளிலே!

'மர்ம வீரன்' கதையை நினைத்துக் கொள்ள வேண்டும். அங்கங்கு ஒன்றிரண்டு மாற்றங்களையும் செய்து கற்பனை செய்து பார்த்தால் இந்தப் புதுமைப் பித்தனின் பழைய உருவம் கிடைத்து விடும். 'மார்க் ஆப் ஸோரா' கதைக்கு நம் வாழ்த்து!

மணிபுரி வேந்தன்; அவனுக்கு ஒரு தம்பி. தமையனைப் பாதாளச் சிறையில் பூட்டி வைத்து விட்டு, மாமன்னனை வேங்கை அடித்துக் கொன்று விட்டதாகக் 'கதை' கட்டும் பொறுப்பு அருமைத் தம்பிக்கு உரியது. பேரரசனின் மகன் ஒருவன். அவன் தன் சித்தப்பாவின் நரித்தந்திரத்தை அறிகிருன். 'ஸ்டண்ட்' செய்கிருன்; இடையே 'காதலும்' புரிகிருன். 'வணக்கம்' சொல்லப்படுவதற்குக் கொஞ்ச நேரத்திற்கு முன்பு மன்னன் காப்பாற்றப் படுகிருன்; அநீதி இழைத்தவன் தண்டிக்கப் படுகிருன்; காதலித்த நாடகக்காரி காதலுடன் உயிரையும் சேர்த்துக் காணிக்கை வைக்கிருள். காதல் விளையாட்டுக்கு இன்னெரு தோழியும் உண்டு. அவள்தான் அவனைக் கரம் பற்றுகிருள். 'உள்ளம் ரெண்டும் ஒன்று...நம் உருவம் தானே ரெண்டு!' என்று பாட்டுப் பாடி வானுலகில் சஞ்சரிக்கிருர்கள்-சற்று பொறுங்கள்! அவர்கள் இருவரும் பூலோகத்திற்குத் தனியே வந்து விடுகிருர்கள்!

புரட்சி நடிகர் திரு. எம். ஜி. ராமச்சந்திரனை நாம் பூரணமாக கேட்க முடியவில்லை; பார்க்க முடிகிறது. நடிப்பிற்குத்தான் இப்படத்தில் முக்கியத்துவம் தரப்பட்டுள்ளது. பிரபல நடிகர்களிலே பெண் வேஷம் புனையாமல் இவர் ஒருவர்தான் எஞ்சி நின்ருர். பாவம், இவருக்கும் 'பௌடர்' போட்டு விட்டார்கள் கதாசிரியரும் டைரக்டரும்! காதல் உதயமாகும் போதும், உதயமான காதல் புயல்வசப்பட்ட தருணத்திலும் எம். ஜி. ஆர். 'உணர்ந்து' தன் பாகத்தைச் செய்திருக்கிருர்.

திருமதி டி. ஆர். ராஜகுமாரி தோன்றும் கட்டங்கள் அதிகமில்லை; என்ருலும், அவர் முகம் திரையில் தோன்றும்போதுதான் அழகின் அற்புதம் நிழலாடுகிறது; காதல் போதையில் பேதம காணப்படுகிறது; ஆட்டம் பாட்டுப்பாடுகிறது; உரிய வயதையும் மறைத்து வைத்து 'மேக்கப்' கலை வெற்றிக் கொடி நாட்டுகிறது......, ..இன்பவல்லியல்லவா? ராஜகுமாரியின் குரலில் ஒரு பாட்டையாவது ரசிகர்கள் கேட்கும்படி செய்திருக்க வேண்டாமா?

திருமதி பி. எஸ். சரோஜாவுக்கு வேலைகள் அதிகம்; உழைப்பில் பழுதில்லை. காதல் பறிபோகும் நிலைக்கு உள்ளான சமயத்தில் அவரின் நடிப்பு சிறப்பாக உள்ளது.

'சந்திரபாபு ஸீசன்' இது. ஆகவே, பொதுமக்களை அவர் ஏமாற்றமாட்டார்; வேண்டிய அளவுக்குச் சிரிப்பு வருகிறது. ஒன்றிரண்டு 'போஸ்' அதிகம்தான்! குமாரி இ. வி. சரோஜா இல்லையென்ருல், 'டப்பா' பாட்டுக்கு வாய்ப்பில்லை; அழகு நடனத்திற்கு வேலை மிச்சம். வளர்ந்து வரும் நடிகையிடம் பொதுமக்களுக்கு

'பக்தி' உண்டு. கச்சிதமாக நிறைவேற்றியிருக்கிறார்—டைரக்டரின் உத்திரவுப்படி!

'மர்ம வீரனி'ல் திரு. பாலையாவும் நடித்தார். புதுமைப் பித்தனிலும் நடித்திருக்கிறார். புதுப்படத்தில் இவரது நடிப்பு அதிகமாகச் சோபிக்கிறது. பேச்சு, சைகைகள், முகக் குறிப்புக்கள், அலாதியான வேஷம் இவையனைத்தும் திரு. டி. எஸ். பாலையா அவர்களின் பழம்பெரும் பெயரைக் காத்துக் கொடுக்கின்றன. அன்றிலிருந்து இன்று வரை மங்காத நட்சத்திரம் அல்லவா?

திருவாளர்கள் இ. ஆர். சகாதேவன், ஆர். பாலசுப்ரமணியம், பி. எஸ். வெங்கடாசலம், ஸி. வி. வி. பந்துலு, சி. எஸ். பாண்டியன், திருமதி அங்கமுத்து ஆகியோரும் வருகிறார்கள்.

பத்திரிகை ஒன்று செய்தி சொன்னது: மு. க. எழுதிய படத்தில் தணிக்கைக் குழுவினருக்கு வேலை வைக்காத படம் இது என்பதுவே மேற்படி செய்தி. ரசிக்கத்தக்க முறையிலே இலக்கியச் சுவையையும் மறந்து விடாமல் வசனங்களை எழுதியிருக்கிறார். அன்புக் கடவுளுக்கும் அருமைத்தாயகத்திற்கும் இம்முறையாவது இவரது பேனாவிலிருக்து விடுதலை கிடைத்ததே—பாராட்டத்தான் வேண்டும்! யாரைத் தெரியுமா?...டைரக்டர் ராமண்ணாவை! ஆனால், 'குமாய்க்கும்'...'டபாய்க்கும்' பாடல்களைத் 'தள்ள' ஏனோ பின் வாங்கிவிட்டிருக்கிறார்!...பாடல்கள்: தஞ்சை ராமையதாஸ். சிதம்பரம் ஜெயராமன்—ஜிக்கி பாடிய 'உள்ளம் ரெண்டும் ஒன்று—நம் உருவம் தானே ரெண்டு!' என்ற பாட்டு காதுக்கும் கருத்துக்கும் இனிமை தருகிறது.

'கூண்டுக்கிளி' படம் ஓடவில்லை; நடந்தது—அந்தக் காலத்தில்! ஆனாலும், டைரக்ஷன் திறமையை, அந்தப் படத்தின் திறமையை அந்தப் படத்தில் பலர் பாராட்டினார்கள். அதற்கு டைரெக்டர் திரு. ராமண்ணா. அவரது பெயரை பிரபல மடையச் செய்த புண்ணியம் 'குலேபகாவலிக்'குச் சொந்தம். ராஜா ராணிக் கதை என்றாலே ஜனங்கள் எதிர்பார்க்கும் சதி-கொலை - சாகஸம் - சண்டை போன்ற சம்பவங்கள் தாம் படத்திலும் காட்டப் படுகின்றன. விறுவிறுப்பில்லாத ஒரு கதையை அதாவது, பழகிப்போன கதையை வைத்துக் கொண்டு, படம்பார்ப்பவர்களுக்குச் சலிப்பு ஏற்படாத முறையிலே, 'புதுமைப் பித்தனை'த் திரைக்கு அறிமுகப் படுத்தியுள்ளார் ராமண்ணா. ஜீவகனும் வேல் விழியும் சந்தித்துப் பிரியும் போது, உள்ளம் ஒன்றாகி-உருவங்கள் பிரிந்து வானுலகில் சுழலும் உலக உருண்டையில் நின்று கொண்டு பவனி வந்து ஆடும் ஒரு கட்டம் போதும். டைரக்ஷன் திறமைக்கு உதாரணம் சொல்ல 'புதுமைப் பித்தன்' நூறுவது நாள் விழாவில் கலந்து கொள்வானா? அது ஆண்டவனுக்கு—அல்ல, ஸ்ரீமான் பொது ஜனம் அவர்களுக்குத்தான் வெளிச்சம்!

'**பதிபக்தி**'யில் ஒரு காட்சி

சுவர்க்கம் எங்கே?

தொ.மு. பாஸ்கரத் தொண்டைமான்

சிவபிரான் உறையும் கைலாயமே சுவர்க்கம் என்கிருர்கள் சைவர். இல்லை எங்கள் திருமால் இருக்கிருரே, வைகுண்டம் அதுதான் சுவர்க்கமும் அதுதான் மோக்ஷம் என்கிருர்கள் வைணவர்கள் இவர்கள் சைவ வைஷ்ணவச் சண்டை எப்படியேனும் போகட்டும், எல்லாம் வல்ல இறைவன் இருக்கும் இடமே சுவர்க்கம்; அங்கு இருப்பவர் எல்லோரும் எப்போதும் இன்பத்திலேயே திளைத்துக் கொண்டிருப்பார்கள்: துன்பம் என்பதே அச்சுவர்க்க வாசிகளுக்குத் தெரியாது என்றெல்லாம் வியாக்கியானம் செய்வார் ஒரு சர்வ சமய சமரஸவாதி. இம்மண்ணுலகிலே நல்ல காரியங்களைச் செய்து புண்ணியம் சம்பாதிப்பவர்தாம் சுவர்க்கம் செல்வர்; மற்றவர் எல்லோரும் நரகத்துக்கே செல்வர் என்பார் நீதி நெறிப் பிரசாரகர். இறைவன் இருக்கும்இடம்தான் சுவர்க்கம் என்று சொல்லும் இவர்களை எல்லாம் மடக்க ஒரே ஒரு கேள்வி ''இறைவன் இல்லாத இடம் எங்கேயோ?'' என்று மட்டும் கேட்டால் போதும், திணறி விடுவார்கள் திணறி.

காதலருடைய களிப்புறு [முகத்திலும்
மாதர்களுடைய மயக்குறு [வனப்பிலும்
தாய்தனை அணைந்திடும் [சேயின் சிரிப்பிலும்
பரிவோடு தழுவிடும் பண் [புடை உளத்திலும்
மலரின் மணத்திலும், [வயலின் வளத்திலும்
சுவர்க்கம் இருக்கையில் [சுற்றித் திரிவதேன்

என்று ஜேம்ஸ் ஸெட் என்ற ஆங்கிலப் புலவர் பாடி வைத்தார். இவர் சொல்வதிலும் உண்மை இருக்கத்தானே செய்கிறது. நமக்கு இறைவன் இருக்கும் இடமே சுவர்க்கம், அவன் இல்லாஇடமோ இல்லை. ஆதலால் எல்லா இடமுமே சுவர்க்கம்தான் என்று வாதம் புரியலாம். ஆனால், இந்த நில உலகில், நாம் வாழும் சுற்றுச் சார்பை எல்லாம் பார்த்தால் இதை சுவர்க்கம் என்று எண்ணத் தோன்றுமா என்ன?

* * *

ஓமார் கயாம் என்று ஓர் பாரசீகக் கவி சுகவாழ்வே சுவர்க்க வாழ்வு என்று சித்தார்ந்தப் படுத்திக் கொண்டவர் அதைப்பற்றியே பாடியிருக்கிருர் எத்தனை எத்தனையோ பாடல்கள்.

ஒரு நல்ல பூம்பொழில், அங்கே உண்பதற்கு ஒரு சிறு ரொட்டித் துண்டு, கலசத்தில் கொஞ்சம் சுவையுள்ள மது, பக்கத்தில் ஒரு நல்ல கவிதைப் புத்தகம், இன்னும் அக்கவிகளை நன்ருகப் பாடக்கூடிய ஒரு இள மங்கை, இவை இருந்து விட்டால் அவை போதும் ஒரு மனிதனுக்கு, அதுவே பரமபதம் அதுவே மோக்ஷசாம்ராஜ்யம் என்பது அவருடைய தீர்மானம், சுவர்க்கம் மோக்ஷம் எல்லாம் எது என்ற கேள்விக்கு லேசாக விடை சொல்லுகிருர்—இல்லை—சொல்லப்பார்க்கிருர் ஓமார் கயாம். இதை

பூங்கொடிகள் கவிழ் நிழற்கீழ்
புகழ்க்கவிதை நூலொன்றும்
தேங்கமழும் மதுச்சாடி
சிறு ரொட்டியுடன், நீயும்
கோங்கலரும் கடுவனத்தே
குயிலிசையில் பாட்டு
[இசைத்து
பாங்கில் எனைக்கூடுவையேல்
அது அன்ருே பரமபதம்

என்று தம் காதலியைப் பாடிய பாணியிலேயே பாடிவைத்திருக்கிருர் ஒரு தமிழ்ப் புலவர். என்னவோ ஓமார் கயாம் கருத்தை மொழிக்குமொழி மாறுபடாமல் மொழி பெயர்த்து பாட்டை அமைத்து விட்டார் புலவர். ஆனல் இதைவிடக் கொஞ்சம் ரஸமாகவே சொல்ல முடியும் என்று காட்டினுர் இன்னெருவர்.

வெய்யிற் கேற்ற நிழலுண்டு
வீசும் தென்றல் காற்றுண்டு
கையில் கம்பன் கவி உண்டு
கலசம் நிறைய அமுதுண்டு
தெய்வகீதம் பல உண்டு
தெரிந்து பாட நீயும் உண்டு
வையம் தனில் இவ்வனம்
[அன்றி
வாழும் சொர்க்கம் வேறு
[ளதோ?

என்று கேட்கிருர் அவர். அவர் யாருமில்லை நமது கவிமணி, அமரர் தேசிக விநாயகம்பிள்ளை தான். ஆம். கையில் கம்பன் கவி உண்டு, தெய்வ கீதம் பல உண்டு என்று அவர் பாடும் போது, ஓமார் கயாம் பாட்டை மொழி பெயர்க்கிருர் என்ரு தோன்றுகிறது. கவிச் சக்கரவர்த்தி கம்பன் கவிதையிலே தோய்ந்து தோய்ந்து பண்பட்ட அவருடைய உள்ளம், கம்பன் கவியனுபவமே என்று சொல்லாது வேறு என்ன சொல்லும். தெய்வகீதம் பல உண்டு என்று கவிஞர் பாடும்போது நம்மை அது என்ன எல்லாமோ செய்கிறது. தமிழனுக்கு கிடைத்திருக்கும் தேவார திருவாசகங்கள், நாலாயிரத் திவ்யப்பிரபந்தங்கள் எல்லாம் தெய்வம் மணக்கும் செய்யுள்கள் அல்லவா? வேறு எந்த பாஷையில் இப்படி எண்ணிறந்த பக்திப் பாடல்கள் உண்டு. என்றெல்லாம் எண்ணும்போது தான் தெய்வ கீதம் பலவுண்டு என்று சொல்லும் கவிமணியின் பரவச நிலை நமக்குத் தட்டுப்படுகிறது. ஆம் கம்பன் கவியனுபவமும் தெய்வ கீத அனுபவமுமே சுவர்க்கம், அவையே தமிழனுடைய மோக்ஷ சாம்ராஜ்யம் என்று நாமும் அவருடன் சேர்ந்து கூத்தாடவே ஆரம்பித்து விடுகிருேம்.

இப்படி சுவர்க்கம், மோக்ஷம், பரமபதம், என்றெல்லாம் 'அந்த' உலகத்தைபற்றி 'இந்த' உலகத்துக் கவிஞர்களும், கவி மணிகளும், தத்துவ ஞானிகளும், தத்துவ தரிசினிகளும் சொல்லுகிறார்களே, அது சரிதானா? மனிதனுக்கு இன்பம் தருவதுதானே சுவர்க்கம். இங்கேயுள்ள மனிதன் அங்கே சென்றால் அவனுக்கு என்ன என்ன கிடைக்கும். காமதேனுவும் கற்பகத்தருவும் என்ற பழைய பல்லவிதானா? இல்லை அவை எல்லாம் உளுத்த கற்பனைதானே? இந்தக்கேள்விகளை எல்லாம் நாமே நம்மிடம் திரும்பத் திரும்பக் கேட்டுக் கொண்டிருப்பதால் பலன் என்ன? அங்கு போனவர்களோ, இங்கு திரும்பிவரக் காணோம். ஆகவே இதன் முழுவிவரத்தையும் தெரிந்து கொள்ளவும் இயலவில்லை. ஆதலால் இந்த உலகத்தையும் அந்த உலகத்தையும் படைத்தானே அந்தப் பழைய பரமசிவன்—இல்லை—அந்தப் பரமனிடத்திலேயே கேட்போமே! அவனாவது பதில் சொல்கிறானா என்று பார்ப்போமே! என்று நினைத்தார் மற்றொருவர்—மூன்றாவது பேர்வழி.

நல்ல சோலையுண்டு, வயிற்றுக்கு நல்ல சாப்பாடு உண்டு, உண்டால் கிறங்க வைக்கும் சுவை மிகுந்த தேறல் உண்டு. எல்லாவற்றிற்கும் மேலாக மனிதனுக்கு இன்ப வாழ்வின் ஏற்றத்தைக் காட்டும் பெண்ணும் உண்டு இங்கே, என்பதில் யாதொரு ஐயப்பாடும் இல்லை. இவைகளுக்கு எல்லாம் மேலாக கவிமணி சொன்னதுபோல் கம்பன் கவியும் இருக்கத்தான் செய்கிறது. இவ்வளவுதானா இறைவன் ஒருவனும் உண்டு; அவனை வழிபட எண்ணிறந்த கோயில்களும் உண்டு; மனிதனுக்கு துன்பம் வந்தபோதெல்லாம் சென்று வீழ்ந்து, கட்டிப் பிடிக்க அவன் தன் திருவடிகளும் உண்டல்லவா? யானுன்னைச் சிக்கெனப் பிடித்தேன் எங்கெழுந்தருளுவது இனியேஎன்றெல்லாம் வாதாட அவனுக்கு வாயும் உண்டு; உரிமையும் உண்டுதானே என்றெல்லாம் எண்ணுகிறார் அவர். இதைவிட வேறு என்ன பிரமாதமான பொருளைத்தான் தந்துவிடப் போகிறார்? அதைச் சொல்லி என்னை அங்கே இழுக்க முடிகிறதா பாருமே, என்று இறைவனுக்கே சவால் விடுகிறார் இவர். சரிதான், ஆசாமி பலே கைகார ஆசாமியாகத்தான் இருப்பான்போல் இருக்கிறது.

தென்றல் தவழும் இந்தச்
[சோலையும் உண்டு
அன்றன்று அருந்துதற்கு
[அன்னமும் உண்டு
தேனிற் சுவை மிகுந்த தேற
[லும் உண்டு
மானின் விழி மயக்கும் மங்கை
[யர் உண்டு
செஞ்சொல் கவி மணக்கும்
[கம்பனும் உண்டு
தஞ்சம் என்றடைய உந்தன்
[தாள்களும் உண்டு
இவ்வுலகில் உள்ள பொருள்
[இத்தனை யானால்
அவ்வுலகில் நீதரும் அரும்
பொருள் யாதோ?

என்பதுதான் அவன் கேள்வி. இந்தக் கேள்விக்குப் பதில் சொல்ல அந்தக் கடவுளால்தான் முடியுமா? 'ஆம்! அப்பா அங்கு இதைவிட விசேஷமாக ஒன்றும் இல்லைதான். சும்மா ஏமாத்திக் கச்சவடம் செய்ய நான் தயாராயில்லை' என்றுதானே அவரும் கையை விரிக்க வேண்டியிருக்கும். கடவுளையே திணற வைக்கிறார். ஆம், திணறத்தான் வைக்கிறார்.

அதுவன்றோ பரமபதம் என்று அறுதியிட்டுக் கூறிவிட்டார் ஒரு தமிழ்ப் புலவர். வாழும் சுவர்க்கம் வேறு யாதோ என்று நம்மை கேட்கிறார் கவிமணி. சரிதானய்யா! நீர் பீற்றிக்கொள்ளும் அவ்வுலகில், இவ்வுலகில் இல்லாத இன்பப் பொருள் என்னய்யா வைத்திருக்கிறீர்? என்று இறைவனது அடிமடியிலேயே கையைப் போடுகிறார் ஒருவர். இவர் யார் என்று தெரிந்து கொள்ள வேண்டியது முக்கியமில்லை; அவசியமும் இல்லைதான். அவரோடு சேர்ந்து நீங்களும் தைரியமாகவே உங்களைப் படைத்த இறைவனிடமே இந்தக் கேள்வியைக் கேளுங்களேன்? அவர்தான் பதில் சொல்கிறாரா இல்லையா என்று பார்த்து விடுவோமே?

எமது பாடப் புத்தகங்களுடன்,

நாவல்கள், நாடகங்கள், இலக்கியங்கள் மற்றும் எல்லாவிதமான பொது புத்தகங்களும் வெளியிட முடிவு செய்துள்ளோம் என்ற நற்செய்தியை அன்பர்களுக்கும், ஆதரவாளர்களுக்கும் சுதந்திர தின வாழ்த்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

கலைவாணி பப்ளிகேஷன்ஸ்,

சென்னை—5.

197685

ஸ்ரீ கஜலக்ஷ்மி பிக்சர்ஸ்

புதுமைப்பெண்

நடிகர்கள் :

S. S. ராஜேந்திரன்
T. S. பாலையா
'இலங்கேஸ்வரன்' மனோகர்
S.V. சுப்பையா V.K. ராமசாமி
C. S. பாண்டியன்
'சட்டாம்பிள்ளை' வெங்கட்ராமன்
லூஸ் ஆறுமுகம்
ராஜசுலோசனா M.N. ராஜம்
ஜயந்தி கமலா S.R. ஜானகி

கதை வசனம்: மதுரை தக்ஷிணாமூர்த்தி
பாடல்கள்: மருதகாசி
சங்கீதம்: T. G. லிங்கப்பா
காமிரா: டெப்பிரி மணி
தயாரிப்பு: N. S. ராஜகோபால் & V. G. N. பிரதர்ஸ்

டைரக்ஷன்:
M. திருவேங்கடம்

ஸ்ரீ கஜலக்ஷ்மி பிக்சர்ஸ்
23/22. லஸ் அவென்யூ சென்னை. 4.

Regd. No. M.

PUTHUMAI

விரைவில் வருகிறது!

மகனுக்காக காலை பலி கொடுத்தாள் – தாய் ......

மக்களுக்காக தன் உயிரையே பலி கொடுத்தான் – தனயன்

மாபெரும் தியாகபரம்பரையின் அமர காவியம் ......

பீப்பிள்ஸ் பிலிம்ஸ்
லட்சியப் படைப்பு

அவன் அமரன்

கதை-வசனம் :
நாகர்கோவில் S. நாகராஜன்

டைரக்ஷன் :
S. பாலசந்தர்

பீப்பிள்ஸ் பிலிம்ஸ்
2 ராஜாச்சார் தெரு • சென்னை-17

PSR